ISSN : 2278-7550

பல்லவி பதிப்பகம்

# ஆய்த எழுத்து

பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

# AYIDHA EZHUTHU

AN INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES - ISSN : 2278 - 7550

அக்டோபர் – 2020



visit us: www.pallavipathippakam.in
https://ayidhaezhuthu.in

# ஆய்த எழுத்து

பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

# AYIDHA EZHUTHU

INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES

**ISSN : 2278-7550**

UGC - பல்கலைக் கழக மானியக் குழுவின் அங்கீகாரம் பெற்றது

**UGC RECOGNISED JOURNAL**

UGC NO : 42330 / IMPACT FACTOR : 4.118

மலர் : 8 அக்டோபர்-2020 இதழ் : 10

**பதிப்பாசிரியர்**

**நல் நடராசன்**

தமிழியல் ஆய்வு மையம், ஈரோடு.

0424-2251545, 94422 51549

97919 51549, 63817 01339

**பல்லவி பதிப்பகம்**

118, மேட்டூர் சாலை,
கல்யாண் சில்க்ஸ் எதிரில்,
ஈரோடு - 638011.

pallavipublications@gmail.com
ayidhaezhuthu@gmail.com

**EDITORIAL BOARD**

**Dr.C.Thiyagarajan**
*Tamil University, Thanjavur.*
mcthiyagu@gmail.com

**Dr.K.Ramesh**
*Thiruvalluvar University, Vellore.*
grameshtu@gmail.com

**Dr.B.Sathiyamoorthy**
*Madurai Kamaraj University, Madurai.*
tamilkanikani@gmail.com

**Dr.P.Jayakrishnan**
*Kerala University, Thiruvanandapuram.*
pjktamil@gmail.com

**Dr.K.Sankaranarayanan**
*Chennai University, Chennai.*
krksankaraatamil@gmail.com

**Dr.Alibhava**
*Bharathidasan University, Trichy.*
alibavapkm@gmail.com

**Dr.S.Aranganathan**
*Tamil Nadu Open University, Chennai.*
arangantnou@gmail.com

**ஆசிரியர் குழு**

**முனைவர் சி.தியாகராசன்**
*தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*
mcthiyagu@gmail.com

**முனைவர் க.இரமேஷ்**
*திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர்.*
grameshtu@gmail.com

**முனைவர் போ.சத்தியமூர்த்தி**
*மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.*
tamilkanikani@gmail.com

**முனைவர் ப.ஜெயகிருஷ்ணன்**
*கேரளா பல்கலைக்கழகம், திருவனந்தபுரம்.*
pjktamil@gmail.com

**முனைவர் கி.சங்கரநாராயணன்**
*சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.*
krksankaraatamil@gmail.com

**முனைவர் உ.அலிபாவா**
*பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி.*
alibavapkm@gmail.com

**முனைவர் சு.அரங்கநாதன்**
*தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்,,சென்னை.*
arangantnou@gmail.com

**Dr.S.Kavitha**
*Tamil University, Thanjavur.*
skavithatamil@gmail.com

**Dr.Manonmanidevi Annamalai**
*Sulthan Itrecue Kalviyal University, Malaysia.*

**Dr.Paramasivam Muthuswamy**
*Malasyia University, Malasyia.*
mparam98@gmail.com

**Dr.S.Kavitha**
*Tamil University, Thanjavoor.*
skavithatamil@gmail.com

**Dr.Manonmanidevi Annamalai**
*Sulthan Itrecue Kalviyal University, Malaysia.*

**Dr.Paramasivam Muthuswamy**
*Malasyia University, Malasyia.*
mparam98@gmail.com

**R.F.Arooz**
*Raapa International Campus, Director, Sri Lanka.*
raapa.arooz@gmail.com

**ADVISORY BOARD**

**M.Senthilkumar**
*Periyar University, Salem.*
senthiltamilnesan@gamil.com

**Dr.V.S.Sreenivasan**
*Nandha Arts and Science College, Erode.*
srivc2345@gmail.com

**Dr.T.K.Anuradha**
*Treenedi Girls College, Namakkal.*
anuradha.pugal@gmail.com

**Dr.P.Senthilkumar**
*Periyar University Constituent Arts and Science College, Dharmapuri.*
Senthakil06@gmail.com

**Dr.R.Vijyarani**
*Beshap Heeper College, Tirucherappalli.*
vejheya.rani@gmail.com

**Dr.R.Nirmala Devi**
*Vellalar Womens College, Erode.*
prnirmaladevi@gmail.com

**முனைவர் ச.கவிதா**
*தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*
skavithatamil@gmail.com

**முனைவர் மனோன்மணிதேவி அண்ணாமலை**
*சுல்தான் இட்ரீசு கல்வியியல் பல்கலைக்கழகம், மலேசியா.*

**முனைவர் பரமசிவம் முத்துசாமி**
*மலேசியா பல்கலைக்கழகம், மலேசியா.*
mparam98@gmail.com

**முனைவர் ச.கவிதா**
*தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*
skavithatamil@gmail.com

**முனைவர் மனோன்மணிதேவி அண்ணாமலை**
*சுல்தான் இட்ரீசு கல்வியியல் பல்கலைக்கழகம், மலேசியா.*

**முனைவர் பரமசிவம் முத்துசாமி**
*மலேசியா பல்கலைக்கழகம், மலேசியா.*
mparam98@gmail.com

**R.F.அரூஸ்**
*ராபா பண்ணாட்டு வளாகம்,*
இயக்குனர், *இலங்கை.*
raapa.arooz@gmail.com

**ஆலோசனை குழு**

**ம.செந்தில்குமரர்**
*பெரியார் கல்கலைக்கழகம், சேலம்.*
senthiltamilnesan@gamil.com

**முனைவர் வெ.ச.சீனிவாசன்**
*நந்தா கலை அறிவியல் கல்லூரி, ஈரோடு.*
srivc2345@gmail.com

**முனைவர் தா.க.அனுராதா**
*டிரினிடி மகளிர் கல்லூரி, நாமக்கல்.*
anuradha.pugal@gmail.com

**முனைவர் பொ.செந்தில்குமரர்**
*பெரியார் பல்கலைக்கழக உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தருமபுரி.*
Senthakil06@gmail.com

**முனைவர் இரா.விஜயராணி**
*பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.*
vejheya.rani@gmail.com

**முனைவர் நிர்மலா தேவி**
*வேளாளர் மகளிர் கல்லூரி, ஈரோடு.*
prnirmaladevi@gmail.com

# படைப்புகள் வரவேற்கப்படுகின்றன...!

**ஆய்த எழுத்து** - தமிழியல் ஆய்வுக்கான ஒரு புதியகளம். இவ்விதழ் 2013 ஆம் ஆண்டு முதல் காலாண்டு இதழாக வெளிவந்தது. 2018 இல் இருந்து மாத இதழாக வெளிவருகிறது. பேராசிரியர்கள், அறிஞர்கள், ஆய்வாளர்கள் மற்றும் தமிழ் ஆர்வலர்கள் அனைவரும் கட்டுரை எழுதலாம். சங்க இலக்கியம் முதல் நவீன இலக்கியம் வரையிலான இலக்கிய ஆய்வுகள், நாட்டுப்புறவியல் இலக்கணம், மொழியியல் ஆய்வுகள் மற்றும் தமிழோடு தொடர்புடைய பிற துறைகள் அனைத்தும் பொருளாகலாம்.

கட்டுரைகளில் கூறப்படும் கருத்துகளுக்கு அக்கட்டுரை ஆசிரியரே பொறுப்பாவார். கட்டுரையாளர்களின் கருத்து இதழ் ஆசிரியர் குழுவின் கருத்தினை பிரதிபலிப்பன அல்ல. படைப்புகளைச் சுருக்கவும், திருத்தவும் ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு. கட்டுரைகள் ஆய்வுத் தரமுடையவைகளாக அமைதல் வேண்டும். ஆய்வுப் பொருளுக்கு முரண்பட்டதாக அமையும் கட்டுரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. படைப்புகளைத் திருப்பி அனுப்ப இயலாது. இவ்விதழுக்கு கட்டுரை அனுப்ப விரும்புவோர் கீழ்க்காணும் வழிமுறைகளைப் பின்பற்றலாம்.

1. **பொருள்** : சங்க இலக்கியம் முதல் நவீன இலக்கியம் வரையிலான இலக்கிய ஆய்வுகள், நாட்டுப்புறவியல், இலக்கணம், மொழியியல் ஆய்வுகள் மற்றும் தமிழோடு தொடர்புடைய அனைத்தும் இதன் பொருளாகலாம்.

2. **அளவு** : MSWord இல் A4 அளவில், 1.5 வாக்கிய இடைவெளியில் (Lining Space), பாமினி (Bamini Font) - 12 புள்ளி எழுத்தளவில், மூன்று முதல் ஐந்து பக்கங்களுக்குள் கட்டுரை அமைய வேண்டும்.

3. **முகவரி** : கட்டுரைத் தலைப்பின் கீழ் ஆசிரியர் பெயர், பதவி, முகவரியும், கட்டுரைமுடிவின் கீழ் இதழ் அனுப்ப வேண்டிய முகவரி, மின்னஞ்சல் முகவரி மற்றும் அலைபேசி எண்களும் இடம்பெறவேண்டும்.

4. **கட்டுரை அனுப்பும் முறை** : கட்டுரையை ayidhaezhuthu@gmail.com (Or) pallavipublications@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம்.

5. **சந்தா** : தனி இதழ் விலை ரூ.350/- இதழைத் தொடர்ந்து பெற விரும்புவோர் உறுப்பினர் கட்டணம் செலுத்தலாம். ஒரு ஆண்டிற்கு 12 இதழ்கள் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1 ஆண்டுக்கட்டணம் (தனி நபர்) | - | ரூ. 3000/- |
| 1 ஆண்டுக்கட்டணம் (நூலகம், கல்வி நிறுவனங்கள்) | - | ரூ. 3600/- |

6. **கட்டணம் செலுத்தும் முறை** : உறுப்பினர் (சந்தா) கட்டணத்தை **PALLAVI PATHIPPAKAM** என்ற பெயரில் வரைவோலையாக (**DD**) ஈரோட்டில் மாற்றிக் கொள்ளத்தக்க வகையில் (**PAYABLE AT ERODE**) அனுப்பலாம். இணையவழி, (**NET BANKING**), அலைபேசி (**MOBILE BANKING**) வங்கி பரிவர்த்தனை உடையவர்கள் **NEFT** முறையிலும் பணம் செலுத்தலாம்.

**A/C Name: PALLAVI PATHIPPAKAM.**
**A/C Type : CA,**
**A/C No : 33679969977.**
**Bank : STATE BANK OF INDIA,**
**Sathy Road, Erode -638 011.**
**IFSC : SBIN0016100.**


**பல்லவி பதிப்பகம்**
118, மேட்டூர் சாலை, கல்யாண் சில்க்ஸ் எதிரில்,
ஈரோடு - 638011.

0424-2251545, 94422 51549
97919 51549, 63817 01339

**pallavipublications@gmail.com**
**ayidhaezhuthu@gmail.com**


**படைப்பாளர்களின் கவனத்திற்கு ....**

இதுவரை வெளியான, அனைத்து ஆய்த எழுத்து இதழ்களையும் எங்களது **www.pallavipathippakam.in** இணையத்தளத்தில், இதழ்கள் - ஆய்த எழுத்து பகுதியில் முழுமையாக பதிவிறக்கம் (Download) செய்து கொள்ளலாம்.

**அல்லது**

**https://ayidhaezhuthu.in** என்ற இணையத்தளத்தில் பதிவிறக்கம் (Download) செய்து கொள்ளலாம். அவ்வாறே தங்களது ஆய்வுக்கட்டுரைகளை இந்த இணையத்தளத்தின் வழியாக அனுப்பலாம்.

# பொருளடக்கம்

1. கடையெழு வள்ளல்கள் - வலசமலை மலைவாழ் மக்களின் வாழ்வியல் கூறுகள்

***ஜெ.சங்கீதா** - 1

2. கொங்குநாட்டுச் சமண ஆவணங்களில் பெண்கள்

***த.சாவித்ரி** - 3

3. சங்க இலக்கியத்தில் மகளிர் அணிகலன்கள்

***முனைவர் சு.சாந்தி** - 7

4. நாட்டுப்புற வழிபாட்டில் சிறுதெய்வ வழிபாடு

***த.தமிழ்ச்செல்வி** - 10

5. காயகற்ப முறைகளின் வாழ்வியல் சிந்தனைகள்

***சு.அகமது** - 14

6. நான்மணிக்கடிகையில் மனித வாழ்வியல் நெறிகள்

***முனைவர் ப.அலிஸ் ராணி** - 17

7. திரையிசைப் பாடல்களில் பெண்மை (கவிஞர் கண்ணதாசன் வரிகள்)

***த.பிரேமா மஞ்சரி *நெறியாளர் R.K.குமார்** - 20

8. ஆர்.அபிலாஷ் எழுதிய "கால்கள்" நாவலில் வாழ்வியல் சிந்தனைகள்

***ரா.சி.ஷீனு** - 25

9. குமுதம் தீராநதி இதழின் வடிவமைப்பு – ஒரு பார்வை

***ரா.சே. குமாரி அமுதா** - 27

10. அறநூல்கள் காட்டும் பெண்மை

***பா.சபிஹாபானு** - 30

11. வைசூரிமாலை சுவடியின் பாடல்களில் பயின்று வந்துள்ள அணிகள் ஒரு பார்வை

***ஷைலஜா. சே** - 33

12. சோதிடமும் - சோதிடர்களும்

***முனைவர் பொ.செந்தில்குமார்** - 35

13. புறநானூற்றில் மனிதநேயம்

***முனைவர் ச.ஆஜிராபானு** - 40

# கடையெழு வள்ளல்கள் - வலசமலை மலைவாழ் மக்களின் வாழ்வியல் கூறுகள்

***ஜெ.சங்கீதா,** முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, ஸ்ரீ ராமகிருஷ்ணா மிஷன் வித்யாலய கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயமுத்தூர் - 20.

**முன்னுரை**

கொடுக்கும் வள்ளல்களிடம் இசையிலே வல்ல பாணர்கள் வந்து இசை பாடிப் பரிசு பெறுவார்கள். கூத்தர்கள் அணுகிக் கூத்தாடி மகிழ்வித்துப் பல பொருள்களைப் பெறுவார்கள் பாட்டுப் பாடியும், ஆடியும் தம்முடைய கலைத் திறமையைக் காட்டும் பெண்களாகிய விறலியர்களும் பரிசு பெறுவதுண்டு. தடாரி என்ற தோல் கருவியை வாசித்துப் பரிசு பெறும் பொருநர் என்ற கலைஞர்களும் உண்டு. இவர்களையன்றி வறுமையால் வருந்துவோரும் பிணியில் துன்புறுவோரும் கண்பாது இல்லாமல் உழைத்து வாழ முடியாதவர்களும் வேண்டியவற்றைப் பெற்றுச் செல்வார்கள். புலவர்கள் பாடிப் பரிசில் பெறுவார்கள். இத்தனை பேர்களுக்கும் அவர்கள் துன்பத்தைப் போக்கும் உயர்ந்த பண்பை வள்ளல்களிடம் காணலாம்.

பாரி, பேகன், அதிகமான், காரி, ஓரி, ஆய். நள்ளி என்ற ஏழுபேர்களையும் எழுபெரு வள்ளல்கள் என்று புலவர்கள் போற்றுகிறார்கள். அவர்களின் கொடை மடச் செயல்கள் பற்றியும், மலைவாழ் மக்கள் வாழ்வியலுக்கும் உள்ள தொடர்புகள் பற்றி தெரிந்து கொள்வோம்.

**பாரி**

பரம்பு மலையை ஆண்ட குறுநில மன்னன் பாரி. அம் மன்னனில் வள்ளல் தன்மையை இந்நூல் (87-91 அடிகள்) குறிப்பிடுகிறது. இராமநாதபும் மாவட்டத்தில் திருப்புத்தூர் என்ற ஊர் இருக்கிறது. அங்கிருந்து சில மைல் தூரத்தில் பிரான்மலை என்ற மலையும் அந்தப் பெயரோடு ஓர் ஊரும் உள்ளன. சங்க காலத்தில் அந்த மலைக்குப் பறம்பு மலை என்ற பெயர் வழங்கி வந்தது.

அந்தக் காலத்தில் பறம்பு மலை நல்ல வளமுடையதாக இருந்தது. எங்கே பார்த்தாலும் மரங்கள் அடர்ந்திருந்தன. பலாமரங்கள் குலைகுலையாகப் பழங்களுடன் நின்றன. மரத்துக்கு மரம் தேன் கூடுகள் அடை அடையாக இருந்தன. மலைப் பாறைகளில் பெரிய பெரிய தேனிறால்கள் தேனை ஊற்றுப்போல ஒழுக விட்டுக் கொண்டு பரந்திருந்தன. வண்ண வண்ண மலர்கள் காணக் காண இனியவையாய் மலர்ந்திருந்தன. மலைப் பாறைகளில் அருகருகே பல சுனைகள் தெளிந்த நீரோடு விளங்கின. மலைவளம் சிறந்திருந்த பறம்பு மலையில் அடர்ந்த காடுகளும் இருந்தன.

மலையின் மேல் உள்ள மலை வளத்தைக் கண்டு மகிழ்வது போலவே கீழே உள்ள காட்டு வளத்தையும் கண்டு களிப்பான் பாரி. வள்ளல்கள் எல்லோரையும் விட உயர்ந்தவனாகப் பாரியைத் தமிழ்ச் சான்றோர்கள் போற்றுவர். அப்பெருமன்னன் படர்வதற்குக் கொழுகொம்பின்றித் தவித்த முல்லைக் கொடிக்குத் தான் ஏறி வந்த தேரினையே ஈந்த புகழ்ச் செயலே காரணம் என்பர்.

**பாடியோர்**

கபிலர், ஔவையார், மிளைக்கந்தனர், நக்கீரர், நன்னாகனார், பெருஞ்சித்திரனார், நல்லூர் நத்தத்தனார்.

"மூங்கில் நெல், பலாப்பழம்

வள்ளிக்கிழங்கு, தேன் ஆகிய நான்கும் விளையும் பறம்பு மலை உழவர் உழாத நான்கு வளங்களை உடையது."– கபிலர் (புறம் 109)

**மலையமான் திருமுடிக்காரி**

மலாடு இன்றைய கள்ளக்குறிச்சி திருக்கோயிலூர், சங்கராபுரம் கல்வராயன் மலைப் பகுதிகளையும் உள்ளடக்கியதாக இருந்திருக்கிறது எனலாம்.

மலையமான் நாட்டின் தலைநகராக திருக்கோவலூர் (இப்போது திருக்கோவிலூர் என்றும் அழைக்கப்படுகிறது). இவ்வூரில் மலையமான் நாட்டில் பல ஊர்கள் சிறப்புடையனவாக இருந்தன. தென்பெண்ணை ஆற்றின் தென் மேற்கில் இருந்ததாகக் கருதப்படும் பாதுகாப்பான முள்;ர்குத் தலைவன் மலையமான் திருமுடிக்காரியாவான். வலிமைமிக்க குதிரையையும் நல்ல சொற்களையும் கொடையாக இரவலர்க்கு வழங்கியவன் காரி.

மலாட்டை ஆண்ட சிறந்த மன்னர்களுள் மலையமான் திருமுடிக்காரி என்றும் மலையமான் என்றும் கோவற் கோமான் என்றும் காரி என்றும் அழைக்கப்படுபவர் ஆவார். காரி சிறந்த வீரராகவும்,

உயர்ந்த வள்ளலாகவும் விளங்கியவர். இவ் அரசரைப் பற்றிய செய்திகளைக் கூறும் பல பாடல்களைச் சங்க இலக்கியங்களில் காண்கிறோம்.

**சான்றுகள்**

மலையமான் நாட்டை அடுத்துள்ள வேணாட்டு (வேளிர் நாடு) ஆளிலை கோடலிலும், மீட்டலிலும் ஈடுபட்டு இறந்த வீரர்களுக்கு எடுக்கப்பட்ட நடுகற்கள் மிகுதியாகக் கிடைத்துள்ளன.

**ஓரி**

கடையெழு வள்ளல்களுள் ஒருவனான ஓரி சிறந்த வில்லாளி கொல்லிமலைக்கும் அதைச் சார்ந்த நாட்டிற்கும் தலைவன் இவர் வல்வில் ஓரி எனவும் ஆதன் ஓரி எனவும் அழைக்கப்படுவார். கூத்தாடும் கலைஞர்களின் கலைத்திறனை மதித்து வளமான பல நாடுகளை வழங்கி மகிழ்ந்தவன் ஓரி.

இராசிபுரத்தில் அமைந்துள்ள வல்வில் ஓரி கட்டிய கைலாசநாதர் கோயிலில் உள்ள அவரின் வாழ்நாளிலேயே அமைக்கப்பட்ட அவரின் சிலை உள்ளது. ஒருமுறை வல்வில் ஓரி ஸ்ரீ ராஜபுரம் என்னும் பகுதியில் (தற்போது இராசிபுரம்) வேட்டையாட செல்லும் போது அங்கு ஒரு பன்றியின் மீது அம்பினை செலுத்த அப்பன்றியானது ஒரு புதரில் போய் மறைந்துவிட அந்த இடத்தல் வல்வில் ஓரி சென்று பார்க்கும் போது அங்கு பன்றிக்கு பதிலாக சிவலிங்கமும் அச் சிவலிங்கத்தின் மீது வல்வில் ஓரி எய்த அம்பும் அந்த அம்புபட்டதால் அந்த சிவலிங்கத்தில் ரத்தமும் கசிந்தது. இதைக் கண்ட ஓரி சிவந்தான் தன்னை பன்றி வடிவில் வந்து சோதித்ததாக எண்ணி அவ்விடத்திலேயே சிவ பெருமானுக்கு ஸ்ரீ கைலாசநாதர் திருக்கோயில் என்ற பெயரால் ஆலயம் எழுப்பினான். இதனைக் குறிக்கும் வகையில் அந்த ஸ்ரீ கைலாசநாதர் திருக்கோயிலின் கொடிமரத்தில் சிவபெருமானை குறிக்கும் வகையில் முள் புதரின் முன் பன்றி வடிவமும் வல்வில் ஓரியை குறிக்கும் வகையில் வாளும் கேடயமும் பொறிக்கப்பட்டள்ளது. இந்த நிகழ்வு இவ்வாலய கோபுரத்தின் பின்புறத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளது.

**வில்திறம் மிக்க வல்வில் ஓரி**

ஆதன் ஓரி என்றும் அழைக்கப்படும் இவன் கடையெழு வள்ளல்களில் ஒருவன். திருச்சி, சேலம் மாவட்டங்களுக்கு இடையே உள்ள கொல்லிமலை, இலக்கியம் கூறும் கொல்லிப்பாவை இந்த மலைக்குரிய இலக்கியம். கனியும், கிழங்கும், சந்தனமும், தேக்கும் இந்த மலைக்குரிய இயற்கை வளம்.

புன்னை மரங்களையும் குன்றுகளையும் உடைய நாடுகளைக் கூத்தருக்குக் கொடுத்த ஓரி என்று இந்நூல் அவனைப் புகழ்கிறது.

**ஆய்**

குறுகிய சிறிய மலைப் பொந்துகளில் வாழும் குறவர்கள் வளைந்த மூங்கில் குழாய்களில் வடித்து வைத்திருந்த முதிர்ந்த தேனைக் குடித்துவிட்டு வேங்கை மர நிழலில் குரவைக் கூத்தாடி மகிழ்வர். இப்படிப்பட்ட மலையும் வேங்கை மரமும் நிறைந்த இனிய பலாக்கனி பழுத்துக் குலுங்கும் மலை நாட்டு மன்னன் ஆய் அண்டிரன் போரில் வல்லவன். பாடி வருவோர்க்குப் பரிசில் தந்து மகிழ்வதில் விருப்பம் மிக உடையவன் இவன் அப்படிப் பாடி வந்தவர்குப் பரிசாகத் தந்த யானையின் எண்ணிக்கை வானில் கருமை நிறமே இல்லாது ஆகாயம் முழுவதும் வெள்ளை நிறம் படர்ந்தது போல வெள்ளிமீன் பூத்தாலும் அதற்கு ஈடாகாது அதற்கு மேலாகவே இருக்கும். ஏணிச் சேரி முட மோசியார் ஆய் குடிக்கு சென்றிருந்தார். அவரைத் தன் தேரில் அழைத்துச் சென்றான் ஆய். காட்டு வழியே அந்தத் தேர் சென்றது. அங்கே பழக்கப்பட்ட பல யானைகள் இருந்தன. அவற்றைப் பார்த்த புலவர் ஒரு பாட்டை பாடினார். இந்தக் காடு மேகக் கூட்டங்கள் தங்கும் மலையையும், சுரபுன்னை மலரால் தொடுத்த கண்ணியையும் உடைய ஆய் அண்டிரனுடைய குன்றத்தைப் பாடிற்றோ? என்று பாடினார். அவனுடைய யானைக் கொடையையே அப்பாடலில் சிறப்பித்துள்ளார்.

**முடிவுரை**

தொடர்மலைகள் அடர்வனங்கள், நெடு மரங்கள், இடுபுதர்கள், பிணைக் கொடிகள், முட்புதர்கள், புல்வெளிகள், குளிர் சுனைகள், வீழருவிகள், பேராறுகள், பிளிர் யானைகள், மேகங்களைத் தழுவி நிற்கும் நெடுமரங்கள், வளைந்து வலிந்து செல்லும் பாதைகள், ஏரி, ஆறு, குளம், குட்டை, ஊற்று சுனை, சோலைக்காடுகள், மலைகள், பள்ளத்தாக்குகள் என மலைகளின் அழகியலை புரிந்து கொண்டு கடையெழு வள்ளல்களான பாரி, காரி, ஓரி, ஆய் இவர்கள் மலைகளோடும், மலைவாழ் மக்களோடும் மனித வாழ்வுக்குத் தேவையான அறம், பண்பு, சிறந்த ஆட்சி முறை, கூட்டு வாழ்க்கையைத் தம் செயல்பாடுகளாக கொண்டிருந்தனர்.

**அடிக்குறிப்புகள்**

1. குறுந்தொகை – 196 – 370
   புறநானூறு – 87-91, 109
   புறநானூறு - 110,113,114,118,176.
2. புறநானூறு - 121,124,125,126, 158
   சிறுபானாற்றுப்படை - 91,95,107,110
3. புறநானூறு – 152
   குறுந்தொகை - 100, 199
   சிறுபானாற்றுப்படை - 107, 111
4. புறநானூறு - 129, 130, 131.

# கொங்குநாட்டுச் சமண ஆவணங்களில் பெண்கள்

*த.சாவித்ரி, முனைவர் பட்ட ஆய்வாளர், அறிஞர் அண்ணா அரசு கல்லூரி, ஆத்தூர்.

தமிழகம் பண்டைய காலத்தில் சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு, கொங்குநாடு, தொண்டைநாடு என ஐந்து பெரும் பிரிவுகளாகப் பிரிந்திருந்தன. கொங்குநாடு மலைகளும் குன்றுகளும் சமவெளிகளும் உள்ள பகுதியாக விளங்கியது.

**மைந்தை ஆடிய மயங்கு பெரும் தானை**
**கொங்கு புறம் பெற்ற கொற்ற வேந்தே** (புறம் 373, 7-8)
**கொற்றச் சோழர் கொங்கர்ப் பணீயர்** (நற் 10, 6.)
**ஒளிறுவாள் கொங்கர்** (குறு 393,6)
**வாடாப் பூவின் கொங்கர்** (அகம் 253, 4)

**ஆகெழு கொங்கர் நாடு (பதி 22-15)** என்றெல்லாம் சங்க இலக்கியங்கள் கொங்கு நாட்டைக் கூறுகின்றன.

**கொங்கு நாட்டின் எல்லைகள்**

கொங்நாட்டின் எல்லைகளைத் தனிப்பாடலிலும் கொங்குமண்டலச் சதக நூலிலும் காணலாம். இவ்வெல்லைகள் மூவேந்தர் படையெடுப்பினால் சில காலகட்டங்களில் மாறுபட்டிருந்ததை ஆவணங்கள் நமக்குக் கூறுகின்றன.

**வடக்குத் தலைமலையாம் வைகாவூர் தெற்கு**
**குடக்குவெள் ளிப்பொருப்புக் குன்று - கிழக்கு**
**கழித்தண் டலைசூழும் காவிரிசூழ் நாடா**
**குளித்தண் டலையளவும் கொங்கு ---** **தனிப்பாடல் (1)**
**வடக்கு பெரும்பாலை வைகாவூர் தெற்கு**
**குடக்குப் பொருப்புவெள்ளிக் குன்று - கிடக்கும்**
**கழித்தண் டலைமேவு காவிரிசூழ் நாட்டுக்**
**குளித்தண் டலையளவு கொங்கு" ----** **கொங்கு மண்டல சதகப் பதிப்பு (1)**

கொங்கு நாட்டு எல்லைகளைக் கூறும் எல்லாப் பாடல்களுமே வெள்ளியங்கிரி மலையை மேற்கு எல்லையாகக் கூறுகின்றன. மேற்குத் தொடர்ச்சி மலைக்கு தெற்கே சேரநாடு என்பது இதன் கருத்தாகும். சங்க இலக்கியத்தில் பல இடங்களில் கொங்கு நாடு தனி நாடாகவே குறிக்கப்படுகிறது. நூற்றாண்டுகள் தோறும் கல்வெட்டுகளும் செப்பேடுகளும் கொங்கு நாடு தனி நாடெனக் கூறுகின்றன.

கொங்கு நாட்டின் நிர்வாக வசதிக்காகத் தாம் வாழும் நாட்டில் 24 நிர்வாகப் பிரிவுகளை ஏற்படுத்தினர். அவ்வாறு ஏற்படுத்திய ஒவ்வொரு நாடுகட்கும் ஒரு அவை இருந்தது. அதில் எல்லா ஊர்களுக்கும் அங்கம் அளிக்கப்பட்டிருந்த செய்தியைக் கல்வெட்டுகளும் செப்பேடுகளும் இலக்கியங்களும் கூறுகின்றன. அவையினர் ஒன்றாகக் கூடி நாட்டுக் காரியங்களைச் செய்தனர்.கோயில்கட்குக் கொடைகள் அளித்தனர். ஆலயத் திருப்பணியை மேற்கொண்டனர். குற்றவாளிகளை விசாரித்துத் தண்டித்தனர். நாட்டுக்கு வேண்டிய எல்லாப் பணிகளையும் செய்தனர். இந்நாடுகள் தல சுய ஆட்சி போன்ற அமைப்பைச் செயல்ஜபடுத்தி வந்தது. இது தமிழகத்தின் வேறு எப்பகுதியில் இல்லாத ஒன்றாகும்.

**கொங்குநாட்டின் 24 நாடுகள்**
**சொல்ல அரி தானபூந்தது துறைசைதென் கரைநாடு**
**தோன்றுகாங் கேயநாடு**
**தோலாத பொன்கலூர் நாடு திகழ் ஆறையளி**
**தோய்ந்தவர் ரக்கநாடு**
**வல்லமை செறிந்ததிரு ஆவிநன் குடிநாடு**

**மணநாடு தலையநாடு**
**வரதட்டை பூவாணி அரையநாடு ஒடுவங்கம்**
**வடகரை கிழங்கு நாடு**
**நல்லுருக் காநாடு வாழவந் தியும் அண்ட**
**நாடு வெங் காலநாடு**
**நாவலர்கள் சொல்கா வடிக்காநாடு ஆனைமலை**
**இல்லறம் வளர்ந்துதவி மல்குகாஞ் சிக்கோயில்**
**இயல்செறி குறும்நாடு**
**இனியபுகழ் சேர்கொங்கு மண்டலந் தனிலான**
**இருபத்து நான்குநாடே**

கொங்கு நாட்டில் பூந்துறைநாடு, தென் கரை நாடு, காங்கேயநாடு, பொங்கலூநாடு, ஆறைநாடு, வார்க்கநாடு, திருவாவினன் நாடு, மணநாடு, தலையூர் நாடு, தட்டயூர் நாடு, பூவாணிய நாடு, அரைய நாடு, ஒடுவங்க நாடு, வடகரை நாடு, கிழங்கு நாடு, நல்லுருக்கா நாடு, வாழவந்திநாடு, அண்டநாடு, வெங்கலநாடு, காவடிக்காநாடு, ஆனைமலைநாடு, இராசிபுரநாடு, காஞ்சிக்கோயில் நாடு, குரும்புநாடு ஆகியன கொங்குநாட்டின் 24 நாடுகளாகும்.

பிற்காலத்தில் நாடுகள் 24-ஐக் காட்டிலும் அதிகம் ஆயிற்று, வெங்கால நாட்டின் இணை நாடாக இடைப்பிச்ச நாடு சேர்த்துக் கொள்ளப்பட்டது.கொங்கு நாடுகள் என்பது பொதுவான வழக்கு இதனை 'நாலாறுநாடு' என்ற இலயக்கியத் தொடர் காட்டும். 'மூவெட்டுநாடு' எனக் கூறுவதும் உண்டு.மக்கள் பெருக்கமும், குடியேற்றமும் பிற்காலத்தில் ஏற்பட்டபோது கொங்கு 24 நாடுகள் 42 நாடுகள் எனக் கூறபட்டன அவை

தாராபுரம் சூழ்ந்தநாடு - 24 கோட்டை சூழ்நாடு - 6 குன்றத்தூர்க் கோட்டம்- 12 நாடுகளாகப் பிரித்து கூறப்படும். கோட்டை என்பது தணாயக்கன்கோட்டை, குன்றத்தூர் என்பது சங்ககிரியாகும். அண்மையில் கிடைத்த ஒரு செப்பேட்டு ஆவணம் கொங்கு 72 நாடுகள் எனக் கூறுகிறது. 24 நாடுகளை 24 கோட்டம் என அழைக்கும் வழக்கமும் உண்டு.

கொங்குநாட்டு வரலாற்றை எழுதிய கோவைக்கிழார் சி. எம். இராமச்சந்திரர், வுாந முழபெர ஊழரவெசல எழுதிய எம். ஆரோக்கியச்சாமி ஆகியோர் கொங்குநாட்டில் சமணம் தழைத்திருந்ததைக் கூறியுள்ளனர். மேலும் எஸ். கே. இராமச்சந்திர ராவ்( வுாந துயனையெஅ ைெ ளுழரவா ஐனெயை), பி. எம். ஜோஸப்( துயனைளைஅ ைெ ளுழரவா ஐனெயை) ஆகிய நூல்களும் கொங்கு நாட்டில் சமணம் இருந்த செய்தியினைக் கூறுகின்றன.

**கொங்குநாட்டில் சமண சமயம்**

தென்னக சமண சமயத்தின் தந்தை எனப்படும் பத்திரபாகு முனிவர், மௌரியப் பேரரசன் சந்திர குப்தன் ஆகியோர் காலத்தில் சிரவணபௌகொளா வழியாகப் பரவியிருக்க வேண்டும். பத்ரபாகு முனிவர் உயிர் துறந்தவுடன் அங்கிருந்து புறப்பட்டுச் சென்ற விசாக முனிவரைத் தலைவராகக் கொண்ட சமண சமயத்தார் கொங்கு நாட்டை அடைந்தனர். இவர்களே கொங்குநாட்டிலும் தமிழகத்தின் ஏனைய பகுதிகளிலும் சமண சமயம் பரவக் காரணமாக இருந்தனர். ஈரோடு மாவட்டம் நொய்யல் ஆற்றங்கரையில் கொடுமணல் என்னும் ஊர் உள்ளது. இது பதிற்றுப்பத்தில் கொடுமணம் எனப் புகழப்பட்ட ஊர் ஆகும். இங்கு அகழ்வாராய்வு மேற்கொண்ட போது பெருங்கற்படை புதைக்குழி ஒன்றில் கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த பனை ஓடு கிடைத்துள்ளது. அதில் விசாகா என எழுதப்பட்டுள்ளது.

விசாக முனிவருடன் கொங்கு நாட்டிற்கு வந்து மலைக் குகைகளில் சென்று மலைக் குகைகளில் தங்கித் தவம் இயற்றிய சமண முனிவர்களில் பெரும்பாலானோர்மௌரியர் ஆட்சி புரிந்த மகத நாட்டைச் சேர்ந்தவர்கள். ஆனால் பத்ரபாகு தென்னகம் வருவதற்கு முன்னரே கொங்கு நாட்டில் சமண சமயம் பரவி இருந்தது. மலைகளில் தங்கிய இத்தகைய சமணர்களுக்கு அரசர்களும் உயர் அலுவலர்களும் பொதுமக்களும் அமித்துக் கொடுத்தக் கல் படுக்கைகளை இன்றும் காணலாம். நிகமம் என்றழைக்கப்பட்ட வணிகக் குழுவினர் சமண சமயத்தவருக்கு ஆதரவளித்து வந்தனர். கொங்குநாட்டின் பொள்ளாச்சிக்கு அருகில் உள்ள நெகமம் என்னும் ஊர் உள்ளது. இது சமண சமயத்தவருக்கு ஆதரவளித்து வந்த வணிகக் குழுவினரின் நிகமம் என்னும் பெயரே ஆகும்.

**கொங்குநாட்டில் சமண மதத்திற்கு அரசர்களின் ஆதரவு**

கொங்கு நாட்டு அரசர்கள் சமய வேறுபாடு களைந்து சமண மதத்திற்கு ஆதரவு அளித்து வந்தனர். கொங்கு நாட்டை ஆட்சி புரிந்த இரட்டர்கள் சமண மதத்தைச் சார்ந்தவர்கள். இவர்களின் கடைசி அரசனான திருவிக்ரமன் சமண சமயத்தை விட்டு சைவ சமயத்தைத் தழுவினான். இரட்டர்களை அடுத்துக் கொங்கு நாட்டை ஆட்சி புரிந்த கங்கர்களின் காலத்தில் இங்கு சமணம் தழைத்தோங்கியது. கொங்குச் சேரர்கள் சமணர்கள் மீது கொண்டிருந்த பற்றை ஆறுநாட்டார் மலைக் கல்வெட்டுகள் கூறுகின்றன.ஐவர் மலையிலும் விஜயமங்கலத்திலும் உள்ள வரகுண பாண்டியன், வீர பாண்டியன் கல்வெட்டுகள் சமணக் குறிப்போடு காணப்படுகின்றது.

திங்களலூர் ஆத்தூர், விஜயமங்கலம் கல்வெட்டுகள் கொங்குச் சோழர்களின் சமணத் தொடர்பை விளக்குகின்றன. வீர வல்லாளர்களும் விஜய நகர அரசர்களும் சமண சமயத்திற்கு அளித்து வந்த ஆதரவை ஆவணங்கள் கூறுகின்றன. மெக்கன்சி ஆவணம் வஞ்சன் , குறோதன்,நீலன் முதலிய சமணர்கள் கரூருக்கு அருகில் உள்ள வெஞ்சமாங்கூடலூருக்கு ஓடி வந்ததும் அங்கு அவர்கள் அதிகாரம் செலுத்தியதையும் கூறுகின்றது.

**தேவாரம் காட்டும் சமணம்**

தேவாரத்தில் சமணர்களை,

**உடுக்கை இன்றி ஊர் நடுவே திரிவார்**
**கயில் உண்ணும் கையர்**
**நின்றுண்ணும் கள்ளர்**

**மாசு மெய்யர்**

தலை பறிக்கும் சமண் கையர் என்றெல்லாம் கூறியுள்ளனர். இவை சமண சமயத்தில் உயர்ந்த நிலையடைந்த துறவிகளின் செயல். இது போன்ற காரணங்களால் சமண சமயத்திற்கு எதிர்ப்புகள் தோன்றின.

**சமண பெண் தெய்வங்கள்**

சமண சமயத்தில் உருவ வழிபாடு தோன்றிய பின்னர் தீர்த்தங்கராக ஆளுக்குச் சேவை செய்யும் பரிவார தெய்வங்கள் தோன்றின. தீர்த்தங்கரருக்குப் பணிமகளாகத் தோன்றிய சமணப்பெண் தெய்வம் யட்சி ஆவார். ஆண் தெய்வம் யட்சன் ஆவார். இவர்களே பின்னாளில் இயக்கி, இயக்கன் என அழைக்கப்பட்டனர். இந்த இயக்கி இயக்கன்கள் திகம்பர சமணத்திற்கு உரியவை. ஒவ்வொரு தீர்த்தங்கரருக்கும் ஒரு இயக்கி, இயக்கன்கள் உள்ளனர். 24 தீர்த்தங்கரருக்கும் 24 இயக்கி, இயக்கன்கள் உள்ளனர்.

இயக்கன் என்ற சொல் சங்க காலம் முதலாகக் காணப்படுகிறது. புறநானூற்றில் இயக்கன் என்ற பெயர் காணப்படுகின்றது. பொ. நூ. முன் 2 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அழகர் மலைக் கல்வெட்டில் இயக்கன் என்ற சொல் காணக்கிடைக்கின்றது. தமிழகத்தில் இயக்கன் வழிபாட்டைக் காட்டிலும் இயக்கர் வழிபாட்டைக் காட்டிலும் இயக்கியர் வழிபாடு போற்றுதலுக்கு உரியதாக உள்ளது. ஏனெனில் தமிழகம் தொன்றுதொட்டுப் பெண் தெய்வ வழிபாட்டிற்குச் சிறப்பு பெற்றதாகும்.

பௌத்த சமயத்திலும் இயக்கி அம்மன் வழிபாடு இருந்துள்ளதை மணிமேகலை கூறுகின்றது. சமண சமயத்தில் இயக்கி அம்மன் வழிபாடு இருந்துள்ளதை சிலப்பதிகாரக் காப்பியம் கூறுகின்றது. பொ. நூ. ஆ மு. 6 ஆம் நூற்றாண்டு முதலே பௌத்த சமயத்தில் இயக்கி அம்மன் வழிபாடு குறையத் தொடங்கியது. ஆனால் சமண சமயத்தில் இயக்கி அம்மன் வழிபாடு 2 ஆம் நூற்றாண்டில் தொடங்கி நாயக்கர் காலம் வரை மிகவும் சிறப்பாக நடைபெற்றுள்ளது. சமண சமயத்து இயக்கியர்கள் சிற்பங்கள், செப்புத் திரு மேனிகள், கல்வெட்டுகள் தமிழகத்தில் இன்றும் காணக் கிடைக்கின்றன.ஆரம்ப காலகட்டங்களில் இயக்கியர் சிற்பங்கள் தீர்த்தங்கர்களுடனும் பின்னர் தனித்தும் காணப்படலாயிற்று. இயக்கி அம்மன் வழிபாட்டுத் தாக்கங்கள் சைவ வைணவ பெண் தெய்வ பெண் தெய்வ வழிபாடுகளிலும் காணலாம். நாயக்கர் காலத்தில்தான் இவை நாட்டார் தெய்வ வழிபாட்டுடன் கலந்தது.

சமணர்கள் தீர்தங்கரர்களையும் இயக்கன் இயக்கிகளையும் தவிர சேத்திர பாலர், கணதரர், இலக்குமி, சரசுவது, நவகிரகங்கள், இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன்,ஈசானன் முதலிய தெய்வங்களையும் வணங்கி வருகின்றனர்( கார்மேகக் கவிஞர் , மு.க.நூல் பக் 138), தீர்த்தங்கரர் வழிபாட்டைத் தவிர பிற வழிபாடுகள் பிற்காலத்தில் சைவ வைணவ சமயங்களில் ஏற்கப்பட்டவை.

கொங்கு மண்டலத்தில் உள்ள விசயமங்கலத்தில் கொங்குவேளிர் சிற்பங்கள் உள்ளன. அச்சிற்பங்களோடு ஒரு பெண் சிற்பத்தையும் காணமுடிகின்றது. அச்சிற்பம் கொங்குவேளிரின் பணியாளர் சிற்பம் என்று கூறப்படுகிறது. திண்டுக்கல் மாவட்டம் அய்யம்பாளையம் என்னும் ஊரில் ஐவர் மலையில் சமண சமய இயக்கியாகியப் பத்மாவதியின் உருவம் ஒன்று கல்வெட்டு குறிப்புடன் காணப்படுகின்றது. அக்கல்வெட்டில் இங்குள்ள பார்சுவநாதர் பத்மாவதி இயக்கிக்கும் திரு அமுது படைக்க 505 காணம் கொழுமத்தை சேர்ந்த சாந்தி வீர குரவடிகளால் அளிக்கப்பட்டது என்ற செய்தி காணப்படுகின்றது. ஈரோடு மாவட்டம் பூந்துறையில் உள்ள பார்சுவநாதர் கோயிலில் பத்மாவதி உருவம் அமர்ந்த நிலையில் தனி சிற்பமாக உள்ளது. விஜய மங்கலத்தில் உள்ள பத்மாவதி இயக்கியின் தலைக்குமேல் ஐந்து தலை நாகம் கட்டப்பட்டுள்ளது

**சமண சமயப் பெண்கள்**

சமண சமயத்தில் பெண்களுக்குக் கல்வியறிவு வழங்கப்பட்டது. பெண்கள் துறவிகள் ஆவதற்கு இச்சமயம் அனுமதித்தது. ஆண், பெண் துறவிகளுக்கு நீசீதிகை கல் நினைவுக் கல்லாக நாட்டப் பட்டுள்ளது. தமிழகத்தின் தொன்மையான நினைவுக்கல் கொங்கு நாட்டின்

ஈரெட்டி மலைக்கல் நினைவுக் கல்லாகும். இது ஒரு சமணத் துறவிக்காக எடுக்கப்பட்ட நினைவுக் கல்லாகும். பாலை கௌதமனார், கபிலர், அரிசில்கிழார், இளங்கோவடிகள் ஆகியோரால் பாடப்பட்ட அயிரை மலையில் சமண முனிவர்கள் தவம் செய்த இயற்கை குகைத் தளங்கள் உள்ளன. இங்கு உள்ள கல்வெட்டு ஒன்று தீர்த்தங்கரரின் பரிவார தெய்வமான இயக்கி ஔவைகளின் சிற்பங்களைப் புதுப்பித்து வழங்கப்பட்டக் கொடைகளைக் கூறுகின்றது. சமண சமய இயக்கியர்களை ஔவை என குறிக்கும் வழக்கம் உண்டு. சமண சமய பெண்பால் துறவிகள் ஒவையார் என அழைக்கப்பட்டுள்ளனர்.

குரத்தியர் என்னும் சொல் சமண சமயப் பெண்பால் துறவிகளைக் குறிக்கும். கழுகுமலையில் பல குரத்தியர் பெயர்கள் காணப்படுகின்றன. துறவியர் ஆடவராக இருந்தால் குரவர் அல்லது குரவடிகள் எனப்பட்டனர். பட்டினிக் குரத்தியர் எனப்படுபவர் உண்ணா நோன்பு மேற்கொண்டவர் எனப் பொருள்படும். ஒரு நாளைக்கு ஒரு வேலை உணவை மட்டுமே எடுத்துக் கொள்வர். கழுகு மலையில் பட்டினி படாரர் மாணக்கிகள் என்ற தொடர் காணப்படுகின்றது.

**கொங்குநாட்டுச் சமண நூல்கள்**

ஈரோடு மாவட்டத்தில் பூந்துறையில் உள்ள கோயிலில் காணப்படும் கல்வெட்டில் சமண சமயம் பற்றிய செய்திகள் நமக்குக் காணக்கிடைக்கின்றன. மேலும் இங்கு பார்சுவநாதர் உடன் இயக்கி பத்மாவதியின் உருவச் சிலையும் உள்ளது. திருமங்கலத்தில் சமணப் பெண் ஒருவரின் நிசீதிகைக் கல் காணப்படுகின்றது இரண்டாம் மாறவர்மன் இரண்டாம் ராஜராஜன் தளபதியும் அமைச்சருமாகிய சாமுண்ட ராயன் சிரவணபெலகௌலாவில் புகழ் வாய்ந்த கோமதேஸ்வரர் பாகுபலி சிற்பத்தை நிறுவியவர் மாபெரும் செயலைச் செய்த இவரின் தங்கை புளிஅப்பை என்பவள், விஜயமங்கலம் சந்திரப் பிரப தீர்த்தங்கரர் கோயிலில் சல்லேகனை விரதமிருந்து உயிர் துறந்தார். புளி அப்பையின் நினைவுக் கல்லாகிய நிசீதிகைக்கல் இங்கு நிறுவப்பட்டுள்ளது.

அம்மை அவ்வை சொற்களுக்கு இணையான சொல்லாகக் கன்னடத்தில் பெண்களை குறிக்கும் சொல் அப்பை. கன்னட கல்வெட்டுகளில் மாவி அப்பை, சக்கி அப்பை போன்ற சொற்கள் காணப்படுகின்றன. சல்லேகனை விரதம் மேற்கொள்வோர் முதலில் அதற்குரிய இடத்தைத் தேர்ந்தெடுப்பர். அப்பகுதி தனியாகவும் மக்கள் நடமாடும் இடத்தை விட்டுத் தள்ளியும் இருக்க வேண்டும். அந்த இடத்தை தூய்மை செய்து தர்ப்பை அல்லது காய்ந்த வைக்கோலைக் கொண்டு பரப்புவர். தென்னை நார் உபயோகிப்பதும் உண்டு. அதன்மீது வடக்கு நோக்கி அமர்ந்தோ, நின்றோ, படுத்தோ விரதம் மேற்கொள்வர்.முதலில் திரவ உணவு மட்டும் உட்கொள்ள வேண்டும் தண்ணீர் மட்டும் உட்கொள்ள வேண்டும். இறுதியில் உயிர் பிரியும் வரை ஏதும் உட்கொள்ளாமல் விரதம் மேற்கொள்ள வேண்டும் உடல் துன்பம் கருத்தை விரைவில் உயிர் பிரிய வேண்டும் என்று நினைக்கக் கூடாது 60 நாட்கள் வரை விரதம் மேற்கொள்ள வேண்டும். சல்லேகனை என்னும் இச்சொல் ஆராதனை, சீதி, பஞ்ச நமஸ்காரம், பண்டித மரணம் சன்யாசம், சமாதி என்று சொற்களாலும் குறிக்கப்படுகிறது

**கொங்கு நாட்டுச் சமண இலக்கியங்கள்**

சீவக சிந்தாமணி, சூளாமணி, நன்னூல் பெருங்கதை மயிலைநாதர் உரை நேமிநாதம் அகப்பொருள் விளக்கம் வச்சணந்தி மாலை சிலப்பதிகார அரும்பத உரை அடியார்க்கு நல்லார் உரை ஆகியன கொங்கு நாட்டில் தோன்றிய சமண சமயம் சார்ந்த நூல்களாகும் மேலும் உவேசா அவர்களின் கருத்துப்படி சீவக சிந்தாமணி கொங்கு நாட்டு இலக்கியமாகிறது.

சமண சமயத்தின் பாதிப்பால் அறம்பாடும் முறை உருவாகியிருக்கலாம். சமண முனிவர்கள் அவர்களை மீறி ஓர் அநீதி நிகழ்ந்தால் அந்த இடத்துக்குச் சென்று உண்ணாநோன்பிருந்து உயிர்விடுவார்கள். அஞ்சினான் புகலிடம் என்ற அமைப்பு சமணர்களுக்கு உரியது. சமண முனிவர்கள் எல்லை வகுத்து அமைத்த அந்த இடத்துக்குள் எவரும் எவரையும் கொல்லக்கூடாது. அப்படி கொல்லப்பட்டால் கொன்றவன் வாசலில் அனைத்து சமண முனிவர்களும் உயிர் துறப்பார்கள். அதன்பின் அந்த மன்னனும் மக்களால் வெறுக்கபடுவான். அதே மனநிலை அறம்பாடுவதில் காணக்கிடைக்கிறது.

**துணைநூற்பட்டியல்:**

1. கொங்குநாட்டு வரலாறு -கோ.ம. இராமசந்திரன் செட்டியார்.
2. கொங்குநாட்டுச் சமுதாய ஆவணங்கள் - புலவர் செ. இராசு
3. தமிழ் இலக்கிய வரலாறு - மு. அருணாச்சலம்
4. வேளிர் வரலாறு- மு. இராகவ ஐயங்கார்
5. கொங்கு நாடும் சமணமும் - புலவர் செ. இராசு
6. ஈரோடு மாவட்டச் செப்பேடுகள்.

# சங்க இலக்கியத்தில் மகளிர் அணிகலன்கள்

***முனைவர் சு.சாந்தி,** எண்.2/5, சுப்ரபாத் பிளாட், ஆறுமுகம் தெரு, வ.உ.சி.நகர், பம்மல், சென்னை-75.

**முன்னுரை**

சங்ககாலப் பெண்கள் ஆடைகளினால் முழுவதும் மறைக்கப்பெறாத தம் உடலை அணிகலன் பூண்டு மறைத்தனர். மகளிர் பல்வேறு அணிகலன்களினால் தம்மை ஒப்பனை செய்து கொண்டனர். யவனர் ஏற்றி வந்து இறக்கிய பொன்னும் மன்னர் பகைவரிடமிருந்து கவர்ந்து கொணர்ந்த பொன்னுமஇ நாட்டிலே மண்ணைத் தோண்டியுமஇ அரித்தும் எடுத்த பொன்னும் தமிழகத்தில் எங்கும் மலிந்து கிடந்தன. முத்தும் பவளமும் இதர மணிவகைகளும் இழைத்துப் பலவகையான அணிகலன்கள் செய்யப்பட்டன. அவ்வகை அணிகலன்கள் சிலவற்றைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**அணிகலன் அணிவதற்கான காரணங்கள்**

பெண்கள் வாழ்வில் அணிகலன் முக்கியமானதொரு இடத்தைப் பெற்றுள்ளது. பெண்கள் நகை அணிவதற்கான காரணங்களும் உள்ளன. இது உடல் ஆரோக்கியத்தைப் பேண உதவும். தங்கம் உடலை குளிர்ச்சியாக வைத்திருக்க உதவுகிறது. அதனால் 'பொன்' எப்பொழுதும் உடலைத் தொட்டுக் கொண்டிருப்பதற்காகவும் நாளடைவில் உடலின் அழகை அதிகரிக்கவும் இதனை பயன்படுத்தினர். 'வெள்ளி' நம் உடலின் வெப்பத்தை அகற்றி குளிர்ச்சியாக்கும். மோதிரம் அணிவதால் இதயக் கோளாறுகள் மற்றும் வயிற்றுக் கோளாறுகள் நீங்க உதவும் என்ற நம்பிக்கை மக்களிடையே நிலவுவதாலும் சமூக மதிப்பு கருதியும் அணிகலன்கள் அணியப்படுகின்றன.

**அணிகலன் - சொற்பொருள் விளக்கம்**

அணிகலன் என்பதற்கு பல்வேறு பெயர்கள் வழங்கப்பட்டு வருகின்றன. **"அணி என்பது ஆடை ஆபரணங்களை உடலில் தரித்தல் பூசுதல் நகை" என்றும் அணிகலன் என்பது நகை போன்ற அலங்கார பொருட்கள்"**1 என்றும் நர்மதாவின் தமிழ் அகராதி பொருள் கூறுகின்றது.

மதுரைத் தமிழ் பேரகராதி **"அணிகலன் என்பதற்கு ஆபரணம் நகை பணிகலன் அனியான்"2** என்றும் பொருள் தருகின்றது. அணி என்ற சொல்லுக்கு அழகுஇ அலங்காரமஇ ஒப்பனைஇ கோலமஇ திரட்சிஇ போன்ற பல பொருட்கள் உண்டு. அணிந்து கொள்வது அல்லது அழகு தருவது அணி எனப்படும்.

**அணிகலன் உருவாக்கும் முறை**

**சங்க கால மக்கள் அணிகலன் செய்யும் முறையே**

**"……….. மெழுகு ஆன்று**
**ஊது உலைப் பெய்த பகுவாய்த் தெண்மணி"** (குறுந் :15:3-4)

என்னும் தொடரால் அறியலாம். "உரு அமைப்பதற்குப் பயன்பட்ட மெழுகு (அரக்கு) உருகி முடிந்தவுடன் ஊது உலையின் பொன் செய்து உருவாக்கி பிளந்து வாயினை உடைய தெள்ளிய மணிகள்" என்பது மேற்காண் அடிகளின் பொருளாகும். இதனின்று அரக்கினால் வடிமைக்கப்பட்ட அச்சுகளில் ஊற்றி அணிகலன்களை உருவாக்கியிருக்கின்றனர் என்பதை அறிய முடிகிறது.

**மகளிர் அணியும் அணிகலன்கள்**

சங்க மகளிர் அணிகலன்களுக்கு பெரும்பான்மையான முக்கியத்துவம் அளித்து வாழ்ந்து வந்துள்ளனர். "பண்டைத் தமிழகத்துப் பெண்கள் ஆடைகளினால் முழுவதும் மறைக்கப் பெறாத உடலை அணிகலன் பூண்டு மறைத்தனர். (கே.கே.பிள்ளை தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் ப.178) என்றால் மிகையாகாது.

**கழுத்தணிகள்**

பொருள் தேடும் பொருட்டுப் பிரிகின்ற தலைவனிடம் தோழி செலவு தவிர்க்கத் தூண்டுவாளாய்க் கூறும்போதுஇ

**"பொலம்பசும் பாண்டிற் காசு நிரை அல்குல்**
**இலங்குவளை மெந்தோள் இழை நிலை நெகிழ"** (ஐங். 310:1-2)

என்கிறார். பொன்னாலான பசுமையான வட்டவடிவக் காசுகள் (பாண்டில்) அமைந்து அழகு செய்யும் அல்குலை உடைய தலைவியின் மென்தோளில் அணிந்த இழைகள் தம் நிலையை விட்டு நெகிழ்ந்தோடும் என்பதிலிருந்து பொன்னாலான காசுகளைத் தொடுத்து அணிந்திருக்கின்றனர்.

**"பொலங்காசு நிரைத்த கோடு ஏந்து அல்குல்**
**நலம் கேழ் மாக்குரல் குழையொடு துயல்வர"** (அகம்.269:15-16)

என்னும் வரிகள் 'பொன்னால் செய்யப்பட்ட காசுகளை அணிந்த உயர்ந்த அல்குல்' என்று பொருள் பகர்கின்றன.

**"பொலம் செய் காசின் பொற்பத் தாஅம்"** (அகம்:363:9)

என்பதனாலும் சங்க மகளிர் பொன்னாலான காசுகளை அணிகலன்களாக்கி உள்ளனர் என்பது புலப்படுகின்றது.

**கைகளில் அணியும் அணிகலன்கள்**

மாணிக்கமும் வயிரமும் அழுத்திய சூடகமஇ செம்பொன்வளைஇ நவமணிவளைஇ சங்கவளைஇ பவளவளைஇ வாளைமீனைப் போன்று இயற்றப்பட்ட மாணிக்க மோதிரம் மோசை என்னும் மரகதக் கடைசெறி ஆகிய அணிகளை அணிந்தனர் என்பதைஇ

**"ஒள்இழை மகளிர் இலங்கு வளைத்தொடுவம்**
**மெல்விரல் மோசை போல காந்தள்"** (நற்றி.188:3-4)

மகளிர் வளையொரு பிணிப்புற்ற மெல்லிய விரலிலே விரலணியை அணிந்தனர் என்று நற்றிணை கூறுகிறது. மேலுமஇ

**"சித்திரச் சூடகம் செம்பொன் கைவளை**
**புரியகம் வால்வளை பவழப் பல்வளை"3**

என்ற அணிகளை அணிந்ததாக சிலம்பு கூறுகிறது.

தலைவன் பொருள் ஈட்டுவதற்காக தலைவியை விட்டு பிரிகின்றான். இப்பிரிவினால் தலைவியின் உடல் மெலிந்து கைவளை கழன்றாலும் சிறிய வளையல் அணிந்து உடல் மெலிவினைப் புறத்தார்க்குப் புலனாகாமல் மறைப்பதைப் பற்றி

**"தொல்நிலை நெகிழந்த வளையள் ஈங்குப்**
**பசந்தனள்மன் என்தோழி"** **(குறுந் :303-4)**

என்று குறுந்தொகைப் பாடல் கூறுகிறது. இக்கருத்தையே

**"அனையள் என்று அளிமதி பெரும! நின் இன்று**
**இறை வரை நில்லா வளையள் இவட்டு"** (கலி.125:22)

என்னும் தொடரால் அறியலாம்.

**காதணிகள்**

காதில் அணியும் அணிகலன்கள் காதணி எனப்பட்டது. காதணியாக குதம்பை, சீதேவியார் வலம்புரிச்சங்குஇ பூரப்பாளைஇ தென்பல்லிஇ வடபல்லி அகிய அணிகளை அணிந்திருந்தனர் நெல்லைத் தின்ன வந்த கோழிகளின் மேல் பெண்கள் தம் குழைகளை கழற்றி எறிந்த செய்தியை

**"கோழி யெறிந்த கொடுங்காற் கணங்குழை**
**பொற்காற் புதல்வர் புரவி இன்று உருட்டும்**
**முக்காற் சிறுதேர் முன்வலி விலக்கும்"** (பட்டி.23-25)

என்று பட்டினப்பாலை கூறுகிறது. காதணி அணியாத மகளிர் எவரும் இல்லை என்றே கூறலாம். பாடினியின் கேசாதிபாத வருணனையில்

**"பூங்குழை ஊசற் பொறை சால் காதின்"** (பொரு.30)

என்பதனால் 'மகரக் குழைகள் அசைந்தாடும் காதுகள்' என்கிறார் ஆசிரியர். காதணி எனச்சொல்லப்படும் குழைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வடிவத்தில் காணப்படும். நெடுநல்வாடையில் தலைவி மகரக் குழை அணிந்திருந்ததைப் பற்றி

**"நெடுநீர் வார்குழை களைந்தெனக் குறுங்கண்**
**வாயுறை அழித்திய வறிதுவிழ் காதின்"** (நெடுநல்:139-140)

என்ற பாடல் வரிகள் மூலம் அறியலாம்.

**காப்பு அணிகலன்**

போர்மேற் சென்ற நெடுஞ்செழியனைப் பிரிந்து வருந்தும் தலைவி புனையா ஓவியமாக வீற்றிருந்தாள். அப்பொழுது வலம்புரிச் சங்கினை அறுத்துச் செய்யப்பட்ட வளையல் அணிந்து ' காப்பு நாண்' (கடிகை நூல்) கட்டியிருந்தாள் என்பதை.

**"வலம்புரி வளையொடு கடிகைநூல் யாத்து"** (நெடு:142)

என்னும் தொடரால் அறியலாம். தலைவனைப் பிரிந்த தலைவி அணிகலன்களைத் தவிர்க்க முடியாது. ஆதலால் உயர்ந்த அணிகளைத் தவிர்த்து சாதாரண அணிகளுடன் மனக்கட்டுப்பாட்டிற்காகக் கடிகை நூலும் கட்டியிருந்தாள் என்பதை இதன் மூலம் அறியமுடிகிறது.

**காலணிகள்**

காலில் அணியும் அணிகலன்களே காலணி எனப்பட்டது. பழந்தமிழ் மக்கள் பல்வேறு விதமான அணிகலன்களை காலில் அணிந்திருந்தார்கள். அவ்வணிகலன்கள் பொனஇ வெள்ளியால்

செய்யப்பட்டவை ஆகும். செல்வந்தர் வீட்டு குழந்தைகளின் சிறிய கால்களில் தவளைவாய் போன்ற பொன்னால் செய்த கிண்கிணி பொலிவுற்று விளங்கும் என்பதை,

**"செல்வச் சிறா சீறடிப் பொலிந்த**
**தவளை வாஅய பொலம் செய் கிண்கிணிக்"** ( குறுந்.148:11-2)

என்ற குறுந்தொகைப் பாடல் மூலம் புலப்படுகிறது. சங்ககாலத் தாய் தம் மகவிற்குப் பற்பல அணிகலன்களைப் பூட்டி அழுகுபார்த்து மகிழ்ந்துள்ளார். இதனைஇ

**"காலவை சுடுபொன் வளைஇய ஈர்அமை சுற்றொடு**
**அழற்புறம் தந்த செய்வுறு கிண்கிணி"** (கலி.85:12-13)

என்னும் வரிகள் உணர்த்துகின்றன. மேலும்

**"இருங்கடல் முத்தமும் பல்மணி பிறவும் ஆங்கு**
**ஒருங்கு உடன்கோத்த உருள்அமை முக்காழ்"** (கலி.85:12-13)

என்பதனால் கடல் முத்தும் பல மணிகளும் பிறவும் ஒன்றாகச் சேர்த்து மூன்றுவட மாலை அணிவித்துள்ளதை மேற்காண் வரிகள் உணர்த்துகின்றன.

பெண்கள் கால்விரல்களில் மோதிரம் அணியும் பழக்கம் பண்டைய காலத்துல் இருந்தது. மேலும் பெண்கள் அணிந்த சிலம்புகளில் முத்தையும் மாணிக்கத்தையும் பரல்களாக இடுவது வழக்கமாக இருந்தது. கால்விரலில் மோதிரம் பரியகம், நூபுரம், அரியகம், பாடகம், சதங்கை போன்ற அணிகலன்களை காலில் அணிந்தனர். இதனை,

**"பரியகம் நூபுரம் பாடகம் சதங்கை**
**ஆரியகம் காலுக்கு அமைவுற அணிந்து"4**

பெண்கள அழகிய காலில் பரியகம் சதங்கை கிண்கிணி சிலம்பு போன்ற ஆபரணங்கள் அணிந்திருந்ததை சிலப்பதிகாரம் கூறுகிறது.

குழந்தை பிறந்து ஐந்தாம் நாள் குழந்தைக்கு ஐம்படைத்தாலி அணிவித்தல் ஒரு மரபாகப் போற்றப்படுகிறது. இந்த ஐம்படைத்தாலி தீய சக்தியிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் என்ற நம்பிக்கை உள்ளது. கழுத்தில் ஐம்படைத்தாலியும் புலிப்பல் தாலியும் அணிந்தனர் என்பதை,

**"…………….பொன்னொடு**
**புலிப்பல் கோத்த புலம்பு மணித்தாலி"** (அகம்:7:17-18)

என்று அகநானூறு கூறுகிறது. சுறாமீனைப் போன்றும்இ இதயத்தை போன்றும் இலச்சினைகள் பொருத்தப்பட்ட மோதிரங்களை அணிந்திருந்தனர். இடையில் மணியும் பவழமும் கோர்த்த அரைஞாண் அணிந்தனர். காலில் மணிகள் உள்ள சதங்கைகள். பொன் இரட்சைச் சரிகள் காலில் அணிந்தனர். சதங்கைகளின் பூட்டுவாய்கள் தேரையின் வாய்போன்ற அமைப்பினை உடையது என்பதை,

**"தொடியோர் மணலின் உழக்கி அடியார்ந்த**
**தேரைவாய் கிண்கிணி ஆர்ப்ப"** (கலி.86:8-9)

என்று கலித்தொகை கூறுகிறது.

**முடிவுரை**

சங்க கால மகளிர் இயற்கைப் பொருட்களையும் செயற்கைப் பொருட்களையும் அணிகலன்களாக அணிந்தும் அணிவித்தும் மகிழ்ந்திருக்கின்றனர். அணிகலன்கள் பயன்பாட்டு அடிப்படையிலும் அணியும் சூழல் அடிப்படையிலும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. அணிகலன்கள் உருவாக்கும் முறையும் விளக்கப்பட்டுள்ளது.

அணிகலன்களைப் பெண்கள் அதன் பயனை உணர்ந்து அணிந்துள்ளனர். அணிகலன்களைத் தங்கள் மேனியை அழகுபடுத்திக் கொள்வதற்காக மட்டும் இல்லாமல் அதனை ஒரு பாரம்பரியமாக மக்கள் பயன்படுத்தி வந்துள்ளனர். பொன்னால் செய்த அணிகலன் மட்டும் இல்லாமல் நவரத்தினங்களைப் பயன்படுத்தியும் பல்வேறு வகையான அணிகலன்களை அணிந்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

**சான்றென் விளக்கம்**

1. நர்மதாவின தமிழ்ப் பேரகராதி ப.31.
2. மதுரைத் தமிழ்ப் பேரகராதி ப.47.
3. சு.செல்லப்பன் (உ.ஆ). சிலப்பதிகாரம் பா.வ.6:95.
4. மேலது பா.வ.6:85

# நாட்டுப்புற வழிபாட்டில் சிறுதெய்வ வழிபாடு

***த.தமிழ்ச்செல்வி,** ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத்துறை, மஹேந்ரா கலை அறிவியற் கல்லூரி (தன்னாட்சி), காளிப்பட்டி – 637501, நாமக்கல் மாவட்டம்.

**முன்னுரை**

இலக்கியங்களுக்கெல்லாம் தாயாக விளங்குவது நாட்டுப்புற இலக்கியமாகும். நாட்டுப்புற மக்களின் கலைகளையும், இலக்கியங்களையும், நம்பிக்கைகளையும், சமுதாய நிலையையும், பண்பாட்டினையும், அவர்களின் உணர்வுகளையும் பற்றி அறிந்து கொள்ளும் இயல் நாட்டுப்புறவியலாகும். எழுத்திலக்கியங்கள் காலத்தைக் காட்டும் கண்ணாடி என்றால் நாட்டுப்புற இலக்கியங்கள் சமுதாயத்தைக் காட்டும் கண்ணாடியாகும். நாட்டுப்புற இயல், இலக்கணம் எனும் சிறைக்குள் சிக்காதது; கட்டற்ற காட்டாறாய்ப் பெருகி வருவது; சமுதாயத்தின் உயிர்த் துடிப்பாய் விளங்குவது; உண்மையின் பிரதிபலிப்பாகவும், உணர்ச்சி உந்துதலின் வெளியீடாகவும் விளங்குவது ஆகும். அவ்வகையில் நாட்டுப்புற வழிபாட்டில் சிறுதெய்வ வழிபாடு குறித்து இக்கட்டுரை ஆராய்கிறது.

மனித இனமானது முற்காலத்தில் இருப்பிடம், உணவு, உடை போன்றவற்றிற்கு இயற்கையைச் சார்ந்திருந்தது. இயற்கை மனிதனுக்கு உதவிய காரணத்தால் தன் நன்றியைத் தெரிவிக்கும் பொருட்டு மனித இனம் முதன்முதலில் இயற்கையைத் தெய்வமாக வழிபட ஆரம்பித்தது. அதன் பிறகு முன்னோர்களால் தங்களது வாழ்வில் நன்மை தீமை ஏற்படக்கூடும் என்று எண்ணி அவர்களையும் வழிபடத் தொடங்கினர். அவ்வழியில் வழிபடத் தொடங்கியது தான் சிறுதெய்வ வழிபாடு. மனத்துயரத்தை இறைவனிடம் கூறினால் அத்துயரும் மாறும் என்பது மனிதனின் ஆழ்மனக்கொள்கை. மனிதன் உயர்வாக எவற்றைக் கருதினானோ அவையெல்லாம் வழிபாட்டுப் பொருளாயின.

**சிறுதெய்வத் தோற்றம்**

பொதுவாக கிராம வாழ்க்கையை நாட்டுப்புற வாழ்க்கை என்று சொல்வதுண்டு. அந்த நாட்டுப்புற வாழ்க்கையோடு இணைந்ததுதான் நாட்டுப்புறச் சமயம். ஆகவே, ஒரு கிராமத்து மக்களின் வாழ்வியலை அறிய வேண்டுமானால் அக்கிராமத்திலுள்ள கோயில்களையும் தெரிந்து கொள்ள வேண்டும். கிராமத்திற்குச் சிறுதெய்வங்கள்தான் உயிர்நாடி. இச்சிறுதெய்வம் கிராமமக்களால் உருவாக்கப்பட்டவை. தங்கள் வாழ்க்கை மேம்பாட்டிற்காக வழிமுறையினர் சீர்குலையாமல் இருப்பதற்காக அமைக்கப்பட்டவைதான் சிறுதெய்வங்கள் என்பது நமது முன்னோர்களின் கருத்தாக அமைந்திருந்தது.

இச்சிறுதெய்வ வழிபாட்டு முறையில் மக்களின் தேவைகளே அதிகமாக இருக்கும். அவர்களின் தேவைக்குத் தகுந்தவாறு அவற்றில் மாறுபாடு ஏற்படும். சிறுதெய்வங்கள் மக்களின் மனதில் உயர் நிலையில் வைத்துப் போற்றப்படுகின்றன. சிறுதெய்வம் என்ற சொல் முதன்முதலில் நாவுக்கரசர் தேவாரத்தில் பயின்று வந்துள்ளது . **“சென்று நாம் சிறுதெய்வம் சேர்வோம் அல்லோம்”** என்று குறிப்பிடுகிறார். **“நலிவுறு சிறுதெய்வம்”**என்று சிறுதெய்வத்தைப் பற்றி இராமலிங்கர் குறிப்பிடுகிறார்.

**சிறுதெய்வ வகைபாடுகள்**

நாட்டுப்புற சிறு தெய்வங்களைப் பலவகைப் படுத்தலாம். ஆண்தெய்வங்கள், பெண் தெய்வங்கள், துணைத் தெய்வங்கள், மாலைத் தெய்வங்கள், சமாதித் தெய்வங்கள், வீட்டுத் தெய்வங்கள், குலதெய்வங்கள் மற்றும் பிற தெய்வங்கள் என்றும் பிரிக்கலாம்.

**சிறுதெய்வ தோற்றம்**

1. பிறப்பிலேயே தெய்வமாகப் பிறத்தல்.
2. மூலக்கோயிலிருந்து பிற மண் எடுத்து வந்த புதிய இடத்தில் உருவாக்கப்படும் பிற மண் தெய்வங்கள்.
3. பூமியிலிருந்து, பெட்டியிலருந்து மற்றும் பிற வழிகளில் கண்டெடுக்கப்படும் தெய்வங்கள்.
4. மரணத்தில் தோன்றும் தெய்வங்கள். (கொலை, தற்கொலை, விபத்து மற்றும் இயற்கை)

**கொலை**

1. போரில் கொல்லப்படல்.
2. உயர் சாதிப் பெண்ணை மணந்ததால் கொல்லப்படல்.
3. நடத்தையில் சந்தேகம் காரணமாகக் கொல்லப்படல்.
4. கர்ப்பிணியாக்கிக் கொல்லல்.

**தற்கொலை**

1. தீயில் விழுந்து இறத்தல்.
2. கலப்பு மணத்தால் கணவன் கொல்லப்பட்டதால் அவனுடன் தீயில் விழுந்து இறத்தல்.
3. கணவனை இழந்து உடன்கட்டை ஏறுதல்.

**விபத்து**

1. ஆற்று வெள்ளத்தில் மற்றும் கிணற்றில் மூழ்கி இறத்தல்.
2. பாம்பு கடித்து இறத்தல்.
3. தீ விபத்தில் இறத்தல்.

**இயற்கை**

1. பருவமடையும் வயதில் இறத்தல்.
2. உடல் நலமின்றி இறத்தல்
3. நிறை மாத கர்ப்பிணியாக இருத்தல்.

மரணமுற்றுத் தெய்வமானவர்களுள் ஆண்களை விடப் பெண்கள் மிகுதியாக உள்ளனர். விபத்து மற்றும் இயற்கையில் மரணமடைந்தவர்களைவிட கொலை மற்றும் தற்கொலை செய்து கொண்டவர்களே மிகுதியாகத் தெய்வமாக்கப்பட்டுள்ளனர். அனைத்து இறப்புகளிலும் ‘அகால மரணம்’ என்ற ஒரு பொதுத்தன்மைக் காணப்படுகிறது. அகால மரணமடைந்தவரின் ஆவி துன்புறுத்தியது, கனவில் வ்நது கூறியது, தன்தெய்வீகத் தன்மையை வெளிப்படுத்தியது. அதனால் வழிபாடு தொடங்கப்பட்டது என்பதே சிறுதெய்வக் கதைகளின் முடிவுகளாக இருந்தன.

**குலதெய்வம்**

**குருவை மறந்தாலும் குலதெய்வத்தை மறவேன்**
**குலதெய்வத்தைக் கும்பிட்டுக் கும்மியடி**

என்ற நாட்டுப்புறப்பாடல் வரிகள் குலதெய்வத்தின் சிறப்பையும் முக்கியத்துவத்தையும் பறைசாற்றுவனவாக அமைகின்றன. மனித சமூகத்தில் நிலவும் இனம் (சாதி) என்னும் பெரிய நிறுவனத்தில் ‘குலம்’ என்பது கிளை நிறுவனத்தின் தோற்றம். ஒரு தனிக்குடும்பத்தில் கால வளர்ச்சியில் பல்வேறு குடும்பங்களாக விரிவடையும் போது அவை ‘குலம்’ உறவையும் ஒத்த உறவினர்களையம் தன்னகத்தே கொண்ட பல்வேறு குடும்பங்களின் கூட்டிணைப்புக் குலமாகத் தோற்றம் பெறுகிறது. இவ்வாறாக ஒரு மூதாதையரின் மரபு வழியில் தோன்றியவர்கள், தங்களைப் பங்காளிகள் என்று கூறிக்கொள்கின்றனர். இவ்வாறாக ஒரு வழிச் சகோதரர்கள் மட்டும் வழிபடும் தெய்வம் ‘குலதெய்வம்’ என்று பொதுவாக பெயர் பெறுகிறது. இக்குலதெய்வ வழிபாட்டை ஓர் இனத்தவர் மட்டும் வழிபடும் குலதெய்வமென்றும் ஓர் இனத்தவருள் ஒரு பங்காளிகள் மட்டுமே வழிபடுவதை குலதெய்வம் என்று குறிப்பிடுவர்.

குலதெய்வம் கடவுள் (அ) பரம்பொருள், நன்கு திருவருள் மொழியும் நிலையில் மேல்நிலைத்தொட்டி எனக் கொண்டால், அந்தத் தொட்டியுடன் தொடர்பு கொண்டு நீராகிய கருணையைக் கொண்டு வரும் நீர்க் குழாய்களைப் போன்றவையே குலதெய்வங்களாகும்.

அதன்படி உலகச் சமயங்கள் உணர்த்தும் கடவுள் (அ) பரம்பொருளிலிருந்து மக்களுக்குத் தேவையான வரங்களை (வாழ்க்கை நலன்களை) அவரவர் குலதெய்வங்கள் அவ்வவ் குலத்தவர்களுக்குப் பெற்றுத் தருகின்றன என அறிய முடிகிறது.

முன்னோர் ஒருவரின் மரபு வழியில் தோன்றியவர்களாய் அமைந்த அமைப்பே குலமாகிறது. முன்னோரது குடும்பத்தில் இறந்த ஒருவரைக் குடும்ப தெய்வமாக வழிபட்டனர்.

இக்குடும்பம் பல குடும்பங்களாக விரிவடைந்து குல தெய்வமாகிறது. ஒவ்வொரு குடும்பத்திலும் அவரவர் குடும்ப மூதாதையரைக் குடும்ப தெய்வமாக வைத்து அதற்கு வழிபாடு செய்வர். இத்தெய்வங்கள் குலதெய்வமாக வளர்ச்சி பெறுகிறது. இன்றைக்கு வழக்கிலுள்ள குலதெய்வங்களில் பெரும்பாலானவை குடும்ப தெய்வமாக இருந்து வளர்ச்சி பெற்றவை ஆகும் என்று தே.ஞானசேகரன் அவர்கள் கூறுகின்றார்.

ஒரு குறிப்பிட்ட மூதாதையர் குடும்ப நலன் பொருட்டு வாழ்ந்து உயிர் துறந்த ஒருவரை அக்குடும்ப வழியினர் தெய்வ நிலைக்கு உயர்த்தியுள்ளனர். ஆகையால் அக்குறிப்பிட்ட குடும்பத்தவர்களுக்குக் குடும்ப தெய்வமாக விளங்கிய தெய்வம், அக்குடும்பம் குலமாக வளர்ச்சியடைந்தபோது குலதெய்வமாக வளர்ச்சியடைந்தது. ஒரு வீட்டிற்கு தெய்வமாக இருந்தது பல வீடுகளாக உறவுமுறை விளையும்போது குலதெய்வமாக மாறுகிறது. பங்காளி முறையினரால் வணங்கப்படும் தெய்வம் குலதெய்வம் என்று கூறும் துளசிராமசாமியின் கூற்று எண்ணத்தக்கது.

**இலக்கியங்களில் குலதெய்வம்**

குலதெய்வம் குறித்த செய்திகள் பண்டைத் தமிழ் இலக்கியங்களில் பரவலாகக் காணப்படுகின்றன. ஐம்பெருங்காப்பியங்களில் முதற்காப்பியமான சிலப்பதிகாரத்தில் ‘மணிமேகலை’ என்னும் குலதெய்வம் பேசப்படுகிறது. அத்தெய்வம் காப்பிய நாயகன் கோவலனின் முன்னோர் ஒருவன் கடலின்கண் நடு இரவில் மரக்கலம் ஒன்றின் மீது பயணப்பட்ட போது, சூறைக்காற்றின் பெருத்த அலைகளினால் அம்மரகலம் உடைந்தது. அப்போது ‘மணிமேகலை’ என்னும் தெய்வம் அவன் முன்தோன்றி அவனைக் காப்பாற்றியது. அத்தெய்வத்தால் அம்முன்னோர் காப்பாற்றப்பட்டதால், அவனது குலமும் தழைத்தோங்க முடிந்தது. அதனை நினைவுற்ற கோவலன், தன்குலத்தை நிலைபெறச் செய்த தெய்வத்திற்குரிய நன்றியாக நினைந்து மாதவி வழிபெற்ற தன்மகளுக்கு ‘மணிமேகலை’ என்று பெயர் சூட்டியதால் அக்காலத்தில் குலதெய்வச் சிந்தனை இருந்தது என்பதனை,

**விஞ்ஞையிற் பெயர்த்து விழுமம் தீர்க்க**
**எங்குல தெய்வம் பெயரில் கிடுகென**
**அணிமே கலையார் ஆயிரங் கணிகையர்**
**மணிமேகலையென வாழ்த்திய ஞான்று**

எனச் சிலப்பதிகார அடிகள் புலப்படுத்துவதை இங்கு ஒப்பநோக்குதல் சாலப் பொருந்தும்.

சிலம்பில் மற்றொரு தெய்வமும் பேசப்படுகிறது. அத்தெய்வம் கண்ணகி. இத்தெய்வம் குறவர் கூட்டத்தவரால் குலதெய்வமாக அழைக்கப்பட்டதாக இளங்கோவடிகள் சுட்டுகிறார். கண்ணகி தன் கணவனை இழந்து, அன்பால் வானவர் மலர்மாரி பொழிவதையும், பின் அவள் தன் கணவனுடன் வான ஊர்தியில் ஏறிச் செல்வதையும் கண்டு வியந்த குறமக்கள் கண்ணகியைத் தம் குலதெய்வமாக வழிபாடு செய்ததை சிலம்பு எடுத்துரைக்கிறது.

**இவள் போலும் நங்குலக்கோர் இருந்தெய்வம் இல்லையாதலால்**
**சிறுகுடியீரே சிறுகுடியீரே**
**தெய்வங் கொருமன் சிறுகுடியீரே**

என்று கூறப்பட்டுள்ளது.

‘இத்தெய்வம் போன்று இதுகாறும் நம் குலத்திற்கு ஒரு தெய்வம் வாய்த்ததில்லை. ஆதலின் இத்தெய்வத்தை நம்குல தெய்வமாகக் கொள்ளுமின் என்று அறிவித்தபடியாம்’ என்று சோமசுந்தரனார் மேற்கண்ட சிலம்பு அடிகளுக்கு விளக்கம் தந்துள்ளதையும் ஒப்பிட்டுக் காணமுடிகிறது.

குறமகளிர் கருத்தோடு கவுந்தியடிகள் கண்ணகியைத் தெய்வ நிலைக்கு உயர்த்தி, அத்தெய்வம் போல் வேறொரு தெய்வத்தைத்தான் காணவில்லை என்றுரைத்தார். இதனை,

**கற்புக்கடம் பூண்ட வித்தெய்வமல்லது**
**பொற்புடைத் தெய்வம் யாங்கண் டிலமால்**

என்ற அடிகளால் உணரமுடிகிறது.

மணிமேகலைக் காப்பியத்திலும் ‘மணிமேகலை’ தெய்வம் பற்றிய செய்தி காணப்படுகிறது.

**இந்திர கோடனை விழாவணி விரும்பி**
**வந்துகண் குறூஉம் மணிமேகலா தெய்வம்**
**புதியகற் துறையுமோர் பைந்தொடியாகி**
**மணியறைப் பீடிகை வலங்கொண் டோங்கி**

என்ற அடிகள் மூலம் அறியலாம். உதயகுமரன் மணிமேகலையின்மீது விருப்பம் கொண்டு மணிமேகலையைத் தேடி மணிபல்லவத்தீவிற்கு வந்தபோது அவனிடமிருந்து ‘மணி மேகலை’ என்ற தெய்வம், மணிமேகலையின் உருவம் தாங்கி மணிமேகலையைக் காப்பாற்றியது.

சீவகசிந்தாமணியிலும் குலதெய்வம் பற்றி காந்தருவ தத்தையார் இலம்பகத்தில் ‘குடி தெய்வம்’ என்ற சொல்லாட்சி பயன்படுத்தப்பட்டிருந்தது.

**சங்குடைந் தனைய வேண்டா**
**மரைமலர்த் தடங்கள போலும்**
**நங்குடித் தெய்வங் கண்டீர்**

எனச் சீவகசிந்தாமணிக்கு உரையெழுதிய புலவர் அரசு, சோமசுந்தரனார் ஆகிய இருவரும் மேற்ச்சொல்லப்பட்ட அடிகளுக்கு,

‘சங்கு விரிந்தாலனைய வெண் தாமரை மலர்கள் நிறைந்த குளங்கள் போன்ற நம்குடிக்கு(அக்கலுழவேகன்) தெய்வம் என அறியுங்கோல்’என்று விளக்கம் உரைப்பர்.

**திருவடங் கிடந்த மார்ப்**
**லிங்கடி பிழைப்ப தன்றா**
**லெங்குல மென்று சொன்னான்**

என்பதிலிருந்து சீதத்தன் கலுழவேகனை நோக்கி எம் பாட்டன் இங்ஙனம் நின்னைத் தெய்வம் என்று சொன்னான். அதனால் எங்குடி நின் அடிக்குப் பிழைப்பதன்று என்றதினால் கலுழவேகன் பின்னாளில் குலதெய்வமாக வளர்ச்சியடைந்திருக்கலாம் என்று கருதுவதற்கு இடமுண்டு.

இவ்வாறு உள்ள குலதெய்வம் புராணச்சார்பு கொண்டதாகவும் புராணச் சார்பற்றதாகவும் விளங்குகின்றன. பெரும்பான்மையும் ஊர்ப்புற மக்களிடையே நிலவும் குலதெய்வங்கள் மரபு வழியான கதைகளைக் கொண்டுள்ளன. வரலாற்று நிலையில் போற்றப்பெறும் குலதெய்வங்களும் மக்களிடையே வழிபாட்டில் உள்ளன. புராணச் சார்புடையதாக மாரியம்மன், காளியம்மன், முருகன், சிவன், திருமால் ஆகிய தெய்வங்களைச் சுட்டலாம். வரலாற்று நிலையில் உள்ள பொம்மக்கா திம்மக்கா (மதுரை வீரன்), வெள்ளையம்மாள் (முத்துப்பட்டன்), ஆரியமாலன் (காத்தவராயன்) ஆகியோரை மக்கள் குலதெய்வங்களாக வழிபடுகின்றனர் என்பதை வரலாற்று வழி அறிந்து கொள்ள முடிகிறது.

ஒவ்வொரு காலத்திலும் தோன்றிய சிறுதெய்வங்களை மக்கள் தங்களின் குலதெய்வமாக வழிபட்டு வருகின்றனர் என்பதை அறிய முடிகிறது. சிறு தெய்வங்களிடம் புராணத்தன்மையைவிட வரலாற்றுத் தன்மையே அதிகம். அவை பெருமபாலும் சமூகத்தில் நிலவி வந்த கதாபாத்திரங்கள்தான் சிறு தெய்வங்கள் என்பதை அறியமுடிகிறது.

**முடிவுரை**

சமயம் என்பது இறைவழிபாட்டுடன் தொடர்புடையதாகும். சமயமும், சமுதாயமும், இறையும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையனவாகும். மனிதனின் பண்பட்ட உள்ளத்தினை அறிந்து கொள்ள வேண்டுமானால் அவனது இறை உணர்வினை அறிய வேண்டும். கோயில் என்பது நம் மரபில் மக்கள் சென்று இறைவனை வணங்கும் கட்டடம் மட்டுமல்ல. பல உணர்வுகளும், எண்ணங்களும், சடங்குகளும் பின்னிப் பிணைந்தவையாகும்.

இந்தியப் பண்பாட்டில் மிகப் பழங்காலத்தொட்டே நாட்டுப்புற மக்களால் நாட்டுப்புறத் தெய்வ வழிபாடு நடைபெற்றுக் கொண்டு வருகிறது. ஒவ்வொரு கிராமமும் கண்ணுக்குப் புலப்படாத சக்தியால் பிணைக்கப்பட்டு, அச்சக்தியே சிறுதெய்வமாக வழிபடப்படுகின்றது. மனித இன வரலாற்றில் விவசாயக்காலம் முதற்கொண்டு இவ்வழிபாட்டு முறை தோற்றம் பெற்றிருக்க வேண்டும். இயற்கை வழிபாட்டில் ஆரம்பித்த வழிபாடு காலப்போக்கில் சிறு தெய்வவழிபாடாக மலர்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# காயகற்ப முறைகளின் வாழ்வியல் சிந்தனைகள்

***சு.அகமது,** முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, காஞ்சி மாமுனிவர் பட்டமேற்படிப்பு மையம், இலாசுப் பேட்டை, புதுச்சேரி- 605 008.

அன்றாட வாழ்க்கைக்கு மனித உடல் ஓயாமல் செயல்படுகிறது. வேகமாக உணவு உட்கொள்ளப்படுகிறது. மக்கள் பல்வேறு தேவைக்கு உடலை வருத்தி உழைக்கின்றனர். உடலைப் பற்றிச் சிறிதும் கவலைப்படுவதில்லை. நோய்வரும்போது மட்டுமே உடலைப் பற்றி அக்கறை கொள்கின்றனர். நோய் வருமுன் காப்பாற்றுவதும் நோய் வந்துவிடின், அந்நோயிலிருந்து காப்பாற்றுவதும் காயகற்ப முறைக்கு உரியதாகும். உடலுக்குப் பல்வேறு பெயர்கள் இருந்தாலும் காயம் என்பது தனி சிறப்பிற்கு உரியது எனலாம். பல்வேறு இன்னலுக்கு உள்ளாகும் உடலைக் காயகற்பமாக மாற்றுவதால் காயசித்தி ஆகிறது. காயம் உடலையும் கற்பம் நீண்ட நாளையும் சித்தி வேதியல் முறையையும் குறிப்பனவாகும். சித்தர்கள் காயகற்ப முறையில் மனிதவாழ்க்கைக்குப் பல்வேறு உயர் சிந்தனைகளை எடுத்துக்கூறியுள்ளனர்.

**உணவு முறையில் வாழ்வியல் சிந்தனைகள்**

காலையில் இஞ்சி நண்பகல் சுக்கு மாலையில் கடுக்காய் உண்ணக் கோல் ஊன்றி நடக்கும் கிழவன் கூட நிமிர்ந்து நடக்கலாம் என்பது சித்தர் பாடல்களில் காணமுடிகிறது. அன்றாட உணவுமுறையில் இயற்கை உணவு அமைதல் வேண்டும். அவ்வாறு உணவு எடுத்து கொள்ளும் போது உடலுக்கு அதிக அளவில் ஆற்றல் கிடைக்கிறது. சரியான முறையில் உணவுகளை உட்கொள்ள வேண்டும். குறிப்பாகப் பசித்த பின் உண்ணுதல் அரை வயிறு உண்ணுதல் முதலியவற்றைப் பின்பற்ற வேண்டும்.

இயற்கையான முறையில் விளைவிக்கப்பட்ட கீரைகள், காய்கறிகள், பழங்கள், சிறுதானியங்கள் மரபுவழி அரிசிகள் முதலியவற்றை உண்ணுதல் வேண்டும். மழைநீர்க் குடித்தல் வேண்டும். அந்த அந்தப் பருவங்களுக்கு ஏற்ற உணவு முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். உடலுக்கு ஏற்றாற்போல் உணவுகளை எடுத்துக்கொள்ள வேண்டும்.

குறிப்பாக காற்று (வாதம்), தீ (பித்தம்), நீர் (கபம்) மூன்றால் மட்டுமே நோய் வரும் பிணி மூன்று என்பதைச் சித்தர் பாடல்களில் காணமுடிகிறது. கசப்பு, துவர்ப்புச் சுவைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். இவற்றை மக்கள் தவிர்த்து உண்ணுவதால் பல நோய்களுக்கு உள்ளாகிறார்கள். தாவர உணவே சிறந்தது என்பது சித்தர்களின் வழிமுறையாகும்.

**‘உணவே மருந்து மருந்தே உணவு’** என்பது பழமொழியாகும். பல மூலிகைத் தாவரங்கள் கொண்டு மனிதன் பல நோய்களைக் குணபடுத்திக் கொள்ளலாம். நோய்கள் வராமல் பாதுகாப்பாக மனிதன் இருக்கவும் அம்மூலிகைத் தாவரங்கள் பயன்படுகின்றன.

**காயகற்ப மூலிகையின் வாழ்வியல் முறைகள்**

தாவரங்களைச் செடி, கொடி, மரம், புல், பூண்டு என வகைப்படுத்தலாம். சித்தர்கள் இவற்றிலிருந்து சற்றுமாறி உள்ளனர்.

1) பொதுவான மூலிகைகள்
2) ஒளி ஊட்டும் மூலிகைகள்
3) எதிர்வினை உண்டாக்கும் மூலிகைகள்
4) கறுப்பான மூலிகைகள்
5) சாறு வரா மூலிகைகள்
6) நஞ்சு மூலிகைகள்

எனத் தாவரங்களைப் பிரிக்கின்றனர். இன்னும் பல வகைகளிலும் தாவரங்களை வகைப்படுத்தித் தொகுத்து உள்ளனர். எளிதில் கிடைக்காத தாவரங்களை வனப் பகுதிகளில் காணமுடிகிறது. குறிப்பாகச் சிவப்புக் கற்றாழை, தொழுகண்ணி, அழுங்கண்ணி, சோதி புல், வெள்ளை தூதுவளை, கருங்காந்தள், விராலி முதலியவை அடங்கும். மேற்கூறிய தாவரங்கள் கிடைக்க வில்லை என்றாலும் அனைத்து மக்களுக்கும் தெரிந்த மூலிகைத் தாரவரங்களைக் கொண்டு பல்வேறு பயன்களை அறிந்து கொள்ளலாம்.

சித்தர்கள் ஒரு குறிப்பிட்ட தாவரத்தின்மூலம் பல்வேறு நோய்களைக் குணப்படுத்த வழிமுறைகளைக் கற்றுத் தந்துள்ளனர். அவற்றை அறிந்ததே **'முருங்கை வைத்தவன் வெறுங்கையோடு போகமாட்டான்'** என்பது பழமொழி அதாவது முதுமைக் காலத்தில் கோல் ஊன்றி நடக்கமாட்டான் என்பதாகும். முருங்கைக் விதை, கீரை, பூ, காய், பிசின், சாறு, பட்டை, வேர் அனைத்து பாகங்களும் பயன்படும்.

சத்துக் குறைபாடுகளுக்கு முருங்கைக் கீரை உண்டால் விரைவில் சத்துக் கூடும். அதைப்போல் முருங்கைக் காய், பூ, ஆகியவை உண்டால் மலட்டுத் தன்மை போகும். முருங்கைப் பிசின் குளிர்ச்சி அடையச் செய்யும். இவற்றைப்போல் மற்ற பாகங்களும் பல்வேறு நோய்களுக்குத் தீர்வாக அமைகின்றன. நாட்டு முருங்கையே சிறந்தது. அதற்கு ஆற்றல் அதிகம். இயற்கையின் கொடை முருங்கை மரம் எனலாம்.

காயகற்ப மூலிகைகள் 108 - என்று கருவூரார் சித்தர் தனது வாதகாவியம் நூலில் பட்டியல் கொடுத்துள்ளார். இவர்போல் பல்வேறு சித்தர்களும் தங்களுக்கு ஏற்றாற்போல் உள்ளனர். ஒரு காயகற்ப மூலிகையை உட்கொள்ளும்போது உணவுக் கட்டுப்பாடு, பத்திய முறை, அளவு முறை, செய்முறை ஆகியவை கருத்தில் கொள்ளப்பட வேண்டும். ஒரு மண்டலம் என்பது 48 - நாள் ஆகும். அவ்வாறு உட்கொண்டால் மட்டுமே முழுப்பயனைப் பெறமுடியும். இதுவே சிறந்தது எனலாம்.

வேறுமுறையான சில காயகற்ப மூலிகைகளை உட்கொள்ளும்போது பத்திய முறைகள் தேவை இல்லை. அவற்றை எப்போது வேண்டுமானாலும் உட்கொள்ளலாம். முழுப்பலனை பெறமுடியும். காயகற்ப மூலிகையின் விதை, இலை, பூ, காய், பழம், தோல், தண்டு, பிசின், பட்டை, வேர் எனக் கூட்டாகவும் உண்ணலாம். தனித் தனியாகவும் உண்ணலாம். மனிதனின் தீராத நோய்களையும் குணப்படுத்திக் கொள்ளலாம். மற்றும் நோய் வராமல் பாதுகாப்பாக இருக்கவும் இம்மூலிகைப் பாகங்கள் உதவுகின்றன. உடல் வலிமையை உண்டாக்குகின்றன. நீண்ட ஆயுளைத் தருகின்றன. இவை காயகற்ப மூலிகையின் சிறப்புக்களாகும்.

**காயகற்ப மூலிகைகள்**

நூறாண்டு வேம்பின் சதைப்பட்டை வாங்கி நிழலில் உலர்த்தித் தூள் செய்து கருங்குன்றிச் சாற்றில் ஐந்து தடவை பாவகம் செய்து வடிகட்டிக் கற்கண்டு நாலிலொன்று சேர்த்து மண்டலம் கொள்ள சரீரம் வயிரம் போலாம். நரம்பு முறுக்கேறும். நரைதிரை மாறும். ஞானமுண்டாம். யோகத்திற்கு உறுதியாம்.

சீந்தில் ஓராண்டாகில் கணேசனைப்போல் கிழங்கு இருக்கும். கிழங்கைத் தோண்டியெடுத்து மேல் தோலைச் சீவிப்போட்டுப் பாக்குப்போல் நறுக்கிக்கொண்டு நிழலில் உலர்த்தித் தூள்செய்து எட்டில் ஒரு பங்கு சீனி சேர்த்து முன் பட்டையை ஒரு பலத்திற்கு ஒருபடி சலம் விட்டு எட்டொன்றாய்க் காய்ச்சித் தூள் சேர்த்து அந்தி, சந்தி மண்டலம் கொள்ள நரைதிரை போகும். காய சித்தியாம்.

**கீழ்க்காய் நெல்லிக் கற்பம்**

**"கோடிகாலந் தான்வாழக் கூறியக் கற்பம் விள்வேன்**
**நீடிய கீழ்க்காய்நெல்லி நிசமுடன் சூர்ணஞ் செய்து**
**நாடியிற் கொள்வீராகிற் பத்தியங் காக்கவேண்டாம்**
**வேண்டியே ஆண்டுபத்து யிப்படித் கொள்வாயாகில்**
**நீண்டாமல் மாண்டாலுந்தான் நிசகற்பந் தப்பா துண்மை**
**காண்டகு தேவரம்பை கனபணிவிடையும் செய்வான்**
**ஆண்டிடும் கோடிகாலம் கூற்றிலை நடனம் ஆள்வான்".**

**இடைகாட்டுச் சித்தர் ஞான சூத்திரம் 70, பாடல் 59.**

இந்தக் கற்பமுறை அனைவருக்கும் எளிதில் கிடைக்கக் கூடியது. கீழா நெல்லிச் செடியை முழுவதுமாகக் கொண்டுவந்து. சூரணம் செய்து கொள்ளவேண்டும். தேன் அல்லது பணவெல்லத்தில் காலை, மலை வெருக்கடி அளவு சாப்பிடவேண்டும். இப்படித் தொடர்ந்து

பத்து ஆண்டுகள் உட்கொண்டுவந்தால். தேவரும் வந்து பணிவிடைகள் உனக்குச் செய்வார்கள். கோடிகாலம் நீ வாழலாம்.

**பஞ்சமூலிகைக் கற்பம்**

1)கருங்கரிசலை, 2) கரந்தை, 3) கருநீலி, 4) பொற்றாலை, 5) வல்லாரை ஆகிய ஐந்தையும் சேர்த்து, அரைத்துப் பாக்கு அளவாகிலும் பாலில் கலக்கிந் நாள்தோறும் உண்டுவர உடல் நோயால் பீடிக்கப் படாமல் நீண்டகாலம் உறுதியாய் இருக்கும். இந்த ஐந்து மூலிகைகளையும் செங்கோட்டை உரம் வைத்துக் கறுப்பாக்கி உண்ணக் காயசித்தியாகும் என்பதில் ஐயமில்லை. ஆனால் பெண் சேர்க்கை கூடாது என்பது கற்ப விதியாகும்.

**உலோகங்களும் வாழ்வியலும்**

சித்தர்கள் தாவரங்களை மட்டும் இல்லாமல் உலோகங்களையும் மருந்தாகப் பயன்படுத்தினர். இவை நோய்களை விரைவாக குணப்படுத்தவும், உடல் பலமாகவும் உதவுகின்றன. வள்ளலார் அயச் செந்தூரத்தையும், தாமிரப் பற்பத்தையும் மிக உயர்வாகப் பேசுயுள்ளார். உடலைப் பலபடுத்தும் என்றும் புழு உண்டாகாது என்றும், சன்மார்க்கி உணவு என்றும் கூறியுள்ளார்.

இரும்புச் செந்தூரமாக உண்ணப் பத்து நாட்களில் பித்த வெட்டை, மேகம், வலி குன்மம், பித்தம், மூல வாய்வு, விக்கல், சூலை வெட்டை முதலிய நோய்கள் போகும். இளைத்தவன் இரும்பை உண்ண இரணியன்போல் உடல் வலிமைபெறும். உடல் குளிர்ச்சியடையும். உடல் தழைத்த மரம் போலாகும். நரம்பு வலுவாகும். மாந்தளிர்போல் மேனியாகும்.

**“ உருக்கச் செம்பு உயர்ந்த அருணனாம்**
**பெருக்க வேதை புகல முடியாது**
**செருக்கவே ரவிசேர்த்தே உருக்கிடில்**
**பருக்க மாற்றுப் பகர முடியாதே ”**

**(திருமூலர் வைத்தியம் ஆயிரம் 979-பாடல்)**

பெரிய மருந்து ஆராய்ச்சிக்கு கொண்டு செல்கின்றார். திருமூலர் வேதை முறைகளிலும், பல்வேறு மருந்துப் பிரிவுகளைத் தர கூடியது செம்பு என்றும் கூறுவார். சித்தர்களின் உலோக ஆராய்ச்சி என்பதை உலக ஆராய்ச்சியாகக் காணமுடிகிறது. ஐந்து வகை நில மக்களும் பிழைக்க வேண்டி பொதுவான உலோகத்தைத் தேடி அதை அடைந்து உயர்வாக எண்ணும் மக்கள் மாக்கள் ஆவார். உலோகத்தைக் கொண்டு பொன்னாக்கும் மேனியை அறிந்த மக்களே மகத்தானவர் ஆவார்.

**முடிவுரை**

காயகற்பங்களில் பலவகை உண்டு. அந்த வகையில், மூலிகை கொண்டவை, அலோகம், உலோகம் கொண்டவை, யோகப் பயிற்சிகள், பத்து வகைத் தீட்சைகள் என வகைபடுத்த முடிகிறது. பாலைவனப் பகுதியில் மூலிகைத் தாவரங்கள் மிகவும் அரிதாக இருக்கும். அவற்றிலும் மனித வாழ்விற்குப் பெரிதும் பயன்தரும் நுட்பமான தாவரத்தைக் கூறியுள்ளனர். கதிரவன், காற்று, நீர் மூன்றின் மூலமும் உயிர்வாழும் நுட்பமான வழிமுறைகளைக் கண்டுள்ளனர். அன்றாட உணவுமுறைகளை மனித வாழ்விற்குச் சிறப்பான முறையில் சித்தர்கள் வழியில் கடைப்பிடிப்பவன் உயர்வோன் ஆவான்.

# நான்மணிக்கடிகையில் மனித வாழ்வியல் நெறிகள்

***முனைவர் ப.அலிஸ் ராணி,** தமிழ்த்துறை, சாராள் தக்கர் கல்லூரி, திருநெல்வேலி.

**முன்னுரை:**

குறிக்கோளை உடையது இலக்கியம், இலக்கியம் மனித வாழ்க்கை அடிப்படையில் உருவாகின்றது. இந்த வகையில் உருவாகும் இலக்கியத்திற்குள்ளும் மனித வாழ்க்கைக்குத் தேவையான நெறிகள் பல உள்ளன. அறத்தை வலியுறுத்தும் கீழ்க்கணக்கு நூல்கள் ஒவ்வொன்றும் அறத்தின் வெற்றியை வலியுறுத்தும் வாழ்க்கை நூல்கள் ஆகும். இதில் நான்மணிக் கடிகை உணர்த்தும் மனித வாழ்வியல் நெறியினை விளக்குவதே இக்கட்டுரையின் பொருளாகும்.

**நான்மணிக்கடிகை:**

சங்கம் மருவிய காலத்தில் தமிழர்களின் ஆட்சியில் ஒரு கலக்கம் நேர்ந்தது. வாழ்க்கை தரும் இன்பங்களை இலக்கியப் பாடுப் பொருளாகப் பாடுவதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. அந்தக் காலத்தில் (கி.பி.100 முதல் கி.பி 500 வரையில்) இயற்றப்பட்ட சில நூல்களைப் பதினெண்கீழ்க்கணக்கு என்று குறிப்பிட்டார்கள். (மு.வரதராசனார், தமிழ் இலக்கிய வரலாறு, ப.85) இந்தக் கீழ்க்கணக்கு நூல்களில் விளம்பி நாகனாரால் பாடப்பட்ட நூல் நான்மணிக்கடிகை. இந்நூல் ஈகை, செல்வம் நிலையாமை, நட்பு, சினம், நாவன்மை, அரசியல், பெண்மை, தூய்மை, அறிவுடைமை போன்ற நெறிகளை எடுத்துரைத்துள்ளது.

**ஈகை:**

அறங்களில் சிறந்தது ஈகை, ஈகை செய்வோரின் மனநிலை, அதனால் ஏற்படும் பயன், ஈகை செய்யாதோர் அடையும். இழிநிலை ஆகியவை பற்றிய பல்வேறு கருத்துக்கள் நான்மணிக்கடிகையில் இடம்பெற்றுள்ளன.

**“திருவின் திறலுடையதில்லை – ஒருவற்க்குக்**
**கற்றலின் வாய்த்த பிறவில்லை எற்றுள்ளும்**
**இன்மையின் இன்னாத தில்லை யில்லென்னாத**
**வன்மையின் வண்பாட்ட தில்”** (நான்மணிக்கடிகை 32)

திட்பமான மனவுறுதியை ஒருவன் பெறவேண்டும் என்றால் ஈகையில் சிறந்தவனாக மாறவேண்டும் என்கிறது. மேலும், ஈகை செய்வதால் ஏற்படும் பயன் செல்வத்தால் உயர்வர். பிறந்த குடியில் சிறப்படைவர் (மேலது 72) என்கிறது.

ஈகை செய்வது சிறப்பானது தான். எனினும், ஈவார்க்கு நான்மணிக்கடிகை சில அறிவுரைகளை வழங்குகிறது. தன்னிடம் பொருள் வருவாய் இல்லாத காலத்தில் பிறர்க்கு உதவி செய்தாக வாக்களிக்கக் கூடாது என்றும், அவ்வாறு வாக்களிப்பது பிழை என்றும் கூறுகிறது. இக்கருத்தை

**“வளமிலாப் போழ்தத்து வள்ளன்மை குற்றம்”** (மேலது 94)

என்ற வரிகள் சிறப்பாக எடுத்துரைக்கின்றது

**செல்வம் நிலையாமை**

உலக வாழ்க்கையின் இன்றியமையா தேவைகளுள் ஒன்று செல்வம். அந்தச் செல்வம் நிலையாமை தன்மையுடையது என்கிறது நான்மணிக்கடிகை. ஆசையே துன்பத்திற்குக் காரணம். இந்த ஆசையைத் தூண்டுவது செல்வமேயாகும். செல்வம் மிகப் பெற்றவர்கள் தம் உறவினர்களை அதிகம் மதிக்கமாட்டார்கள். ஆனால், அவர்களின் செல்வம் ஒருநாள் அவர்களை விட்டுச் சென்றபின் கீழ்நிலையில் உள்ள உறவினர்கள் செய்யும் உதவியைக் கண்டு நெஞ்சம் நெக்குருகி நிற்பர்.

**“மண்ணியறிப மணிநலப் பண்ணமைத்து**
**ஏறிய பின்னறிப மாநலம் மாசறச்**
**சுட்டறிப் பொன்னின் நலங்காண்பார் கெட்டறிய**
**கேளிரான் ஆய பயன்”** (மேலது 70)

நிலையில்லா செல்வம் அவர்களை விட்டுச் சென்றதால் தான் இதனை உணரமுடிகின்றது.

இதைப் போல்

**"கைத்தலான் நல்லவர் கைத்துண்டாய்க் காப்பாரின்**
**வைத்தாரின் நல்லர் வறியவர்"** (மேலது 70)

தீயோரிடம் சேரும் செல்வம் யாருக்கும் பயன்படாமல் அழிந்து போகும் என்கிறது.

செல்வமும் குடிப்பிறப்பும் வகையால் பொருந்தி நில்லாது,

**"திருபுந் திணை வகையான் நில்லா"** (மேலது 42)
**"மிகுதி இறுவாய செல்வங்கள்"** (ஆமலது 19)

மீறிய செயல்களைத் தொடங்கியதும் செல்வம் கெடும் என்கிறது.

**சினம்:**

மனிதர் தம் உணர்வுகளைக் கட்டுப்படுத்தி வாழும் போது அவர்களின் வாழ்வில் வெற்றியை ஈட்டுகின்றனர். அவ்வாறன்றி உணர்வுகள் தம்மை ஆட்சி செய்ய தாம் அவற்றினை அடக்கி ஆளாமல் விட்டுவிட்டால் பெரும்பழி வந்து சேரும் 'சினம்' என்னும் தீயப்பண்பை ஒவ்வொருவரும் கட்டுப்படுத்தி வாழ முயலுதல் வேண்டும்.

**"சீறற்க சிற்றிற் பிறந்தாரைக் கூறற்க**
**கூறல் லவற்றை விரைந்து"** (மேலது 3)

என்று வறுமைமிக்க குடியிற் பிறந்தவர்கள் செய்யும் பிழைக்கண்டு சினம் கொள்ளல் கூடாது கூறுவதோடு பிறர் செய்யும் நன்மைகளைப் பெரிதும் நினைத்துப் பார்க்க வேண்டும் (மேலும் 10) என்ற கருத்தையும் எடுத்துரைக்கின்றது.

உலகில் உண்டாகும் நன்மைகள் எல்லாம் சினம் கொள்பவர்க்கு கிடைக்க வாய்ப்பில்லை.

**"கற்றார் முன் தோன்றா கழிவிரக்கங் காதலித்தொன்று**
**உற்றார்முன் தோன்றா உறாமுதல் - தெற்றென**
**அல்ல புரிந்தார்க்கு அறந்தோன்றா எல்லாம்**
**வெகுண்டார்முன் தோன்றா கெடும்"** (மேலது 70)

**நட்பு:**

அன்பின் முதிர்ந்த நிலை நட்பு. அதிலும்,

**"பெருக்குக நட்டாரை நன்றின்பா லுய்த்துத்**
**தருக்குக வொட்டாரை காலமறிந்தாங்கு"** (மேலது 69)

நல்ல நட்பு நண்பரையும், பகைவரையும் அடையாளப்படுத்திக் காட்டிவிடும். நல்ல நண்பர்களைத் தெரிவு செய்து நட்பு கொண்டபின் அவர்கள் செய்யும் சிறுதவறையும் பொறுத்துக் கொள்ள வேண்டும் என்கிறது. நல்ல நண்பர்களுக்குப் பொறுமை அவசியம் தேவை.

**"சிறந்தார்க் கரிய செறுதடிலஞ் ஞான்றும்"** (மேலது 51)

பொய் பிறக்கும்போது நட்பு கெட்டுவிடும். நட்பு கெடும் சூழல் ஏற்படின் அதை தவிர்க்கும் வழியினை ஆராய்ந்து அதன்படி நடக்க வேண்டும்.

ஒருவனை நட்பாகக் கொண்டு பின்பு அந்நட்புக் கெட அவனுக்கு எதிராகப் புறங்கூறுதல், அவனைக் கொலை செய்வதற்குச் சமமாகும்.

**"பிறனை கொலையொக்குங் கொண்டுகண் மாறல்"** ஆகவே நல்ல நண்பர்களையும் தீயவர்களாக மாற்றும் இக்காலச் சூழலில் அதற்கு இடங்கொடுக்காமல் வாழ வேண்டும் என்ற கருத்தினை முன்மொழிகிறது நான்மணிக்கடிகை.

**அறிவுடைமை:**

மனிதன் தன் புலன்களின் வழியே அறிவைப் பெறுகின்றான். அவ்வறிவு நன்மையுடையதாக அமையுமானால் அதனை 'அறிவுடைமை' எனலாம். அறிவுடைமையானது செயற்கையாகிய கல்வி கேள்விகளாகிய நூலறிவோடு இயற்கையாகிய மதிநுட்பமும் உடையவராதல் எனலாம்.

கல்வி கற்றவர்களே வாழ்வில் சிறப்புப் பெறுவர். மரக்கலமுடையார் கடலின் ஆழமான நீரைப் பிளந்து செல்வர். மறவர் படைக்கடலையும் தற்காப்புடையின் தவக்கடலையும் நீந்திக் கரையேறுவர். அது போலவே தெளியக் கற்றவன் கற்றறியுடையார் நிரம்பிய அவைக் கடலைத் தாண்டி விடுவான் என்றும் ஒருவன் அறிவு நூல்களைக் கற்பதனால் மிக்க அறியாமை குறையப் பெறுவான் என்றும் குறிப்பிடுகின்றது.

அறிஞர் பயனுள்ளவையெனக் கல்வி கேள்விகளாற் தெளிந்தவற்றையே செய்வர், சான்றோர் பிறர் விரும்பியவற்றுள் இனிமையாயினவற்றையே செய்வர். கல்வியறிவுடையவர்களை அன்பால் விரும்புகின்றவர்கள் அக்கல்வியறிவு உடையவர்களை ஒப்பர், கீழ்மையறிவுடையவர்கள் பாம்பு உள்ளே மறைந்து வாழும் புற்றை ஒப்பர் (மேலது 58)

**"மனைக்கு விளக்கம் மடவார் மடவார்**
**தமக்குத் தகைசால் புதல்வர் மனக்கினிய**

**காதற் புதல்வர்க்குக் கல்வியே கல்விக்கும்**
**ஓதிற் புகல்சால் உணர்வு"** **(மேலது 105)**

என்ற பாடல் பெற்றோர் மனத்திற்கு இனிமை தரும் அன்பிற்குரிய மக்கட்கு கல்வியறிவே ஒளியாகும். அக்கல்வியறிவிற்கும் சொல்லுமிடத்துப் புகழ் நிறைந்த மெய்யுணர்வே ஒளியாகும் என்கிறது.

அறிவு என்பது மனிதனுக்கு மிகவும் இன்றியமையாததாகும். அந்த அறிவைத் தரும் கல்வியறிவு இல்லாதவர் குருடர்க்குச் சமானம் ஆவர். குடும்பத்தில் மூத்தவராயினும் சிறியோர் மதிக்கமாட்டார்கள் படியாத அறிவிலான் இடையில் தளருவானானால் முயற்சி கெட்டு அழிவான்.

**"வாலிழையார் முன்னர் வனப்பிலார் பாடிலர்**
**சாலும் அவைப்படிற் கல்லாதான் பாடினான்**
**கற்றான் ஒருவனும் பாடியனே கல்லாதார்**
**மேதையார் முன்னர்ப் படின்"** **(மேலது 99)**

என்கிறது நான்மணிக்கடிகை.

**நாவன்மை:**

மனிதன் தன் நாவை அடக்கும் முறை குறித்தும் மனிதன் பேசும் கொடுஞ்சொற்கள் குறித்தும் நான்மணிக்கடிகை கூறியுள்ளது. சுவைக்கினியதை யாவரும் நாவினால் சுவைத்தறிவர். அத்தகைய சிறப்பு வாய்ந்தது 'நா' ஆகும். இதன் மூலம் இன்சொல்லினைப் பேசுவது இனிமையானதாகும். இதைப்போல் தீயப்பேச்சினால் வரும் துன்பத்தினை நான்மணிக்கடிகை பதிவு செய்யாமல் இல்லை.

**"எள்ளற்க என்றும் எளியாரென் றென்பெறினும்**
**கொளளற்க கொள்ளார்கைம் மேலவா உற்சாடினும்**
**சீறற்க சிற்றின் பிறந்தாரைக் கூறற்க**
**கூறல் லவற்றை விரைந்து"** **(மேலது 78)**

என்ற பாடல் மூலம் விளக்குகின்றது.

மனிதனுக்கு நாவடக்கம் மிகவும் தேவை. நாவே துன்பத்திற்குக் காரணம். ஆகவே நாவினை அடக்க வேண்டும் என்பதை பின்வருமாறு கூறுகின்றது.
பதறிப்பேசும் நாக்கு நேசத்தைக் கெடுக்கும் என்பதை

**"நாவன்றோ நட்பறுக்கும்"** **(மேலது 81)**

மேலும்

**"இன்சொலான் ஆகும் கிழமை இனிப்பிலர்**
**வன்சொலான் ஆகும் வசைமனம் - மென்சொலின்**
**நாவினால் ஆகும் அருள்மனம் அம்மன்த்தான்**
**வீவிலா விடாய் விடும்" (மேலது 106)**

என்ற பாடல் மூலம் இன்சொலால் ஒருவற்கு நட்புரிமை உண்டாகும். இன்பமில்லாத வன்சொல்லினால் கெட்ட கருத்து உண்டாகும் என்றும், நயமான சொல்லையுடைய நாக்கினால் இரக்க எண்ணம் உண்டாகும் என்றும் கூறி அருள் நெஞ்சத்தால் அழிதலில்லாத வீடு பேறுண்டாகும் என்று நாவடக்கம் பற்றி கூறுகின்றது நான்மணிக்கடிகை.

**முடிவுரை:**

மனித வாழ்வுக்கு வேண்டிய தலையாயப் பண்புகளைப் பற்றி நான்மணிக்கடிகை பேசினாலும் இவ்வுலக வாழ்வியல் கண்கொண்டு கருத்துரைத்துள்ளது. மனித வாழ்வில் உள்ள கசப்பான சில உண்மைகளை முன்வைத்து நற்பண்புகளைப் புகட்டுகின்றது. எமன் பிடியிலிருந்து மனிதன் தன்னைக் காத்துக் கொள்ள அவன் நற்குணங்கள் கொண்டொழுக வேண்டுமென்று ஒரு வகையான அச்சுறுத்தலோடு கருத்துரைத்துள்ளது. ஈகை, செல்வம் நிலையாமை, நட்பு, சினம், கல்வியறிவு, நாவன்மை என்று வாழ்வியல் சிந்தனைகள் பலவற்றை தன்னகத்தே கொண்ட நூல் நான்மணிக்கடிகை எனலாம்.

# திரையிசைப் பாடல்களில் பெண்மை:

## (கவிஞர் கண்ணதாசன் வரிகள்)

***த. பிரேமா மஞ்சரி,** 1746310010, முனைவர் பட்ட ஆய்வாளர் (PhD scholar), அண்ணாமலை பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்.

***நெறியாளர் R.K.குமார்,** இசைத்துறை தலைவர், அண்ணாமலை பல்கலைக்கழகம் , அண்ணாமலை நகர்.

1927ஆம் ஆண்டு சிறுகூடல் பட்டியில் பிறந்தவர் இவர் 1949இல் கன்னியின்) காதலி என்னும் திரைப்படத்தில் "கலங்கா திருமனமே" எனத் தொடங்கும் பாடலை முதன் முதலாக எழுதிதிரைப் பட பாடலாசிரியராக மலர்ந்தார். அதன் பின்னர் **பணம் கல்யாணி** உள்பட பல படங்களில் பாடல்கள் எழுதினார் 1954 இல்" இல்லறஜோதி" படத்திற்கு கதை வசனம் பாடல்கள் எழுதினார். 1957இல் தாமே தயாரிப்பாளராகி **மாலையிட்ட மங்கை** என்ற படத்திற்கு கதை வசனம் பாடல்களை தீட்டினார்.**" செந்தமிழ்தேன் மொழியாள் நிலாவென சிரிக்கும்"** உள்பட எல்லா பாடல்களும் தேனாக இனித்தது. மலர்க்கொடியாள்எங்கள் "திராவிடப்பொன்னாடே" "மழைகூடஒருநாளில்" உள்பட எல்லா பாடல்களும் தேனாக இனித்து கண்ணதாசன் ஒரு தரமான பாடலாசிரியர் என்ற அந்தஸ்தை பெற்றுக்கொடுத்தன. கண்ணதாசன் திரைப்படபாடல்கள் திக்கெல்லாம் வளம் வர ஆரம்பித்தது இசையமைப்பாளர்கள் விஸ்வநாதன் ராமமூர்த்தி கேவி மகாதேவன் போன்றவர்கள் சினிமா துறையில் கோலோச்ச ஆரம்பித்தநேரம். அவர் வாழ்ந்த காலங்களே ஆளே உடுமலை நாராயணன் கவி கம்பதாசன்' சுரதா' மருதகாசி போன்ற கவிஞர்களுக்கு அதிகமான வாய்ப்பு கொடுக்காமல் கண்ணதாசன் ஒருவருக்கே கொடுத்தார்கள் கூறப்படுகிறது கண்ணதாசன் தமக்கு கிடைத்த அந்த வாய்ப்பினை மிக நன்றாகப யன்படுத்திக்கொண்டார்.

**தமிழ் திரையிசையில் கண்ணதாசனின் சமுதாயப் பார்வை:**

தமிழ் திரை இசையில் கண்ணதாசன் பாடல்கள் பாடல் வரிகள் சமுதாய நோக்கோடு எழுதப்பட்டது. கலையானது கலைக்காக மட்டும் அமையாமல் வாழ்க்கையாக மாறும்போது தான் செம்மை சான்றதாய் ஆகிறது. இலக்கியமும் அத்தன்மை உடையது. கண்ணதாசன் கவிதைகளில் சமுதாய உணர்வு எந்த அளவிற்கு எதிரொலிக்கிறது என்பதை இசையின் மூலம் அறிய முடிகிறது. 1949 முதல் 19 81 வரை திரை இசைபாடல்களை எழுதிக்குவித்தவர். சமுதாய சீர்கேட்டிற்கு முக்கிய காரணம் சாதி பிரிவினை, பெண்ணடிமை, பொருளாதார ஏற்றத்தாழ்வு திரையிசைப் பாடல்களில் பதிவு செய்தார்.

**திரை இசைப் பாடல்களில் கவிஞரின் சமூக சிந்தனையில் பெண்கள்:**

பெண்கள் சமூகத்தின் சமநிலை பெறவேண்டும் என்று எண்ணுவது பெண்ணிய சிந்தனையாகும். அகத்தும் புறத்தும் பெண்ணினத்தின் முன்னேற்றத்தை சார்ந்ததாகவே சிந்தித்தார். பெண்ணை பெருமைப் படுத்தும் நிலை திருவள்ளுவரின் சிந்தனைகள் தொடங்கியது 'பெண்ணின் பெருந்தக்கயாவுள' 'பெண்ணின் பெருந்தக்கது இல்' மறுமலர்ச்சி காலங்களில் 'மங்கையராய் பிறப்பதற்கோர் மாதவம் செய்திடல் வேண்டும்' என்று பாரதியார் பெண்களின் சிறப்பை போற்றுகின்றார்.

கண்ணதாசனின் பெண்ணிய சிந்தனை வேறு கோணத்தில் அமைந்துள்ளத, இந்த உயர் பண்புகளை கொண்ட மங்கையர் வாழும் இல்லம் வீடு மற்றும் அன்று அது இறைத்தன்மை வாய்ந்த கோயில் என்ற கருத்தை தம் பாடலில் திரையிசை மூலம் ஒலிக்கச் செய்தவர் ' குலமகள் வாழும் இனிய குடும்பம் கோயிலுக்கு இணையாகும்' என்று பாடினார்.

***திரை இசைப் பாடல்களில் பாடல்களில் பெண்ணின் சிறப்பு:***

தாலாட்டுதான் மனிதன் கேட்கும் முதல் பாட்டு தொட்டில் தான் மனிதன் ஆரம்பப் பள்ளியில் அவன் தாய் தான் அவனுக்கு ஆசிரியர் புரியாத வார்த்தையாக இருந்தாலும் இசையானது குழந்தையை தூங்கவைக்கின்றது குழந்தையை தூங்க அடைவதற்கு எவ்வளவு நேரம் பிடிக்கிறதோ அவ்வளவு நேரம் தாயின் பாடலும் நீடிக்கிறது தாலாட்டுப் பாடல்களில் குழந்தையின் அருமை அதன் விளையாட்டுப் பொருட்கள் மாமன் பெருமை குலப்பெருமை போன்றவை பாடப்படுகின்றது கவிஞரின் திரையிசை தாலாட்டுப் பாடல்களில் திரைப் படங்களுக்கும் பின்னணி பாடுபவர்களுக்கும் இசையமைப்பாளரும் ஏற்ப எழுதுகிறார். இங்கே பெண் குழந்தையைத் தாலாட்டும் பாடல் ஒன்று திரை இசையில்,' சித்தி' எம் எஸ் விஸ்வநாதன் இசையமைப்பில் பிசு சீலாவின் குரலில் குழந்தை தாலாட்டு பாடலானது பிறப்பிலிருந்து வயதாகும் வரை பெண்மையின் போராட்ட கவிதையாக கண்ணதாசன் வழங்கினார் அப்பாடல் இங்கே

***'காலமிது காலமிது***

***கண்ணுறங்கு மகளே***

***காலம் இதை தவற விட்டால்***

***தூக்கமில்லை மகளே'***

பெண்கள் நிம்மதியாக உறங்குவது குழந்தைப் பருவத்தில் தான் அவள் வளர வளர அவளுக்கு சுமையும் அதிகரிக்கும் நிம்மதியாக உறங்க முடியாது இப்போதே தூங்கு என்று பாடிபொருள் அமைந்த பாடலாக கேட்க முடிகின்றது.

தாய் தன் குழந்தையை தாலாட்டும் போது தாய்மாமனின் பெருமையும் சொல்லித்தான் ஆட்டுகிறாள் தாய்மாமன் செய்ய வேண்டியவற்றை சொல்லி தாலாட்டு பாடல் ஒன்று திரை இசையில்,

***'தங்க கடியாரம் வைர மணியாரம் தந்து மனம் பேசுவார் பொருள் தந்து மனம் பேசுவார் மாமன் தங்கை மகளான மங்கை உனக்காக உலகை விலை பேசுவார்'*** என்று ஒரு பெண் தாலாட்டு கிறாள் மேலும் ***'நதியில் விளையாடி கொடியில் தலைசீவி நடந்த இளம் தென்றலே வளர் பொதிகை மலை தோன்றி மதுரை நகர் கண்டு பொழிந்த தமிழ் மன்றமே'***

என்று பெண்மையின் சாயலுக்கு ஏற்ப அவள் பாடும் தாலாட்டு குழந்தையை பேணுகின்றது தாய்மையை போற்றுகின்றது. பெண்மைக்கு பெருமை சேர்க்கும் கண்ணதாசன் பாடல் வரிகளில் தாயின் சிறப்பைப் பற்றிய சிலபாடல்கள் இங்கே:

பெண்மைக்கு தாய்மையை பெருமைக்குரியது பெண்ணின் பெருமைக்கு பெருமை சேர்க்கும் பாடல் ஒன்று

***" ஈன்ற தாயை நான் கண்டதில்லை எனது தெய்வம் வேறெங்கும் இல்லை"***

என்று தாய்மையின் சிறப்பினை சிகரத்திற்கு இட்டு செல்கிறார். தாயின் பெருமை பற்றி குறிப்பிடும் கண்ணதாசன்". எவன் இல்லை என்றால் நீ இந்த பூமியில் பிறந்திருக்க முடியாது எவன் இழந்து விட்டால் மீண்டும் நீ பெறவே முடியாது அவள் பெயர்தாய்" என்றார் மேலும் கண்ணதாசன் அம்மா என்ற அந்தசொல்லில் இருக்கும் மந்திர சக்தியை குறிப்பிடும்போது

***" கன்றின் குரலும் கன்னி த்தமிழும் சொல்லும் வார்த்தையில் அம்மா அம்மா***

***கருணைதேடி அலையும் உயிர்கள் உருகும் வார்த்தை அம்மா அம்மா***

***எந்த மனதில் பாசம் உண்டு அந்த மனமே அம்மா அம்மா"***

என்னும் பாடல் வரிகள் பாசம் மிகுந்த மனம் படைத்தோர்யாவரும் அம்மாதான் என்று கவிஞர் தாய் என்றாலே அன்பு நிறைந்தவள் என்பதை திரையிசை பாடல் மூலம் சமுதாய மக்கள் மக்கள் உணரச் செய்கிறார்.

பெண்களின் அண்ணன் தங்கை உறவு பற்றிபாடும் போது கண்ணின் மணிபோல மணியின் நிழல்போல கலந்து பிறந்தோமடா இந்த மண்ணும் கடல்வானும் மறைந்து

முடிந்தாலும் மறக்க முடியாதடா உறவை பிரிக்க முடியாதடா என்று உடன் பிறந்தவர்களின் உறவைப் பற்றி திரை இசையில் பாடியுள்ளார்.

அதுபோலவே கணவன்-மனைவி உறவானது மிகவும் முக்கியமான துவிட்டுக்கொடுத்து வாழவேண்டும் மனைவி எதற்கும் அடங்காமல் இருக்கக்கூடாது அனைத்திற்கும் தலையாட்டும் கணவரும் இருக்கக்கூடாது என்பதைக் கூறும் திரையிசைப்பாடல் ஒன்று

'**அடங்கா மனைவி அடிமை புருஷன் குடும்பத்திற்கு ஆகாது'** என்றும் கணவனும் மனைவியும் இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டாலே ஒற்றுமையே வாழமுடியும் என்றும் கூறும் பாடல் வரிகள்"

**" ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டால்**

**உள்ளத்தை நன்றாய் புரிந்து கொண்டாள்**

**இருவர் என்பது மாறி விடும்**

**இரண்டும் ஒன்றாய் கலந்து விடும்**"

என்று தம் திரையிசைப் பாடல் மூலம் பல்வேறு கருத்துக்களையும் பெண்களின் பல்வேறு சிறப்புகளையும் பாடல்கள் மூலம் சமூகத்திற்கு வலியுறுத்துகிறார்

உலகில் பிறந்த ஆண் பெண் அனைவருக்கும் மணவாழ்க்கை என்பது முக்கியமானது திருமணம் என்பது தற்போது சமுதாயத்தின் ஒரு தகுதியாக கருதப்படும் தேவை எனலாம் திருமணம் என்ற சொல்லை திருகூட்டல் மனம் எனப்பிரிக்கலாம் மனம் என்பது தமிழரின் பழைய மரபு மனம் என்பது மணமக்களின் மன மொத்தமாகும் வாழ்வு முழுவதும் மனம் பெற்று திகழ்வதற்கு ஏதுவான நிகழ்ச்சியை மனம் என்று பெயரிட்டமை ஏற்புடையதாகும் இம்மன வாழ்க்கையைப் பற்றி கண்ணதாசன் பல பாடல்கள் பாடியுள்ளார் இவருடைய பாடல்கள் கற்பனைத் திறனும் இனிமை எளிமை கொண்டவை பாசமலர் என்னும் திரைப்படத்தில் விஸ்வநாதன் ராமமூர்த்தி இசையில் ஒருபாடல் இங்கே

**" வாராய் என் தோழி வாராயோ**

**மணப்பந்தல் காண வாராயோ**

**மணமேடை தன்னில் மணமே காணும்**

**திருநாளைக் காண வாராயோ"**

திருமணத்தன்றுமணப்பெண்ணின்தோழிகள்மணப்பெண்ணைப்பார்த்துமணவாழ்வுசிறப்பாகஅமையும்என்றநம்பிக்கைஊட்டுவதாகபாடியபாடல்இந்தநாள்மிகமுக்கியமானநாள்மணமகனும்மணமகளும்ஒற்றுமையாகவாழவேண்டும்என்பதேகூறும்இப்பாடல்எல்லாசமுதாயமக்களுக்கும்எக்காலத்திலும்எல்லாமக்களாலும்வரவேற்கத்தக்கபாடலாகஉள்ளது.

இன்னும் ஒருபாடலில் திருமண வாழ்க்கை கணவன் மனைவியின் ஒற்றுமையை விளக்கும் பாடலான பாகப்பிரிவினை என்னும் படத்திற்காக பி.சுசீலாவின் குரலில் விஸ்வநாதன் ராமமூர்த்தி இசையில் பின்னணியில்

**"காலம் பகைத்தாலும் கணவர் பணி செய்து காதல் உறவாடுவேன்"** எனும் பாடல் பெண்களின் வாழ்க்கையானது கணவனை சார்ந்ததே என்னும் வாழ்வு முறையை திரையிசைப் பாடலில் நாம் உணர முடியும்.

திரை இசைபாடலானது கண்ணதாசன் வரிகளில் பெண்மையைப் பற்றி பாடும் போது இல்லால் சிரித்தமுகத்தோடு கணவனுக்கு சேவை செய்ய வேண்டும் அதுவே சிறந்த மனையறம் என்கிறார் திரைப்படத்தில் ஒருபாடலில்

**" எப்பிறவி எடுத்தாலும் எங்கே நீ சென்றாலும்**

**கைபிடியில் உன்னோடு காலமெல்லாம் நான் வருவேன்**

**"கண்ணானால் நான் இமையாவேன்**

**காற்று ஆனால் நான் கொடி யா வே இன்**

**கடல் ஆனால்  நதியா வே ன்**

**நீ கணை ஆனால் நான் வில்லாவேன்**

**கேள்வி என்றால் நான் பதில் ஆவேன்"**

இவ்வரிகளில் கணவனைப் பிரியாது இருவரின் கருத்து ஒன்றுபோல் இருக்க வேண்டும் தலைவி காணும் பொருள் அனைத்திலும் தலைவனும் இருக்கவேண்டும் என்று விரும்புவது போல் இல்லற வாழ்க்கையை அழகாக படம் பிடித்துக் காட்டுகிறார் அப்பாடல்களை இசையுடன் காதுகளில் சென்று மனதை மகிழ்விக்கிறது.

இதே போன்று பாலும் பழமும் என்னும் திரைப்படத்தில் எம் எஸ் விஸ்வநாதன் இசையில் கவிஞர் கண்ணதாசன்"

**நான் பேச நினைப்பதெல்லாம்**

**நீ பேச வேண்டும்**

**நாளோடும் பொழுதோடும் உறவாட வேண்டும்**

**நான் காணும் உலகங்கள் நீ காண வேண்டும்**

**நீ காணும் பொருள் யாவும் நானாக வேண்டும்"**

டிஎம் சௌந்தரராஜன் பி சுசீலாவின் குரலில் இனிய இசையுடன் திரையிசை பாடல்கள் மூலம் வாழ்க்கை முறையையும் பெண்களின் சிறப்பினை கேட்க முடிகிறது. மேலும் கண்ணதாசன் பாடலில் ஒரு திரை இசைபாடல் இங்கே

**" வாசலிலே உன் காலடி ஓசை கேட்டிருப்பேன்**

**நீ வந்தவுடன் உன் ஆசை முகத்தை பார்த்திருப்பேன்**

**கண்ணில் நீரை காணாமல் கவலை ஏதும் கூறாமல்**

**தன்னை எண்ணி வாழாமல் உனக்கென நான் வாழ்வேன்**

**எங்கே நீயோ நானும் அங்கே உன்னோடு**

எம் எஸ் விஸ்வநாதன் இசையமைப்பில் பிசுசீலாவின் குரலில் அமைந்த வரிகளில் குடும்பத்தலைவியின் சிறப்புகளை கூறும் வகையில் சமுதாய மக்கள் சமுதாயத்திற்கு தேவையான ஒன்று காதல் மட்டுமே இது இறைவன் மனித குலத்திற்கு வழங்கிய அருள் நிறைந்த அன்பு செல்வம் ஆகும் அதிலும் பெண்களின் காதல் வடிவமைப்பு என்பது ஓர் அற்புதமான அழகு பெண் என்பவள் மென்மையானவள் என்றும் எனவே தான் உலகில் இயற்கையில் மென்மையான பொருள் எதுவோ அதையெல்லாம் பெண்களுக்கு உவமையாக பேசினார்கள். இதனால் கண்ணதாசனின் பாடல்களில் பெண்களின் மனதை உயர்வாகவும் மதிப்புடனும் தம் கவிதைகளில் பாடியுள்ளார். பெண்ணின் காதல் மனதை பற்றிய பாடிய கவிஞர் ஒருபெண் அங்கம் குறைந்த ஆணை மணந்து கொள்ள விரும்பினார். அவனை உயிராக நேசித்தாள். அவனோ தயங்குகிறான் பெண்ணே பதில் கூறி அவனை சம்மதிக்க வைக்கிறாள். உடலில் ஊனம் உள்ளத்தில் இல்லை என்பதை பாகப்பிரிவினை படத்திற்கு டிஎம் சௌந்தர ராஜராஜன் பிசுசீலாவின் குரல்களில் விஸ்வநாதன் ராமமூர்த்தி இசையமைப்பில் கவிஞர் தம் திரையிசைப் பாடலில்அற்புதமாக வெளிப்படுத்திய பாடல் இங்கே".

**'அங்கம் குறைந்தவனை அழகில்லா**

**ஆண்மகனை மங்கையர் நினைப்பதுண்டோ**

**மணம்பேசி முடிப்பதுண்டோ'**

என்று கேட்கும்' ஆணுக்கு பதில் கூறும் வகையில்,

**'மண் பார்த்து விளைவதில்லை**

**மரம் பார்த்து படர்வது இல்லை**

**கன்னியரும் பூங்கொடியும் கண்ணையா**

**அவள் கண்ணிலே களங்கம் உண்டோ சொல்லய்யா"**

என்று கூறுவதாக பாடிய பாடலில் பெண்களின் பண்பாடு தெரிகிறது.

எனும் திரைப்படத்திற்காக ஆரம்பித்து இனிய இசையின் மூலம் சமூக மக்கள் கேட்கும் படி கவிஞரின் பாடல் வரிகள். திரையிசையில் பல்வேறு சூழலுக்கு ஏற்ப பாடல் எழுதி அதனை இசையோடு கேட்கும் போது சமூக சூழ்நிலையை உணர்த்துவதாக உள்ளது கேவி மகாதேவனின் இசையில் எங்கள் செல்வி என்னும் படத்தில் கண்ணதாசன் கவியரசர் மேலும் 'என்ன பெயர் வைக்கலாம் எப்படி அழைக்கலாம்' பாடலில் அஞ்சலி தேவிக்கு பிசுசீலா பாடினார். குழந்தை பிறந்த நாள் விழாவில் நடனம் ஆடும் தோழிகளுக்கு கே. ஜமுனா ராணி எல். ஆர். ஈஸ்வரி பாடிய 'இந்த வீர மிகும் மாதர் மகள் மேன்மையுடன் வாழ்ந்திடுவாய் வெற்றி மகள் தமிழ் செல்வி தமிழ்செல்வி எங்கள்தமிழ் செல்வி சொக்கத்துக்கு நல்ல பெயர் தமிழ்செல்வி' என்று முடிப்பார் கண்ணதாசன். சுமார் 5000 ஆயிரத்துக்கும் மேலான பாடல்கள் எழுதியவர். ISAI NYANI ILAYA RAJA ISAIYIL KANNE KALAIMANE ENDRU IRUDHIYAGA THAALATIYAVAR KAVINGNAR. (1982 MOONDRAM PIRAI)

MELUM,

1.சண்டமாருதம்

2.திருமகள்

3.திரைஒளி

4.தென்றல்

5.தென்றல்

இசை ஆகிய இதழ்களின் ஆசிரியராக இருந்தவர். தமிழக அரசின் அரசவைக் கவிஞராக இருந்தவர் கவி அரசர் கண்ணதாசன்னின். பல்வேறு கவிதைகள் இசையமைப்பின் மூலம் பாடலாக சென்று சமுதாய மக்களிடையே பல்வேறு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் திரை இசைபாடல்களும் திரைப்படகலையும் ஒரு அறிவியல் சாதனமாக பிறந்து பொழுது போக்கு சாதனமாக வளர்ந்து மக்கள் தொடர்பு சாதனமா பரிணமித்து மக்கள் சமுதாயத்தின் ஏதோ ஒரு தேவையை பாடல்களாக கொண்டு சேர்க்கிறது.

# ஆர்.அபிலாஷ் எழுதிய "கால்கள்" நாவலில் வாழ்வியல் சிந்தனைகள்

***ரா.சி.ஷினு,** ஆய்வாளர், தமிழ்த்துறை, பல்கலைக்கழகக் கல்லூரி, திருவனந்தபுரம்.

மனிதன் தான் சிந்திப்பதை பல சமயங்களில் செயலாக மாற்ற முயற்சி செய்வது உண்டு. அதை பதிவு செய்து வரலாறாக மாற்ற முயற்சி செய்வதும் உண்டு. இதன் அடிப்படையில் உருவானது நாவல் இலக்கியம். தன்னைச் சார்ந்தவர்கள் மற்றும் பிற மனிதர்கள் குறித்த தகவல்களை அறிந்து கொள்ள மனிதனுக்குள் இயற்கையாக உருவாகும் ஆர்வமும், அந்த அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள அவனுள் உருவாகும் ஒரு தூண்டுதலுமே நாவல் பிறக்க காரணமாக அமைந்தது எனக் கொள்ளலாம். படைப்பாளியையும் வாசகனையும் ஒன்றிணைக்கும் பாலமாக நாவல் என்னும் வடிவம் இருக்கிறது. மக்களின் வாழ்க்கையை ஆதாரமாகக் கொண்டு எழுதப்படும் நாவல்கள் மக்களின் வாழ்க்கையில் மாற்றத்திற்கான முக்கியமானதொரு காரணமாகின்றது என்றும் கூறலாம்.

குமரி மாவட்ட எழுத்தாளர்களுள் ஆர்.அபிலாஷ் ஒரு முக்கிய படைப்பாளியாக தனது "கால்கள்" நாவல் மூலம் அடையாளப்படுத்தப்படுகிறார். 2014ஆம் ஆண்டு இப்படைப்பு சாகித்ய அகாதமியின் யுவ புரஸ்கார் விருதை வென்றது. ஒரு குறிப்பிட்டக் காலச் சூழலில் சமூகத்தில் வாழ்ந்த மனிதர்களை தனது கதாபாத்திரங்கள் மூலமாக இந்நாவலில் சுட்டிக்காட்டுகிறார். இந்நாவல் அறிவியல் ரீதியாகவும், தத்துவ நிலையிலும் சில எல்லைகளை தொட்டு செல்லக்கூடிய அறிவுபூர்வமான கருத்துக்களை வெளிப்படுத்துகிறது. சாதாரண மனிதனின் வாழ்க்கையையும், சமுதாயத்தின் உணர்வுகளும் நம்பிக்கைகளும் பழக்க வழக்கங்களும் நாவலில் அமைந்துள்ளதைக் காணலாம்.

உடலால் பலவீனம் கொண்ட மது என்னும் பெண் கதாபாத்திரம் வாயிலாக ஆரோக்கியமான உடல் – பலவீனமான உடல் என்ற இரு எதிர்நிலைகளுக்கிடையேயான சமூக அரசியலை இந்நாவல் பேசுகிறது.

இந்நாவலின் கதாநாயகி மது. அவள் குழந்தைபருவத்தில் உருவான இளம்பிள்ளைவாதத்தினால் கால்கள் நடக்கும் சக்தியை இழந்தவளானாள். அவளைச் சுற்றிய உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் உடல் ஆரோக்கியத்துடன் வாழ்பவர்கள். அவர்களுக்கு மதுவின் வாழ்க்கை மீது பொறுப்பு கூடுகிறது. அவளை நடக்க வைக்கவேண்டிய பொறுப்புமிக்க அக்கறை மனநிலைக்கு அவர்கள் வந்தடைந்தார்கள். அவர்கள் மதுவை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர். அவர்கள் சொல்வது அனைத்தையும் கேட்க வேண்டிய சூழல் மதுவிற்கு உருவானது.

"பசியில்லாது உண்பது போல், காமம் இல்லாமல் உறுப்பை இயக்குவது போல், ஆசை இல்லாமல் தேடுவது போல், இன்பமோ களைப்போ இல்லாது உழைப்பதுபோல் – பிரக்ஞை துவங்கிய நாள் முதலாய் இடுப்புக்குக் கீழே அவள் வாழ்வு அப்படித்தான் நடத்தப்படுகிறது. ஆம், நடத்தப்படுகிறது. அவள் நடக்கும் வரை அவள் வாழ்வை நடத்துவதை அவர்கள் நிறுத்தப் போவதில்லை" (ப. 11) என்பதன் மூலம் மதுவின் உடல்மீது சமூகம் கொண்டிருக்கும் உரிமைபந்தத்தை ஆசிரியர் சொல்கிறார்.

"மேலும் ஊனம் எப்படி தீர்க்கமான உருக்கமான பாச பந்தத்தை உருவாக்குகிறது?" (ப. 13) என்று கேள்வி எழுப்புவதன் மூலம் ஒரு பெண்ணின் உடல் குறைபாடு அவளை மற்ற சமூகத்திலிருந்து பிரித்து அவள் மேல் மற்றவர்களுக்கு அன்பும் இரக்கமும் உருவாக காரணமாகிறது என்பதை தெரிவிக்கிறார். ஆனால் அதற்கான காரணம் என்னவென்று கேள்விகள் எழுப்பப்படும் பட்சத்தில் அதற்கான பதில்கள் அவர்களிடத்து இருப்பதில்லை. இதனைப் பற்றி ஆசிரியர் குறிப்பிடும்போது "நடந்து என்ன செய்வது?" என்று அப்பாவிடம் ஒருமுறை கேட்டாள். அவர் தனது வறண்ட சொரசொர உள்ளங்கை பதிய ஒரு அறை விட்டார். கோபத்தில் அல்ல, அப்பாவுக்கு என்ன சொல்ல என்று தெரியவில்லை. இது தான் "நிஜத்தின்" பிரச்சனை (ப. 13) என்பதன் மூலம் தெளிவுப்படுத்துகிறார்.

மதுவின் அப்பா தன் வாழ்க்கையை மதுவை நடக்க வைப்பதிலேயே செலவழிக்கிறார். தனது சராசரி மாத வருமானம் முழுவதும் அவள் கால்களுக்கு வைத்தியம் செய்வதற்காகவே செலவிடப்படுகிறது. அதனால் அவருக்கு மது மீது ஒரு கழிவிரக்கத்தை ஏற்படுத்துகிறது. இதனை

மதுவின் மனநிலையிலிருந்து குறிப்பிடும்போது, “ஏன் அவளிடம் குறை கண்டுபிடிக்கிறவர்களை அப்பாவுக்கு பிடித்திருக்கிறது என்று அவளுக்கு விநோதமாக இருக்கும். அப்பாவிடம் நண்பர் ஆக வேண்டுமென்றால் அவளது குறை பற்றி ஏதாவது மிகையாகப் பேசி உச்சுக் கொட்டினால் போதும் என்று அவளுக்குப் பட்டது (ப. 39) என்று கூறுவதன் மூலம் உணர்த்துகிறார் ஆசிரியர். இதன் மூலம் மதுவின் சூழ்நிலையை காரணமாக வைத்து அவரது தந்தை பிறரிடம் இரக்கத்தை சம்பாதித்துக் கொள்கிறார் என்பது தெளிவாகிறது.

மேலும் மதுவின் தந்தை அவள் கால்களை தனது உடமையாக உரிமைக் கொண்டாடுகிறார். இதனால் மதுவிற்கு தன் தந்தை மேல் ஒரு தீராத கசப்புணர்வு தோன்றுகிறது. இதனை “ஒவ்வொரு தடவையும் அப்பா அவளது விரல்கள் அசைவது கண்டு பெருமைப்படும்போதும் ஒரு கசப்பை மிக நுட்பமாகத் தனக்குள் உணர்ந்தாள். தற்போது யோசித்துப் பார்த்தால் அப்பா அவளது விரல்களை அப்போது சொந்தம் கொண்டாடியது அந்த கசப்புணர்வுக்கு காரணமாக இருந்திருக்கலாம் என்று ஊகித்தாள்” (ப. 141) என்பதன் மூலம் ஆசிரியர் தெளிவுப்படுத்துகிறார். “ஒவ்வொரு தடவை அவரைப் பாக்கும் போது, யோசிக்கும்போது, அவர்கிட்ட பேசும்போது வருது என் ஊனத்துக்கு அவர் தான் பொறுப்புன்னு ஒரு கசப்புணர்வு, கோவம். எங்க உறவோட ஆதாரம் அதுதான். அந்த கோபம் இல்லாம அவரை நேசிக்க என்னால முடியாது. அவர்மேல எனக்கு ஒரு உரிமை இது நாள் வரை இருந்துது. ஆனால் டாக்டர் ஆபிரகாம் அறிவியல் பூர்வமா எனக்கு போலியோ வந்ததுக்கான பொறுப்பு அப்பாவுக்கு இல்லைன்னு இன்னிக்கு விளக்கினப்போ எனக்கு அந்த உரிமையை இழந்த மாதிரி தோணுது” (ப . 510) என்பதன் மூலம் மதுவின் மனநிலையை அவள் தன் குடும்பத்தை நேசிக்கும் காரணத்தை எடுத்துக்கூறுகிறார் ஆசிரியர்.

மதுவிற்கு தன் உடல் குறித்த சிந்தனை பல நேரங்களிலும் வருவதில்லை. ஆனால் அவளை சுற்றி உள்ளவர்களுக்கு அவளது குறைபாடு எப்பொழுதும் நினைவில் இருந்துக் கொண்டே இருக்கிறது. இது ஒரு தனி மனித உடலுக்கும் ஏனைய பிற சமூக உணர்வுக்கும் இடையேயான போராட்டமாகவே எடுத்துக்கொள்ளலாம். இதனை “அவள் ஏன் விழுகிறாள்? ஒரு அடி வைக்க மறப்பதால் என்று சொன்னால் நம்பும்படியாய் இராது என்பதால் வழுக்கி விழுந்து விட்டதாய் நலம்விரும்பிகளுக்குப் பொய் காரணம் சொல்லுவாள். காரணங்கள் எப்போதுமே கேட்பதற்கு நம்பும்படியாய் இருக்க வேண்டும். பொய் உண்மை எல்லாம் யாருக்கு வேண்டும்?” (ப. 109), என்றும் “நடக்கும்போது அவளுக்கு போரடித்து விடுகிறது. மனம் பிரக்ஞையில் இருந்து தப்பி ஓடுகிறது. அவள் விழுந்து விடுகிறாள். சலிப்பினால் விழுவதாக யாரிடம் சொன்னாலும் தமாஷாகத்தான் படும்” (ப. 113) என்று சொல்வதன் மூலமும் சுட்டிக் காட்டுகிறார் ஆசிரியர்.

இவ்வாறு சமூகத்திலிருந்து விலக்கி வைக்கப்பட்டவளான மதுவிற்கு இந்த சமூகம் மேல் மிகப்பெரிய கோபம் உருவாகிறது. அதனை அவளால் வெளிப்படையாக வெளிப்படுத்த இயலாத போது அவள் தன்னைத் தானே அதிகம் வருத்திக்கொள்கிறாள். “உன் வயசுக்கு நீ வித்தியாசமா இருக்கே. நீ அதை கவனிச்சிருக்கியா? நீ எல்லாத்தையும் அப்பிடியே ஏத்துக்கிறே. உனக்கு கோபம் வந்தா என்ன பண்றதுன்னு தெரியல்ல. ஸோ கோபத்தை முழுங்கிடுறே. விளைவா இப்பிடி ஆக்ஸிடெண்ட் பண்ணி அடிபட்டு ஆஸ்பத்திரி வந்து நிக்கிறே, ரைட்?” (ப. 486) என்று டாக்டர் வழி சொல்வதன் மூலம் ஆசிரியர் மதுவின் மனநிலையையும் நமக்கு புரிய வைக்கிறார்.

“ஒருவரால் முடியாதென்றால் ஏன் நடக்கச் சொல்கிறார்கள்? அதே நபர் நடந்தால் நடக்க முடியாதென்கிறார்கள். ஒருவரால் வண்டி ஓட்ட முடியுமென்றால் ஏன் முடியாது என்கிறார்கள்? இந்தக் கேள்விகள் அவளுக்குள் திரும்பத் திரும்ப வந்தன. ஏமாற்றமோ கசப்போ இல்லை. உலகம் ஏன் ஒரே தடத்தில் விடாப்பிடியாய் யோசிக்கிறது என்று குழம்பினாள் (ப. 534). இப்படியாக மதுவைச் சூழ்ந்து இருக்கும் உலகம் அவளை விடாப்பிடியாய் ஒழுங்குப்படுத்த முயற்சி செய்துக்கொண்டே இருக்கிறது. அவர்கள் கூறும் ஒழுங்குகள் அவளுக்கு அந்நியமாகவே தோன்றுவதை யாரும் கவனிக்கவும் தயாராக இல்லை. ஆனால் மது இவர்கள் கூறும் பரிதாபத்தை தாண்டி நிதர்சனமான வலியுடன் தன் வாழ்வை தொடர்ந்து நடத்துகிறாள்.

இவ்வாறு நாவலாசிரியர் சமூகத்தில் காணப்படும் நிகழ்ச்சிகளை நன்மை எது? தீமை எது? என்று வேறு வேறாக பிரிக்காமல் சமூகத்தில் நிகழும் நிகழ்ச்சிகளை யதார்த்தமாகக் கொடுத்துள்ளார். வரலாற்றின் தொடக்க காலம் முதல் மனிதன் தன் வாழ்க்கையை பொருளாதார, சமுதாய, அரசியல், கலாச்சார அவலங்கள் சார்ந்த பெரும் போராட்டமாகவே நடத்தி வருகின்றான். இதனால் உடல், உள்ளம், உணர்வு என்னும் மூன்று அடிப்படைக் கூறுகளிலும் அவனது உணர்வுகள் எப்படி வெளிப்படும் என்பதை இந்நாவலில் பதிவு செய்துள்ளார் நாவலாசிரியர் ஆர். அபிலாஷ். இதன்மூலம் மனிதர்களின் வாழ்வை யதார்த்தமாக உணர்ந்து கொள்ள நாவல் உதவுகிறது என்பதைக் காணலாம்.

# குமுதம் தீராநதி இதழின் வடிவமைப்பு – ஒரு பார்வை

*ரா.சே.குமாரி அமுதா, முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, பல்கலைக்கழகக் கல்லூரி, திருவனந்தபுரம்.

**முன்னுரை**

இன்றைய மக்கள் வாழ்வில் இதழியல் துறை இன்றியமையாத ஒன்றாகி விட்டது. நாளும் செய்திகளை அறிய மக்கள் ஆவல்கொள்கின்றனர். அறிவியல் முன்னேற்றத்தால் இத்துறை பெரும் வளர்ச்சியடைந்துள்ளது. இவ்வளர்ச்சியால் செய்திப்பரிமாற்றம் இன்று மிக எளிதாயிற்று. இருப்பினும் அச்செய்திகள் அதிகமான வாசகர்களின் கவனத்தை ஈர்க்க வேண்டுமானால் செய்திகள் வெளிவரும் இதழ்களின் வடிவமைப்பு மிகவும் சிறந்த முறையில் இருக்க வேண்டும். எந்த ஒரு இதழின் வெற்றிக்கும் உள்ளடக்கம் எந்த அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததோ அதை விட பல மடங்கு முக்கியத்துவம் வாய்ந்தது இதழ்களின் வடிவமைப்பு ( Lay Out ) ஆகும். சுமாரான தகவல்களுடன் கூடிய இதழ்கள் கூடத் தரமான வடிவமைப்பு காரணமாக வெற்றி பெற்றுவிடுகின்றன. ஒரு செய்தியை முக்கியத்துவம் வாய்ந்ததாகச் செய்வதும் ஒரு கதையைப் படிக்கத் தூண்டும் படிச் செய்வதும் வடிவமைப்பின் மூலம் முடியும். இந்த வகையில் 2011 ஆம் வருடம் வெளிவந்த குமுதம் தீராநதி இதழின் வடிவமைப்பை இக்கட்டுரை ஆராய முயல்கிறது.

**குமுதம் தீராநதி இதழும் அதன் நோக்கமும்**

குமுதம் இதழ் 1947 ஆம் ஆண்டு அண்ணாமலைச் செட்டியர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. குமுதம் இதழ் தமிழர்களின் மனதைக் கவர்ந்த ஜனரஞ்சக இதழ். குமுதம் இதழ் தொடங்கி 55 ஆண்டுகளுக்குப் பிறகு இலக்கியத்திற்கென்று தனியாக தீராநதி இதழை 2002 ஆம் ஆண்டு ஜுன் மாதம் மாத இதழாக வெளியிட்டது குமுதம் நிறுவனம்.

தீராநதி இதழின் நிறுவன ஆசிரியர் எஸ்.ஏ.பி அவர்கள். நிறுவிய பதிப்பாளர் பி.வி.பார்த்தசாரதி. கௌரவ ஆசிரியர் டாக்டர்.எஸ்.ஏ.பி.ஜவஹர் பழனியப்பன். ஆசிரியர் இரா.மணிகண்டன். பதிப்பாளர் செல்வரங்கம் ஆகியோர் ஆவர். இவ்விதழ் குமுதம் பப்ளிகேஷன்ஸ் ( பி ) லிமிடெட் சார்பாக அச்சிடப்பட்டு பழைய எண் 151 புதிய எண் 306 புரசைவாக்கம் நெடுஞ்சாலை சென்னை – 10 ல் வெளியிடப்படுகிறது.

இலக்கியப் படைப்பாளர்களுக்கும் வாசகர்களுக்கும் ஆரோக்கியமான களம் அமைத்துக் கொடுப்பதே தீராநதியின் நோக்கம் ஆகும். இதனை ஆசிரியர் கூற்று மூலம் அறியலாம். “சிறு சிறு குழு விவாதங்களுக்கு அப்பால் நம் குரலைக் கொண்டு போக வேண்டிய அவசியமிருக்கிறது. தீராநதி அதற்கான தளம் அவ்வளவுதான். இந்த தளத்திற்கு உயிரூட்ட வேண்டியது படைப்பாளிகளும் வாசகப் பெருமக்களும் தான்”[1]

**வடிவமைப்பு – விளக்கம்**

வடிவமைப்பு என்பது இதழ் தயாரிப்போடும் வாசக நுகர்வோடும் தொடர்புடையது. அட்டை, ஓவியம், ஒளிப்படம், எழுத்து அமைப்பு, தலைப்புமுறை, வெற்றிடம் போன்ற காட்சிக்குரிய கூறுகளை நோக்கத்திற்கேற்பத் திட்டமிட்டு அமைத்தலே வடிவமைப்பு. இதழின் வடிவமைப்பு அணிகலனாகவும், செய்தித் தொடர்பாகவும் செயல்படுகிறது. இதழின் எல்லா உறுப்புகளையும் கவர்ச்சிமிக்க பயன்மிக்க வகையில் ஒரு கட்டுக்குள் அமைப்பது என்பதையே வடிவமைப்பு என்கிறோம். இதழின் உயிர் உள்ளடக்கம் என்றால் அதன் உடல் வடிவமைப்பு எனலாம்.

**முதல் பக்க அமைப்பு**

குமுதம் தீராநதி இதழின் முதல் பக்கத்தில் உள்ளடக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் படைப்புகளின் வகைகளும் அதன் ஆசிரியர் பெயரும் அச்சிடப்பட்டுள்ளது. படைப்புகளின் தலைப்புகளும் படைப்புகள் இடம் பெற்றிருக்கும் பக்க எண்களும் கொடுக்கப்படவில்லை.

**அட்டை வடிவமைப்பு**

அட்டைப் படங்களே இதழ்களின் வாயில்கள் எனலாம். கண்டவுடன் வாசகர்களின் கண்களைக் கவரும் வகையில் அமைவது இதழ்களின் அட்டையாகும்.இதழ்களின் மற்றப்

பகுதிகளைக் காட்டிலும் அட்டையே அதிக நேரம் வாசகர்களின் கண்ணெதிரே படும்படி அமைகின்றது. அட்டையை ஓர் இதழின் முகம் எனலாம்.

"பல்வேறு உடற்பகுதிகளைக் கொண்ட மனிதன் சட்டையணிந்து காட்சியளிப்பது போல இதழ்களுக்கும் அட்டைப் படங்களே பத்திரிக்கையை வாங்க தூண்டுவதும் உண்டு"2 என்கிறார் சசிரேகா. இதிலிருந்து எந்த ஒரு இதழானது உடனடியாக வாசகர்கள் மத்தியில் சென்றடைய வேண்டுமெனில் அதனுடைய அட்டையின் வகையை மிகவும் கவனமான முறையில் தீர்மானிக்கப்படல் வேண்டும் என்பதை அறியமுடிகிறது.

குமுதம் தீராநதி இதழின் அட்டையைப் பார்த்தால் அது தனது முன்புற மற்றும் பின்புற அட்டையை சிறிது கெட்டியான வழுவழுப்பான தாளில் அமைக்கப்பட்டுள்ளது. முன்புற அட்டை வண்ணத்தால் அச்சிடப்பட்டு இலக்கிய வாசகர்களின் சிந்தனைச் சக்தியைத் தூண்டும் வகையில் ஓவியம் மற்றும் படைப்புகளோடு தொடர்புடைய படங்கள் அச்சிடப்பட்டுள்ளது. முன் பக்க அட்டையின் மேல் பகுதியில் குமுதம் தீராநதி என்றும் அதற்குக் கீழ் மாதம் ஆண்டு மற்றும் விலையும் அட்டையின் கீழ் பகுதியில் இலக்கிய வாசகர்களைக் கவரும் வகையில் இதழ்களின் உள்ளே அமைந்துள்ள சில படைப்புகளின் பெயர்களும் அதன் ஆசிரியர் பெயரும் அச்சிடப்பட்டுள்ளது. முன் புற உள்ளட்டையில் படைப்புகள் அச்சிடப்பட்டுள்ளது. பின்புற உள் மற்றும் வெளிப்புற அட்டையைப்பார்த்தால் அது அட்டைப் பகுதி என்று கூறும் அளவிற்கு இல்லை. அதில் படைப்புகள் அச்சிடப்பட்டிருக்கும்.

**பக்க வடிவமைப்பு**

ஒரு இதழின் சிறப்பு அது எவ்வளவு செய்திகளை வெளியிடுகின்றதென்பதை மட்டுமல்ல எப்படி வெளியிடுகின்றன என்பதையும் சார்ந்து அமைகின்றது. ஒரு பெண்ணுக்கு ஆடையும், அணியும், ஒப்பனையும் அழகுக்கு அழகு சேர்ப்பது போல இதழ்களுக்கும் பக்கவடிவமைப்பு அதன் கவர்ச்சியைக் கூட்டுகிறது. இதழ்களை முதலில் பார்க்கவும் பின் படிக்கவும் வைப்பது அதனுடைய பக்கவடிவமைப்புத்தான். ஒரு பக்கத்தில் எவை எந்த இடத்தில் எப்படி அமைய வேண்டும் என்று தீர்மானித்து அமைப்பதை பக்க வடிவமைப்பு அல்லது பக்கம் தீட்டுதல் எனக் கூறுவார்கள்.

'ரெங்க சுவாமி பார்த்தசாரதி' அவர்கள் "நல்ல பக்க வடிவமைப்பு ஒரு செய்தித்தாளின் விற்பனையிலும், சுழற்சியிலும் மிகவும் முக்கியமான கூறாகும். ஒரு செய்திதாளின் பக்கங்கள் தான் அதனுடைய சாளரங்கள். செய்திதாளின் பக்கமாகிய சாளரங்களில் சிறப்பாகக் காட்டபடுகின்ற செப்பனிட்ட செய்திகள், படங்கள், சிறப்புக் கட்டுரைகள் போன்றவை நல்ல பக்க வடிவமைப்பில் இல்லாவிட்டால் விற்பனையுமாகாது படிக்கவும் மாட்டார்கள். நன்கு திட்டமிடப்பெற்ற கவர்ச்சியான செய்தித்தாளின் பக்கம் வாசகரை தடுத்து நிறுத்திப் படிக்கச் செய்யும் அழைப்பாகும்"3 என்கிறார். இதிலிருந்து இதழ்களுடைய பக்க வடிவமைப்பின் முக்கியத்துவத்தை அறியமுடிகிறது. குமுதம் தீராநதி இதழ் பக்க வடிவமைப்பினை எவ்வாறு அமைத்துள்ளது என்பதை பின்வருமாறு காணலாம்.

**எழுத்து அமைப்பு**

பக்க வடிவமைப்பின் அழகுக்கு எழுத்தின் அமைப்பு உதவுகிறது. கண்ணுக்கு ஊறுசெய்யா வகையில் அச்செழுத்தின் அமைப்பு இருக்க வேண்டும்.எழுத்துக்களின் அழகும் தெளிவும் இதழைத் தொடர்ந்து படிக்கத் தூண்ட வேண்டும். குமுதம் தீராநதி இதழின் எழுத்தமைப்பும் கண்ணுக்கு ஊறுசெய்யா வகையில் வாக்கியத்திற்கு வாக்கியம் இடைவெளிவிட்டு வாசகர்களை கவரும் வகையில் அழகுடனும், தெளிவுடனும் அமைந்துள்ளது. எல்லா படைப்புகளின் எழுத்து அளவுகளும் ஒரே அளவில் அமைந்துள்ளன.

**தலைப்புகள் அமைக்கப்பட்டுள்ள விதம்**

ஒரு செய்திக்கு தலைப்பு என்பது மிக அவசியமானது. தலைப்பில்லாத செய்தி வெற்றுடம்பிற்கு சமம். தலைப்பிடுவதன் இன்றியமையாமையை உணர்ந்த பாரதி தலைப்பிடுவதை மகுடமிடல் என்று குறிப்பிட்டிருக்கிறார். குமுதம் தீராநதி இதழில் வெளிவந்த படைப்புகளின் தலைப்புகளை ஆராய்ந்து பார்க்கும் போது எல்லா தலைப்புகளும் ஒரே வடிவில் அமையவில்லை. படைப்புகளை வாசகர்கள் கவரும் வகையிலும் பெரிய எழுத்துக்களையும், தடித்த எழுத்துக்களையும், சாய்வு எழுத்துக்களையும் கொண்டு தலைப்புகள் அச்சிடப்பட்டுள்ளது. துணைத்தலைப்புகள் ஒரு சில கட்டுரைகளில் பயன்படுத்தியுள்ளனர்.

**ஓவியம்**

ஒளிப்படங்களின் வருகையால் ஓவியக்கலைப் பாதிக்கப்பட்டாலும் பருவ இதழ்களில் கதைகள் கவிதைகள் ஆகியவற்றிர்கு சிறப்பு சேர்க்கும் வகையில் ஓவியங்கள் அச்சிடப்படுகின்றன. குமுதம் தீராநதி இதழிலும் படைப்புகளுக்கு சிறப்பு சேர்க்கும் வகையிலும் வாசகர்களின் கவனத்தைப் படைப்புகளின் மீது திசைதிருப்பி படைப்புகளின் கருத்தை பல்வேறு கோணங்களில் சிந்திக்கவும் ஓவியம் மற்றும் கோட்டோவியங்களை பயன்படுத்தியுள்ளனர்.

இவ்விதழில் பி.ஜி.மகேந்திரன், நடேஷ் ஆகியோரது ஓவியம் மற்றும் கோட்டோவியங்கள் இடம்பெற்றுள்ளது.

**ஒளிப்படம்**

காட்சி ஊடகத்தின் தாக்கத்தால் ஒளிப்படங்கள் உருவானதெனலாம். ஒளிப்படம் லட்சம் சொற்களுக்குச் சமம் என்பார்கள். செய்தியின் மீது நம்பிக்கை உண்டாக்கவும் செய்தியை முக்கியத் தன்மையுள்ளதாக காட்டவும் ஒளிப்படங்கள் பயன்படுகின்றன. குமுதம் தீராநதி இதழ்கள் வாசகர்களைக் கவரும் வகையிலும், படைப்புகளின் உண்மைத்தன்மையை சுட்டிக்காட்டும் வகையிலும் படைப்புகளோடு தொடர்புடைய கருப்பு வெள்ளை மற்றும் வண்ணநிறத்தாலான ஒளிப்படங்களை பயன்படுத்தியுள்ளது. சான்றாக அறிஞர்களின் புகைப்படங்கள், புத்தகங்களின் புகைப்படங்கள், நிகழ்வுகளின் புகைப்படங்கள் ஆகியவை இடம்பெற்றுள்ளது.

**பத்தி பிரிப்பு முறை ( Column )**

தற்போது வெளிவந்து கொண்டிருக்கும் பருவ இதழ்கள் பெரும்பாலும் இரண்டு பத்தி ( Two Column ) ஆகப் பிரிக்கப்பட்டு பக்கங்கள் வடிவமைக்கப்படுகின்றன. நாளிதழ்கள் எட்டு பத்தியாகப் பிரிக்கப்பட்டு வடிவமைப்பு செய்யப்படுகின்றன. குமுதம் தீராநதி இதழ் இரண்டு பத்தி பிரிப்பு முறையைப் பின்பற்றியுள்ளது.

**பெட்டி செய்திகள்**

இதழ்களில் ஒரு குறிப்பிட்ட செய்தியையோ தகவலையோ முக்கியத்துவம் கூட்டிக் காட்ட வேண்டும் என்றால் பெட்டிக்குள் அடைத்து வெளியிடுகிற வழக்கம் தற்போது நடைமுறையில் உள்ளது. குமுதம் தீராநதி இதழிலும் இப்பெட்டி செய்தி இடம்பெற்றுள்ளது. இவ்விதழில் வெளிவரும் படைப்புகளில் உள்ள முக்கியச் செய்திகளை வாசகர்கள் அறியும் வகையில் பல வடிவ கட்டத்துக்குள் தடித்த எழுத்துக்களைப் பயன்படுத்தி பெட்டிச் செய்திகளை குமுதம் தீராநதி இதழ் அமைத்துள்ளது.

**பக்க எண் அமைப்பு முறை**

இதழ்களுக்கு பக்க எண் மிகவும் முக்கியமான ஒன்றாகும். எந்த ஒரு செய்தியாக இருந்தாலும் அதற்கு பக்க எண் கொடுத்தால் தான் அதன் தொடர்ச்சி ஒழுங்காக இருக்கும். அது மட்டுமல்லாமல் வாசகர்கள் செய்திகளைச் சலிப்பூட்டாமல் படிப்பதற்கும் பக்க எண் பயன்படுகிறது. குமுதம் தீராநதி இதழில் பக்க எண் அட்டைப்பகுதிக்கு கொடுக்கப்படவில்லை. உள்ளடக்கப் பகுதியிலிருந்து பக்க எண் தொடங்கி இறுதி பக்கத்தில் முடிவடைகிறது. எல்லா பக்கங்களிலும் படைப்புகளின் கீழ் பகுதியில் பக்க எண் போடப்பட்டுள்ளது. எல்லா இதழ்களிலும் மொத்தம் 64 பக்கங்கள் இடம்பெற்றுளன.

**உள்ளடக்க அமைப்பு**

குமுதம் தீராநதி இதழின் உள்ளடக்க அமைப்புகளாக சிறுகதை, கட்டுரை, கவிதை, நேர்காணல், இதழ் அறிமுகம், புத்தக விமர்சனம், புது வரவு (நூல்அறிமுகம்), நிகழ்வுகள், எதிர்முகம்(வாசகர் கடிதம்) ஆகியவை அமைந்துள்ளது.

**முடிவுரை**

தமிழில் பத்து இதழ்கள் இருந்து வந்த இடத்தில் இன்று பத்தாயிரம் இதழ்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. எனவே இதழியல் துறையில் போட்டிகளும் பொறாமைகளும் நாளுக்கு நாள் மலிந்து காணப்படுகின்றன. பல இதழ்கள் விற்பனையைப் பெருக்கும் நோக்கத்திற்கேற்ப நடிகர் நடிகைகளின் புகைப்படங்களை வெளியிட்டு இதழ்களை வடிவமைக்கின்றன. குமுதம் தீராநதி இதழ் இலக்கிய வாசகர்களைக் கவரும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இருப்பினும் ஓர் இதழின் உயிர் நாடியான தலையங்க பகுதி இவ்விதழில் இடம்பெறவில்லை.தரம் குறைந்த தாள்களில் படைப்புகள் அச்சிப்பட்டுள்ளது. எந்த ஒரு விளம்பரங்களும் இவ்விதழில் இடம் பெறவில்லை.

**துணைநூற் பட்டியல்**


1. வேலம்மாள். நா – தமிழ் இதழ்களின் கட்டமைப்புக் கூறுகள் (2008) – தாமரை பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்
2. சுந்தரமூர்த்தி இ ; அரசு மா.ரா – தமிழில் இதழியல் - (2011) – உலக தமிழாராய்ச்சி நிறுவனம்

# அறநூல்கள் காட்டும் பெண்மை

***பா.சபிஹாபானு,** தமிழ்த்துறை, முனைவர் பட்ட ஆய்வாளர், சேலம் சௌடேஸ்வரி கல்லூரி, சேலம் -10.

**முன்னுரை**

சங்கம் மருவிய காலம் என்பதன் தொடக்கம் களப்பிரரின் வருகையில் இருந்து ஆரம்பமாகின்றது. களப்பிரரின் வருகையால் தமிழகத்தில் வரலாறு, பண்பாடு, கலாச்சாரம், பழக்கவழக்கங்கள், நாகரிகம் ஆகியவற்றில் ஏற்பட்ட மாற்றங்களால் மக்கள் தடுமாறினர். அத்தகைய நிலையில் உள்ள மக்களை நெறிப்படுத்த தோன்றியதே பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் எனலாம்.

இவற்றுள் பதினெட்டு நூல்கள் இடம் பெற்றிருந்தாலும், பதினொரு நூல்கள் அறம் சார்ந்த செய்திகளைக் கூறுவதால், இதற்கு அறநூல்கள் என்றொரு சிறப்பு பெயரும் உண்டு. அவற்றின் வழி நின்று பெண்மை குறித்த தரவுகளைக் காணலாம்.

**அறநூல்கள்**

1.திருக்குறள், 2.நாலடியார், 3.நான்மணிக்கடிகை, 4.இன்னாநாற்பது, 5.இனியவைநாற்பது, 6.திரிகடுகம், 7.சிறுபஞ்சமூலம், 8.ஏலாதி, 9.ஆசாரக்கோவை, 10.பழமொழிநானூறு, 11.முதுமொழிக்காஞ்சி ஆகியவை ஆகும்.

**திருக்குறள் காட்டும் பெண்மை**

திருவள்ளுவரால் இயற்றப்பட்ட இந்நூல் அறம், பொருள், இன்பம் என்ற முப்பால்களைக் கொண்டதோடு 133 அதிகாரங்களையும் 1330 பாடல்களையும் கொண்டுள்ளது. சாதி, சமய பேதமின்றி பல்வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளதால் 'உலக பொதுமறை' என்று போற்றப்படுகின்றது.

**" புகழ்புரிந்த இல்லிலோர்க்கு இல்லை ; இகழ்வார்முன்**
**ஏறுபோல் பீடு நடை"** **(குறள் - 59 )**

இக்குறளின் மூலம் மனைவி என்பவள் கணவனை மதித்து குடும்பத்தை வழிநடத்துதலால் மட்டுமே, கணவனானவன் பகைவர் முன்னிலையில் காளை போன்று பெருந்தன்மையுடன் செயல்பட முடியும் என்று இல்லாளின் சிறப்புகளை வள்ளுவர் கூறுகிறார்.

**" மங்கலம் என்ப மனைமாட்சி ; மற்றதன்**
**நன்கலம் நன்மக்கட் பேறு"** **(குறள் - 60)**

மனைவியின் சிறந்த பண்பே இல்வாழ்க்கைக்கு அழகாகும். நல்ல மக்கட்பேறு என்பது அணிகலன்களை பூட்டி, மேலும் அதனை அழகுபடுத்துவது போன்றதாகும்.

இவ்வாறு வள்ளுவர் தாரம், தாய்மையின் சிறப்புகளாக கற்பியல் வாழ்க்கையை மட்டும் கூறாமல், களவியல் வாழ்க்கை குறித்தும் கூறிச்சென்றுள்ளார். அவற்றுள் தலைவியின் வனப்பை பாராட்டல், மடலேறுதல், அலர், தலைவியின் தனிமை, ஊடல் ஆகிய நிகழ்வுகள் குறிப்பிடத்தக்கவையாகும்.

**நாலடியார் காட்டும் பெண்மை**

ஒவ்வொரு பாடலும் நாலடிகளைக் கொண்டதால் இந்நூல் இப்பெயர் பெற்றது எனலாம். இதன் ஆசிரியர் சமண முனிவர் ஆவர். இதற்கு நாலடி நானூறு, வேளாண் வேதம் என்ற சிறப்புப்பெயர்களும் உண்டு.

**" எஞ்ஞான்றும் எங்கணவர் எந்தோள்மேற் சேர்ந்தெழினும்**
**அஞ்ஞான்று கண்டேம்போல் நாணது மால்"** **(நாலடி -385)**

எப்பொழுதும் எம்முடைய கணவர் எம் தோள்களை சேர்ந்திருந்தாலும், அந்நாள் போலவே நாணமடைகின்றோம் என்ற தலைவியின் கூற்றின் மூலம்

" அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த
நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப" (தொல் - 1045 )

என்ற தொல்காப்பியரின் கூற்றும் தெளிவாகின்றது.

**நான்மணிக்கடிகை கூறும் பெண்மை**

கடிகை என்பது பெண்கள் அணியும் தோள் வளையாகும். அதன்கண் பதிக்கப்பெற்ற நான்கு மணிகளைப்போன்று இந்நூலின் கண் உள்ள ஒவ்வொரு பாடலிலும் நான்கு கருத்துக்கள் இடம் பெற்றுள்ளதால் இப்பெயர் பெற்றது எனலாம். ஆசிரியர் விளம்பிநாகனார் ஆவார்.

**"மனைக்குப்பாழ் வான்நுத லின்மைதான்" (நான்மணி - 22 )**

மனைவியில்லாத மனையானது பாழாகிப் போகும் என்ற ஒருவரிப் பாடலின் மூலம் மொத்த குடும்ப மகளிரையும் இந்நூல் சிறப்பித்துள்ளது.

மேலும் தாயானவள் முன்பிறவியில் நாம் செய்த நல்வினை என்றும், குழந்தைகளுக்கு தாயைப் போன்ற கடவுள் வேறொன்றும் இல்லை என்றும் இந்நூல் தாய்மையை மேன்மைப்படுத்துகின்றது.

**இன்னா நாற்பது கூறும் பெண்மைக்கு சேராத குணங்கள்**

வாழ்க்கைக்கு துன்பம் தரும் செயல்கள் குறித்து நாற்பது பாடல்களில் கூறப்பட்டுள்ளதால் இந்நூல் இப்பெயர் பெற்றது எனலாம். ஆசிரியர் கபிலர் ஆவார்.

- திருமணம் செய்து கொண்ட மனைவியானவள் கணவனை மதிக்காமல் இருத்தல் குடும்பத்திற்கு துன்பம் தரும்.
- உள்ளம் பொருந்தாத மனைவியை சேர்தல் துன்பம் தரும்.
- பாவை போன்ற மகளிரது பிரிவு துன்பம் தரும் செயலாகும்.
- ஈன்ற தாயை பேணாமல் விடுதல் துன்பம் தரும் செயலாகும்.
- அழகான மகளிர் நாணமில்லாமல் இருப்பது துன்பம் தரும்

என்றவாறு இந்நூல் எடுத்துரைக்கின்றது.

**இனியவை நாற்பது காட்டும் பெண்மை**

வாழ்க்கைக்கு இன்பம் தரும் செயல்கள் குறித்து நாற்பது பாடல்களில் கூறப்பட்டுள்ளதால் இந்நூல் இப்பெயர் பெற்றது எனலாம். இதன் ஆசிரியர் பூதஞ்சேந்தனார் ஆவார்.

**" நல்விருந் தோம்பலின் நட்டாளாம் வைகலும்
இல்புறஞ் செய்தலின் ஈன்றதாய் - தொல்குடியின்
மக்கள் பெறலின் மனைக்கிழத்தி இம்மூன்றும்
கற்புடையாள் பூண்ட கடன். (இனியவை – 64 )**

என்ற பாடலால் விருந்தோம்பல், மனையறம் போற்றல், மக்கள் பெறுதல் ஆகியவற்றை மேற்கொள்ளும் பெண்ணே கற்பில் சிறந்த பெண்ணாவாள் என்பதனை அறிய முடிகின்றது.

மேலும் கணவனை தொழும் பெண்

**" பெய்யென்றால் பெய்யும் மழை "**

என்ற வரியால் பெண்கள் கணவனையே கடவுளாக வழிபட்டு வந்ததையும் அறிந்து தெளிய முடிகின்றது.

**திரிகடுகம் காட்டும் பெண்மை**

"திரி" என்பதன் பொருள் மூன்று என்பதாகும். சுக்கு, மிளகு, திப்பிலி ஆகியவற்றால் ஆன மருந்து திரிகடுகம் எனப்படும். அம்மருந்து உடல் நோயை போக்குதல் போல, இந்நூலின் கண் ஒவ்வொரு பாடலிலும் அமைந்துள்ள மூன்று கருத்துக்கள் மனநோயை போக்கக் கூடியதால் இந்நூல் இப்பெயர் பெற்றது எனலாம். இதன் ஆசிரியர் நல்லாதனார் ஆவார்.

**" மண்ணின்மேல் வான்புகழ் நட்டானும் மாசில்சீர்ப்
பெண்ணினும் கற்புடையாட் பெற்றானும் - உண்ணுநீர்
கூவல் குறைவின்றித் தொட்டானும் இம்மூவர்
சாவா உடம்பெய்தி னார்" (திரிகடுகம் - 16 )**

உலகத்தின் கண் சிறந்த புகழுடன் வாழ்ந்தவனும், சிறந்த கற்புடைய மனைவியை பெற்றவனும், நீரறாத கிணறு முதலியவற்றைத் தோண்டி வைத்தவனும் இறந்தும் இறவாத புகழுடம்பைப் பெற்றவராவார் என்பதன் மூலம் கற்புடைய மனைவியின் சிறப்பை உணரமுடிகின்றது.

**சிறுபஞ்சமூலம் கூறும் வாழ்வின் நோக்கம்**

கண்டங்கத்தரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சில் ஆகிய வேர்களால் ஆன மருந்து உடல் நோயைப் போக்குதல் போல, இந்நூலின் கண் ஒவ்வொரு பாடலிலும் உள்ள ஐந்து கருத்துக்கள் மன நோயை போக்குவதால் இப்பெயர் பெற்றது எனலாம். இதன் ஆசிரியர் காரியாசான் ஆவார்.

**" கொண்டான் கொழுநன் உடன்பிறந்தான் தன்மாமன்**
**வண்டார்பூந் தொங்கல் மகன்தந்தை – வண்தாராய்**
**யாப்பார்பூங் கோதை யணியிழையை நன்குயையக்**
**காப்பார் கருது மிடத்து"** **(சிறுபஞ்ச – 54 )**

ஒரு பெண்ணின் கற்புக்கு அழிவு வராமல் பாதுகாக்க தக்கவர் கணவன், கணவனுடன் பிறந்தவன், மாமன், மகன், தந்தை என்று ஐந்து பேர்களை இப்பாடல் பட்டியல் இடுகின்றது.

மேலும் இந்நூலானது உலகத்தார் கூறும் பழியைப் பொறுமையுடன் ஏற்றுக் கொள்வதாக இருந்தால் மட்டும் துறவறம் கொள்ளுங்கள். அப்படி இல்லையேல் இல்லறமே சிறந்தது என்கின்றது. இல்லற வாழ்வின் நெறிப்படி நின்று மற்றவருக்கு நன்மைகள் பல செய்து வாழ்தலே பிறப்பின் பயனாகும் என்று தெளிவாக இந்நூல் குறிப்பிடுகின்றது.

**முடிவுரை**

இவ்வாறு திரு.வி.க. தம் நூலான பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கை துணை என்பதில் கூறிய பெண்மை, தாய்மை, இறைமை என்ற நெறிப்படியே உலகம் இயங்கிக் கொண்டிருக்கின்றது என்பதையும், பெண்ணில்லையேல் உலகமே இல்லை என்பதையும் தெளிவாக உணரமுடிகின்றது.

மேலும், துறவறத்தைக் காட்டிலும் இல்லறமே சிறந்தது என்ற கூற்றை எல்லா அறநூல்களும் கருத்துக்களாகக் கொண்டுள்ளதையும் இத்தலைப்பின் வழியே அறிந்து தெளிய முடிகின்றது.

# வைசூரிமாலை சுவடியின் பாடல்களில் பயின்று வந்துள்ள அணிகள் ஒரு பார்வை

***ஷைலஜா.செ,** ஆய்வாளர், தமிழ்த்துறை, பல்கலைக்கழகக் கல்லூரி, திருவனந்தபுரம்.

**முன்னுரை**

செய்யுளுக்கு அழகு தரும் கற்பனையின் வெளிப்பாடு அணியாகும். அணி கருத்துக்குச் சொல்லாலும் பொருளாலும் அழகைத் தருகின்றது. எனவே அழகுக்கு அழகு கூட்டுவது அணி ஆகும். செய்யுளுக்கு உயிர் நிலையாக விளங்குவன உணர்ச்சி, வடிவம், கற்பனை, கருத்து என்ற நான்கும் ஆகும். படைப்பாளன் தன் உள்ளுணர்வை முழுமையாக வெளியிடுவதற்கும் அதை வாசகன் அனுபவிப்பதற்காகவும் அணி பயன்படுகிறது. அணி பற்றி நுட்பமான நுட்பங்களை விதிப்படுத்தி கூறுவது அணியிலக்கணமாகும். இக்கட்டுரை வைசூரிமாலை என்னும் சுவடியில் பயின்று வந்துள்ள அணிகளைப் பற்றி ஆராய்வதாக அமைகிறது.

**அணியின் வளர்ச்சி**

அணி என்ற சொல்லுக்குப் பல பொருண்மைகளை அகராதிகள் தருகின்றன. இவற்றுள் ஓப்பனை, அழகு, அணிகலன், வனப்பு, ஆபரணம், பெருமை, இனிமை எனும் பொருள்கள் இலக்கிய அணி எனும் கருத்தோடு தொடர்புடையன. தமிழ் அணி இலக்கண மரபின் தொன்மையான இலக்கண நூல் தொல்காப்பியம், இதில் உள்ள உவமையியல் செய்திகள் அணியியலுக்கு அடிப்படையாக அமைந்திருக்கின்றன. பிற்காலத்தில் தோன்றிய வீரசோழியம் முதலான ஐந்திலக்கண நூல்களும் அணிப்பற்றி விளக்குகின்றன. அணி பற்றித் தனியே விளக்கும் மரபு தமிழில் கி.பி12-ம் நூற்றாண்டைச் சேர்ந்த தண்டியலங்காரம் முதற்கொண்டே தொடங்குகின்றது.

வடமொழி இலக்கண நூலார் அணியை அலங்காரம் எனக் குறிப்பிடுவர் தண்டியலங்காரத்தில் பொருளணியியல் குறிப்பிடும் அணிகளின் அடிப்படையில் இதில் அணிகள் தரப்படுகின்றன.

**உவமையணி**

**"பண்புந் தொழிலும் பயனுமென் றிவற்றின்**
**ஒன்றும் பலவும் பொருளொடு பொருள்புணர்த்**
**தொப்புமைத் தோன்றச் செப்புவ துவமை"**

பண்பு, தொழில், பயன், உரு என்பன காரணமாக ஒன்றும் பலவுமாகி பொருளோடு பொருள் இயைய வைத்து ஒப்புமைப் புலப்படும்படி பாடுவது உவமையணி ஆகும்.

(எ.கா)

**"பாரப்பா மாரியொடு செங்கா மாரி**
**பனியுடனே வேர்வையுண் டாம்கண் சிவக்கும்**
**ஆரப்பா அரணையுடை வால்போல் காணும்**
**அங்கமெல்லாம் துரந்துவிடும் தாகம் காணும்" வைசூரிமாலை(21:1-4)**

மாரி, செங்காமாரி என்னும் வைசூரிகள் வந்தால் அதனால் உடலில் தோன்றும் குருக்களின் தோற்றம் அரணையின் வாலின் தோற்றத்துடன் ஒப்பிடப்பட்டுள்ளது.

**பின்வருநிலையணி**

**"முன்வருஞ் சொல்லும் பொருளும் பலவுயி**
**பின்வரு மென்னிற் பின்வரு நிலையே"**

ஒரு பாடலில் முன்வந்த சொல்லோ, பொருளோ மீண்டும் பல இடத்தும் பயின்று வருவது பின்வருநிலை அணியாகும்.

(எ.கா)

**"பாரப்பா வைசூரி வகைசுரங்க ளெட்டும்**
**பார்க்கையி லேவாத பித்தசிலேற் பனங்கள்**
**ஆரப்பா இவர்மூவர் தாரங் கொண்டால்**
**அப்பனே இவ்வகையான சுரத்தின் கூறு**
**தாமப்பா கபசுரம் நால தாகும்**
**தாமீதில் சுரம் நான்கும் கூடி**

**ஆமப்பா இப்படிசு ரங்க ளெட்டில்**
**அமைந்தபடி வாதபித்த சிலேற்ப னமாமே”** **வைசூரிமாலை(1)**

இதில் ‘சுரம்’ என்ற சொல் பல இடங்களில் வந்துள்ளமையால் இப்பாடல் பின்வருநிலையணியினைச் சார்கிறது.

**ஏதுவணி**

**“யாதன் திறத்தினு மிதனினிது விளைந்தென்**
**றேதுவிதந் துரைப்ப தேதுவ துதான்**
**காரக ஞாபக மெனவிரு திறப்படும்”**

எந்த ஒரு பொருளாயினும் இது நிகழ்வதற்கு இதுதான் காரணம் என்று குறிப்பிட்டு சொல்வது ஏது அணி ஆகும்.

(எ.கா)

**“பாரப்பா உணக்கை கரும்சப் பட்டை**
**பதிவாக அதுசெய்யும் குணத்தை கேளு**
**ஓமப்பா பனியெடுக்கும் வறக்சி காணும்**
**ஓங்காளம், சத்தியுண்டா முறையை கேளு**
**நானப்பா சுரம்கொள்ளும் நடுக்க முண்டாம்**
**நாடும்வ யிறுசெமியா துவயதுமா னதுகேள்**
**இதுரோகம் எளிதென்று நினைத்தி டாதே**
**ஏகமா யிவாய்புலம் பும் இன்னும் கேளு**
**மூரண்டில் மரணமென் றுமுன்னோர் சொன்னார்** **வைசூரிமாலை(47)**

இப்பாடலில் உணக்கை கரும்சப்பட்டை என்ற நோயை கூறி இந்நோயினால் தான் மரணம் நிகழும் என்று காரணம் கூறப்பட்டுள்ளது. எனவே இப்பாடல் ஏது அணியை சார்கிறது.

**சுவையணி**

**”உண்ணிகழ் தன்மை புறத்துத் தோன்ற**
**எண்வகை மெய்ப்பாட்டி னியல்வது சுவையே”**

உள்ளத்து உணர்ச்சிகள் எட்டுவகையான மெய்ப்பாடுகளால் கூறப்படுவது சுவை அணியாகும்.

**அச்சச்சுவை**

(எ.கா)

**“பேரைக்கேள் நடுக்கந்தான் நெட்டைப்ப னைபோல்**
**பேசுகிலோ இவர்கள்தா னும்நா லதாகும்**
**காரான கண்டப்பன் காலால் குட்டி**
**காணுகிலோ இவர்நாலும் கரப்ப னாகும்**
**வீரமுட்டி ஏகனோடு மண்ணன் ஏழு**
**விளம்புகிலோ சேற்பனத்தில் பிறவி யாகும்**
**சேரப்பா இப்படியே சிலேற்ப னத்தில்**
**சிறந்தபிணி முப்பத்து நாலென் றெண்ணே”** **வைசூரிமாலை(23)**

பயத்தை ஏற்படுத்துகின்ற வைசூரி நோய்கள் கண்டப்பன், காலால், குட்டி, கரப்பன் என்ற நான்கு வகையாகும். இவற்றோடு சிலேற்பனத்தினால் பிறக்கின்ற வீரமுட்டி, ஏகன், மண்ணன் என்ற மூன்றும் ஆகும். இதன் பெயர்களை கேட்டாலே அச்சம் ஏற்படுவதால் இதில் அச்சசுவை காணப்படுகிறது.

**அவலச்சுவை**

(எ.கா)

**“ஆட்டிடவே அகத்தினுக்கு செவிகண் பாளு**
**அருமைபோல் அங்கமெலாம் அழகே காட்டும்**
**சாட்டிடவே சலகுறையும் சிறுநீர் தன்னில்**
**சவநாற்றம் மயக்கம் தான் தோன்றும்**
**பூட்டிடவே சங்கிறுக்கிப் புலம்பிக் கொள்ளும்**
**புண்ணியமில் லாததுக்கு இந்த ரோகம்**
**நாட்டிடவே நாலாயிரம் நமனு முண்டாம்**
**நாள்கழிந்தால் நல்மருந்தை நவின்று பாரே”** **வைசூரிமாலை(25)**

அரத்தை மண்டலி என்னும் வைசூரி நோயின் அவலங்களை எடுத்துக் காட்டுவதால் அவலச் சுவையை சார்ந்ததாக அமைகிறது.

**முடிவுரை**

வைசூரிமாலை என்னும் சுவடி ஒரு மருத்துவச் சுவடி ஆகும். இச்சுவடி மருத்துவத்தை பற்றிக் கூறுவதால் இதில் காப்பியப்பண்போ, காப்பியக் கூறுகளோ காணப்படவில்லை. எனவே அணிகள் அதிகம் பயின்று வரவில்லை. நோயின் தன்மைகளை கூறுவதால் சுவையணி அதிகம் பயின்று வந்துள்ளது. உவமைகள் மிகவும் எதார்த்த தன்மையில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# சோதிடமும் - சோதிடர்களும்

***முனைவர் பொ.செந்தில்குமார்**, *உதவிப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர், தமிழ்த்துறை, பெரியார் பல்கலைக்கழக உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பாப்பிரெட்டிப்பட்டி – 636 905, தருமபுரி.*

சங்காலம் தொடங்கி இன்று வரையுள்ள இலக்கியங்கள் பல வற்றிலும் சோதிடத்தைப் பற்றிய செய்திகள் பல உள்ளன. வானியல் நிகழ்வுகளைக் கூர்ந்து நோக்கி, அதனைத் தங்கள் இலக்கியங்களில் எடுத்தாண்டுள்ள தோடு மட்டுமல்லாமல் தங்கள் வாழ்வியலில் இடம்பெற்றுள்ள சோதிடவியல் செய்திகளைப் பற்றியும், பலப் பெயர்களில் சோதிடர்கள் அழைக்கப்பட்டனர் என்பது பற்றியும் இலக்கியங்களில் பரவலாகக் காணப்பெறுகிறது. இக் கட்டுரை வழி சோதிடர்கள் பலப் பெயர்களில் அழைக்கப்பட்டதை காணலாம்.

**சோதிடம் - சொல் ஆய்வு**

சோதி என்பது ஒளி, கிரணம், தீபம், சூரியன், நட்சத்திரம் என்னும் பொருள்களையுடையது. சோதிடம் என்பதற்கு நாள், மறை, நிமித்தம், பஞ்சாங்கம், சாதகம், என்னும் பொருள்களை லெக்சிகன் அகராதி (பக்.1667) தருகிறது.வானத்தில் சோதியாய் நமக்குப்புலப்படுகின்ற, கண்டங்களால் உண்டாகின்ற நன்மை, தீமைகளைப் பற்றி, முன்கூட்டித் தெரிவிப்பது, சோதித்துத் திடப்படுத்துவது. நட்சத்திரங்களின் தூது, நேத்தரமேன்னும் கண்ணொளி, அறிவைத் தரும் ஒளி என்ற பல பொருள்களும் சோதிடம் என்பதற்குச் சுட்டப்பெறுகின்றன.

**சோதிட நூல்**

**“சொற்பெயர் நாட்டம் கேள்வி நெஞ்சகமென்**

**றைந்துடன் போற்றி அவை துணையாக”**

என்பது பதிற்றுப்பத்து கூறும் செய்தி. பல்யானைச் செல்கெழுகுட்டுவன் விரும்பிய வேள்வியை, சொல்லிலக்கண நூலும், பொருள் இலக்கண நூலும், சோதிட நூலும், வேத நூலும் இவற்றை அடக்கிய நெஞ்சமும் ஆகிய ஐந்தையும் போற்றிய முனிவர்கள் செய்து முடித்தனர் என்ற இக்குறிப்பினால் கற்க வேண்டிய நூல்களுள் சோதிட நூல் என்பது சங்க காலத்திலேயே நிலவி வந்த கருத்து என்பதை உணர முடிகிறது. ‘நாட்டம்’ என்ற சொல்லால் சோதிட நூல் குறிக்கப் பெற்றமையும் தெரிகிறது.

சோதிடம் இழி நூலாகக் கருதப்பட்டு இதன்பால் ஈடுபாடு உள்ளவர்கள் பித்தர்களாகக் கருதப்பட்டு சோதிடத்தை எதிர்க்கும் வகையில்,

**“சத்தடுஞ் சோதிடமு மென்றிங் கிவைபிதற்றும்**

**பித்தரிற் பேதையாரில்”** (நாலடி 52)

என்ற நாலடியார் பாடல் அமைந்துள்ளது.

**சோதிடர்**

சோதிடக் கலை மன்னர் முதல் மக்கள் ஈறாகப் பலரையும் சென்றடையச் சோதிடர் உறுதுணையாகத் திகழ்ந்தனர். இவர்கள் சோதிடம் மட்டுமன்றி சோதிடமல்லாத பல்வகைத் தொழில்களைப் புரிந்து வந்துள்ளனர் மன்னர்கள் சிலரும் சோதிட அறிஞராக இருந்திருக்கின்றனர்.பொருளுக்காகச் சோதிடத் தொழிலை மேற்கொள்ளுதல் என்ற நிலையிலிருந்து அக்காலச் சோதிடர் மாறுபட்டு ஆர்வத்துடன் சோதிடவியவிலுள்ள உண்மைச் செய்திகளை உள்ளது உள்ளவாறு எடுத்தியம்பி வந்துள்ளனர். இவர்கள் பல்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டனர்.

**அ.அறிவன்**

சோதிடரைக் குறிக்கின்ற சொல்லாகப் பல சொற்கள் பிற்கால இலக்கியங்களில் வழங்கப்பட்டு வந்தாலும் அறிவன், கணி என்ற சொற்களே நமக்குக் கிடைக்கின்ற சொற்களுள் காலத்தால் முற்பட்டவையாகக் காணப்படுகின்றன.

தொல்காப்பித்தில் அறிவன் என்ற சொல் சோதிடரைக் குறிக்கப் பயன்படுத்தியதை,

**"மறுவில் செய்தி மூவகைக் காலமும்**

**நேறியின் ஆறஇறிய அறிவன் தேயம்**

**நாவிரு வழக்கில் தாபதப் பக்கமும்**

**பாலறி மரபில் பொருநர் கண்ணும்"** (தொல். புறத்.16)

என்ற பாடல் வழி முடிகிறது.

அறிவர் என்பவர் இல்லற வாழ்க்கையில் இருக்கும் கணிவர் என்றும், இவர்கள் கணவன் மனைவியருக்குள் ஊடல் நிகழ்ந்தால் அவர்களுக்கு அறிவுரை சலறி இல்லற நெறியில் நிறுத்தினர் என்றும் காட்டுகின்றன. இதன்கண் திருமணம் நடக்கக் கூடிய நாளைக் கணித்துக் கூறினர் என்பதை,

**"நெறியறி செறிகுறி புரிதிரி பறியா அறிவனை முந்துநீஇந்**

**தகைமிகு தொகைவனை யறியுஞ் சான்றவர்"** (39)

என்ற குறிஞ்சிக் கலிப்பாடல் குறிப்பிடுகின்றது.

இவற்றால் சோதிடர் தொல்காப்பியர் காலத்திலும், சங்க காலத்திலும் அறிவன், அறிவர் என்ற சொற்களால் குறிக்கப்படுவதும், இவர்கள் முனிவர்களாகவும், இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டவர்களாகவும் இருந்தனர் என்பது தெரிகிறது.

**ஆ.கணியர்**

சோதிடத்தைப் பண்டையத் தமிழர் 'கணி' (கணிதம்), 'கணியம்' என்னும் பெயர்களால் குறித்தனர். சோதிடத் தொழில் புரிந்தாரைக் கணி, கணிகள், கணியன், கணியாண், கணிவன் என்றழைத்தனர்.

சங்க இலக்கியங்கள், சங்க மருவிய கால இலக்கியங்கள் சோதிடம் என்ற பொருளில் 'கணி' என்ற சொல்லைக் கையாண்டுள்ளதை,

**"கணிவாய்ப் பல்லி"** (அகம். 151:11-15)

**"காரதும்பு அவிழ்ந்த கணிவாய் வேங்கை"** (நற். 376:3-8)

**"பன்னாளும் நின்ற விடத்தும் கணிவேங்கை"** (பழமொழி நானூறு 210)

என்ற அடிகள் காட்டுகின்றன.

பெருங்காப்பியங்கள், சிறுகாப்பியங்கள், இலக்கண நூல்கள், பக்தி இலக்கியங்கள், புராணங்கள்- சோதிடரைக் குறிக்கக் 'கணி' என்ற சொல்லைப் பரவலாகக் கையாண்டுள்ளதை,

**"கணியெடுத் துறைத்தான்"** (மணி 24:59)

**"கணிபுனை பவளத் திண்காழ்"** (சீவக.113)

**"கண்ணியுரைப்பான் கணி"** (தொல்.புறத்.16,இனம்,உரை.மே.பா.114)

**"கணிவேளை வென்றான்"** (சூளா.8272)

**"கணிவன் புகழ் கிளந்தன்று"** (புற.வெ.பு.8.20, உரை .82)

**"கணிமொழிந்த நாளிற்"** (நள .1: 172)

போன்றவற்றால் அறியலாம்.

கண்ணகிக்கும் கோயில் கட்டச் சேரமான் மன்னன் செங்குட்டுவன், அரண்னைச் சோதிடர் பெருங்கணி, அறக்களத்து அந்தணர், கட்டடக்கலை அறிஞர், சிற்பக்கலை வல்லூநர் ஆகியோருடன் சென்றதை,

**"பொன்அணி புதுநிழல் பொருந்திய நங்கையை,**

**அறக்களத்து அந்தணர், ஆசான் பெருங்கணி**

**சிறப்புடைக் கம்மியர் தம்மொடும் சென்று**

**மேலோர் விளையும் நூல்நெறி மாக்கள்"** (28:221-224)

என்று சிலப்பதிகாரம் 'பெருங்கணி' ஒருவரைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

**இ.சோதிடர்**

சோதிடவர், சோதிடர், சோதரி, சோதிட்கள் என்ற சொற்களாலும் சோதிடர்கள் சுட்டப்படுகின்றனர்.

மாடத்து இட்ட நறும்புகை சோதிடர் விமானத்தையும் கடந்து அப்பால் சென்றது என்பதை,

**"அண்ணரும் பேர் அழல் ஆக்கிய கமழ்புகை**

**மாதிரத்து இயங்கும் சோதிடர் விமானமும்**

**வாசம் ஊட்டும் வகையிற்று ஆகி"** (பெருங். 2:18.49-5)

என்ற அடிகளால் அறிய முடிகின்றது.

சோதிடர் என்ற சொல்லாட்சியை,

**"சோதிடம் உதயா**

**ரூடக் கவுப்புக்களில் தப்பின்றாகச் சாதகத்தை**

**நினக்கேயுரிய முறைமையாற் செய்தா ராதலின்"** (சீவக.1686-31)

**"தூமான் பவணர் வியந்தார்**

**சோதிடர் கற்பருப்பால்"** (நீலகேசி. 87)

**"சுடர்வருஞ் சோதிடரே"** (சூளா.11:206)

**“சோதிட வருடனே கூட்டி நல்ல நாளிலே**

**குடையைப் புறவீடு விட்டான்”** (பு.வெ.48.உ_ரை.ப.34)

என்ற இலக்கியங்கள் கூறுகின்றன.

**ஈ.பஞ்சவர்**

சோதிடரைக் குறிக்கும் வகையில் ‘பஞ்சவர்’ என்ற சொல்லும் காப்பிய காலத்தில் நிலவி வந்திருக்கிறது.

சோதிடர் பஞ்சவர் என்று குறிக்கப்பிட்டதை,

**“முகிற்றலை, மதிய மன்ன முழுமணி மாடத்திட்ட**

**அகிற்புகை தவழ்ந்து வானத் தருவிசும் பறுத்துநீண்டு**

**பகற்கதிர்ப் பரப்பிற் றாகிப் பஞ்சவர் விமான மூட்டிப்**

**புகற்கரு மமரர் கற்பம் புக்கயா அயிர்த்த தன்றே”** (600)

என்று சீவக சிந்தாமணி கூறுகின்றது. ‘பஞ்சவர்’ என்பவர் சந்திரன், சூரியன், மற்றைக்கோள்கள், 27நட்சத்திரங்கள், தாரகைகள் என ஐந்து வகையினர் என்பர் நச்சினார்க்கினியர்.

பஞ்சவர் என்பவர் இவ்வைந்து வகையினரே என்பதை,

**“சந்திரருஞ் சூரியரும் தாரகையு நாண்மீனும்**

**வெந்திறல் கோட்களுமா மெனவிளங்கு விசும்பறா**

**மற்திரத்தை வலஞ்சூழ்ந்து வருபவரு நிற்பவருஞ்**

**சுந்தரஞ்சேர் மணிமுடியாய் சுடர்வஞ் சோதிடரே”** (2026)

என்று சூளாமணி கூறும்.

**உ.நிமித்திகர்**

நாள் நிமித்தம் பார்த்த சோதிடர் பல்துறை அறிவுமிக்கவராய் விளங்கியமையால் அவர்களைக் கொண்டே புள் நிமித்தம் போன்ற நிமித்தங்கள் அரசரால் பார்க்கப்பட்டிருக்கின்றது.

இச்சோதிடர் நிமித்தங்களையும் அறிந்துணர்ந்தும் திறம் பெற்றிருந்ததால், ‘நிமித்தி, நிமித்திகர், நிமித்தக்காரர்’ என்றும் அழைக்கப்பட்டனர்.

**“மந்திரத் தரசன் வல்லே நிமித்தகன்”** (சீவக.539:1)

**“நிகழ்வதை யுரைக்கு நிமித்திக்கு”** (பெருங். 1:36,120)

என்ற அடிகள் சோதிடம், நிமித்திகர் என்றும் கூறப்பட்டதைத் தெளிவுபடுத்துகிறது.

**ஊ.அந்தணர்**

சோதிடரை, அந்தணர் என்று கூறுகின்ற வழக்கும் காணப்படுகின்றது. காப்பியக் காலத்திலும், அதற்குப் பின்னரும் சோதிடத் தொழிலை மேற்கொண்டவருள் பெரும்பாண்மையோர் அந்தணராகவே திகழ்ந்த காரணத்தால் இப்பெயர் வழக்கத்தில் இருந்திருக்க வேண்டும்.

நல்ல நாள் பார்க்கும் பொறுப்பு அந்தணருடையது என்பதை,

**“அந்தணர்வாய்ச் சொற்கேட்டுச் செய்க அவர் வாய்ச்சொல்”** (ஆசா.93)

என்ற ஆசாரக் கோவை அடி உணர்த்துகிறது.

**எ.காலக் கணிதர்**

சோதிடர் காலக் கணிதர் என்ற சொல்லாலும் குறிப்பிடப்படுகின்றனர். கணியர் காலத்தைக் கணித்தறியும் தகுதி பெற்றிருந்ததால் ‘காலக் கணிதர்’ என்றழைக்கப்பட்டதை,

**“ஆயுள் வேதருங் காலக் கணிதரும்”** (சிலப்.5:44)

**“மாலைக் காரருங் காலக் கணிதரும்”** (மணி .28:40)

என்ற அடிகள் காட்டுகின்றன.

**ஏ.குறிக்கோளர்**

சோதிடத் தம் கொள்கை மீது கொண்டுள்ள ஈடுபட்டினைக் குறிக்கும் வகையில், குறிக்கோளாளன் என்று குறிப்பிடப்படுவதை,

**“குறிகோ ளாள னறிவிகழ்ந்த தெள்ளி**

**எல்லை ஞாயி றிராவரு மெனினும்**

**பல்கதிர்த் திங்கள் பகல்படு மெனினுநின்**

**சொல்வதைத் தாயிற் சொல்லுவை நீ யென”** (1:336.178-181)

என்று பெருங்கதைக் காப்பியத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

**ஒ.கோளர்**

சோதிடரைக் ‘கோளர்’ என்று கூறுகின்ற வழக்கும் காணப்படுகிறது. கனவிலும், மன்னர், அமைச்சர் முதலிய பதினைவருடன் பகைகொள்ளக் கூடாது என்று கூறும் அறப்பளீசுர சதகம் சோதிடரைக் ‘கோளர்’ என்று கூறுவதை,

**“மன்னவர், அமைச்சர், துர்ச்சனர், கோளர் தூதறொடு**

**நன்நெறி அறிந்தபேர் பகைசெய்தி டார்கள்”** (92)

என்ற அடிகள் காட்டுகின்றன.

**முடிவுரை**

அறிவியல் அடிப்படையிலான உண்மைகளைத் தன்னுள் கொண்டு, மக்கள் வாழ்வியலைத் திறம்பட நடத்திச் சென்றதற்கான சோதிடர்களைப் பற்றி மேற்கண்ட கட்டுரை கூறுகிறது. இச்சோதிடர்கள் பல்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டதையும், ஆனால் இவர்கள் அனைவருமே சோதிடக் கலையைப் போற்றியமையும் மேற்கண்ட இலக்கியப்பாடல்களில் வழி அறியலாம்.

# புறநானூற்றில் மனிதநேயம்

***முனைவர் ச.ஆஜிராபானு,** *தமிழ் உதவிப்பேராசிரியர், E.R.K மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, எருமியாம்பட்டி, அரூர், தருமபுரி.*

மனித நேயம் என்பது மனிதருக்கு மனிதர் இருக்க வேண்டிய தொடர்புறவு பற்றிய ஒருவிதமான மனநிலை. மனித வாழ்வு எப்படி நடைபெற வேண்டும் என்பதைச் சான்றோர்கள் தங்கள் வாழ்க்கை நடைமுறைகள் மூலமே வரையறுத்துக் காட்டியுள்ளார்கள். சங்கப் புலவர்கள் தமது பாடல்களில் மனிதநேயக் கருத்துக்களை சொல்லியுள்ளனர். தமிழர் வாழ்வின் முக்கியமான கட்டம் சங்ககாலம். அந்தக் காலம் படைத்துத் தந்த இலக்கியத்தைச் ‘செகுலர் லிட்டரேச்சர்’ என்று சொல்லப்படும் சமயச் சார்பற்ற (அறிவு நெறி)இலக்கியம் என்று அறிஞர்கள் சொல்லுகிறார்கள். மனித இயல்புகளுக்கு முரணாளவைகளையோ மனித சக்திக்கு மேம்பட்டவைகளையோ முதன்மைப் படுத்தாமல் மனிதத் தளத்தையே அடிப்படையாகக் கொண்டு நடைபெறும் வாழ்க்கையைச் சித்தரிப்பது இந்த இலக்கியம் என்பது பொருள் இதன் அடிப்படையில் புறநானூற்றுப் பாடல்களில் குறிப்பிடப் பெறும் மனிதநேயக் கருத்துக்களை இக்கட்டுரை வழி காண்போம்.

**மனிதநேயம்**

பிறருக்கு உதவுதல் என்பது ஒவ்வொரு மனிதனிடமும் ஏதாவது ஒரு அளவில் இருக்கக் கூடிய இயல்பு தான். சங்க காலத்திலேயே ‘இம்மையில் ஒருவன் செய்த நன்மை மறுமையில் அவனுக்கும் பெரிய இன்பமாக வந்து விளையும்’ என்னும் நோக்கம் தலையெடுக்கத் தொடங்கிவிட்டது. இதை மறுத்து, மனிதாபிமான உணர்வு மட்டுமே உதவிக்கும் ஈகைக்கும் அடிப்படையாக அமைய வேண்டும் என்னும் வாழ்க்கை நெறியை அழுத்தமாக வலியுறுத்தியுள்ளது சங்க இலக்கியம்.

> **“எத்துணை யாயினும் ஈத்தல் நன்று என**
>
> **மறுமை நோக்கின்றோ அன்றே**
>
> **பிறர் வறுமை நோக்கின்று அவன் கைவண்மையே”** (புறம் -141)

என்று கடையெழு வள்ளல்களில் ஒருவனாகிய பெரும்பேகனை விதந்து பேசுகிறது புறநானூறு. நாம் ஒருவருக்கு ஓர் உதவி செய்தால் அதனால் நமக்கு என்ன பயன் கிடைக்கும் என்று பார்ப்பது ஒரு வகையாக நோக்கு மனித நேயத்துக்கு அத்தகைய பார்வைக்கும் எந்த தொடர்பும் இல்லை. தலைவர்கள் எனபவர்கள் மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டக வாழ வேண்டும் என்று மக்கள் கருதிய காலம் சங்க காலம். மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் என்னும் தொடரில் மன்னன் மக்களுக்கு முன்மாதிரியாக விளங்க வேண்டும் என்னும் குறிப்பும் தொனிக்கிறது. பொறுப்புணர்ந்த அந்த காரியத்தைத் தான் . இங்கே பேகன் செய்கிறான் எடுத்துச் சொல்லுகிறது இந்தப்பாட்டு,

**இன்பப் பகிர்வு**

ஆதியமானை சிறப்பிக்கும் புறநானூற்றுப் பாட்டொன்று,

**“உண்டாயின் பதம் கொடுத்து**

**இல்லாயின் உடன் உண்ணும்**

**இல்லோர் ஒக்கல் தலைவன்”** (புறம் -95)

என்று கூறுகிறது. ஒன்றுமே இல்லாத வறிய நிலையில் நம்மிடம் ஒருவன் உதவி கோரி வரும் போது எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை மேற்கண்ட பாடலில் காணலாம். பொருள் உள்ளபோதும் பொருள் இல்லாதபோதும் மனிதநேய நல்லறத்தைக் கடைப்பிடிப்பது எப்படி என்பதை ஔவையார் கூறுகிறார். அதாவது, நம்முடைய வளமையை மட்டுமல்லாமல் நம்முடைய வறுமையையும் உணர்வு பூர்வமாக மற்றவர்களோடு பகிர்ந்து கொள்வது தான் சிறந்த வாழ்க்கை நெறி என்கிறது இப்பாடல்.

**நீதி**

நீதி வழங்குவதைப் பற்றி மிகப் பொறுப்பான கருத்துக்களை வைத்திருந்தவர்கள் சங்க காலத் தமிழர்கள் வஞ்சினம் மொழிகின்ற போது கூட, தாங்கள் சொன்ன வீர வஞ்சினத்தை நிறைவேற்றாவிட்டால் நீதி மன்றங்களில் திறமை இல்லாத ஒருவனை நியமித்து அதனால் நீதியைக் குலைத்த கொடுங்கோலன் என்ற பழி தங்களுக்கு ஏற்படுவதாக என்று உறுதி மொழிகிறவர்கள் அக்காலத் தமிழ் மன்னர்கள்.

**“அறன் நிலை திரியா அன்பின் அவையத்து**

**திறன் இல் ஒருவனை நாட்டி, முறை திரிந்து**

**மெலிகோல் செய்தேன் ஆகுக”** (புறம் . 71)

என்று ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் வஞ்சினம் மொழிவதாகப் புறநானூறு பேசுகிறது. நீதியின் மேல் இவ்வளவு பெரிய ஈடுபாடு வைத்திருந்த அவர்கள், ‘அறன் நிலை திரியா அன்பின் அவையத்தில் முறைகேடு எதுவும் நடந்து விடக் கூடாது என்பதிலும் அத்தனைய முறைகேடுகளுக்கு அடிமூலமான பொய்ச்சாட்சி சொல்லுதல் என்னும் நிகழ்ச்சியே நடைபெற்று விடக் கூடாது என்பதிலும், முதன்மையான அக்கறை காட்டினார்கள்.

**பரிசில் தரும் மனிதநேயம்**

தன் தம்பியிடம் ஆட்சி உரிமையைப் பறிகொடுத்து விட்டுக் காட்டிலே வாழ்ந்து வருகிறான் குமண வள்ளல், பெருந்தலைச் சாத்தனார் என்ற புலவர் தன் வறுமையை போக்க குமணனிடம் செல்கிறார். ஆற்றாமை காரணமாகவும் வறுமைப் புயல் அவருடைய வாழ்வையே முறித்துத் தள்ளிவிட்ட அவல நிலை காரணமாகவும் குமணனிடம் தன் நிலையை வாடிய சொற்களால் வருணிக்கிறார் பெருந்தலைச் சாத்தனார்(புறம்.164).

புலவரின் வறுமையை உணர்ந்த குமணன், ‘நாட்டை இழந்த என்னுடைய துன்பம் பெரியது தான். ஆதை விட இப் புலவனின் துன்பம் மிகவுட் பெரியது. இது உடனேயே தீர்க்கப்பட வேண்டும்’ என்று எண்ணுகிறான்.

“பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தல என் நாடிழந்ததனினும் நனி இன்னாதது” என்று அவனுக்கு நினைவூட்டுகிறது குமணன் உள்ளம். இல்லாமை சூழ்ந்துள்ள இந்த நிலையிலும் இந்தப் புலவரின் இன்மையைத் தீர்க்கும் செல்வம் ஒன்று தன்னிடம் இருப்பதை உணர்கிறான் குமணன். உடனேயே தன் உடைவாளை உருவி அதைப் புலவன் கையிலே கொடுத்து, ‘என் தலையைக் கொய்து கொண்டு போய் என் தம்பியிடம் காட்டி அவன் தரும் கொருளைக் கொண்டு உன் வறுமையைப் போக்கிக் கொள்’ என்று சொல்லுகிறான். இந்த நிகழ்ச்சியை,

**"பாடுபெறு பரிசிலன் வாடினென் பெயர்தல் என்**
**நாடு இழந்ததனினும் நனி இன்னாது என**
**வாள் தந்தனனே தலை எனக்கு ஈய**
**தன்னின் சிறந்தது பிறிது ஒன்று இன்மையின்"** (புறம் -165)

என்று ஓங்கிய உவசையுடன் சித்திரிக்கிறார் பெருந்தலைச் சாத்தனார். இதில் குமணன் மனிதநேய கொடை எண்ணம் மேலிடுவதை காணலாம்.

**நெறிபடுத்தும் மனிதநேயம்**

பாண்டியன் அறிவுடை நம்பி சங்க காலத்து முடி மன்னர்களுள் ஒருவர். வரிவிதிப்பு நடவடிக்கையில் அளவு மீறிய கடுமை காட்டித் தன் குடிகளையே வருத்தி வந்தான் பாண்டியன். மன்னனின் மாண்பு மட்டுமல்லாமல் அவனுடைய செங்கோலுக்கு இன்றியமையாத தாகிய மனித நேயமும் சிதைவதைக் கண்ட பிசிராந்தையார், மன்னனிடம் சென்று அவன் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளை அவன் முன் எடுத்து வைத்தார். இதை,

**"காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே,**
**மாநிறைவு இல்லதும் பல நாட்கு ஆகும்**
**நூறுசெறு ஆயினும், தமித்துப் புக்கு உணினே**
**வாய் புகுவதனினும் கால்பெரிது கெடுக்கும்**
**அறிவுடை வேந்தன் நெறிஅறிந்து கொளினே**
**கோடி யாத்து, நாடு பெரிது நந்தும்**
**மெல்லியன் கிழவன் ஆகி, வைகலும்**
**வரிசை அறியாக் கல்லென் சுற்ற மொடு**
**பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின்**
**யானை புக்க புலம்போல**
**தானும் உண்ணான், உலகமும் கெடுமே"** (புறம்.184)

என்ற புறநானூற்றுப் பாடல் மன்னன் மனம் மாற்றும் மனிதநேய பாடலாகும்.

**போர் அறம் அகற்றும் மனிதநேயம்**

தன் எதிரியாகிய மலைய மானை வென்று அவனுடைய மக்கள் இருவரையும் சிறைப்பிடித்தான் கிள்ளிவளவன். கிள்ளீவளவனின் செயல் நோக்கம் என்னவெனில் இவ் விரு சிறுவர்களையும் யானையைக் கொண்டு இடறச் செய்வதே ஆகும். இதைக் கேள்விப்பட்ட புலவர் கோவூர்கிழார்,

**"நீயே, புறவின் அல்லல் அன்றியும், பிறவும்**
**இடுக்கண் பலவும் விடுத்தோன் மருகனை**
**இவரே, புலன் உழுது உண்மார் புன்கண் அஞ்சி**
**களிறு கண்டு அழூஉம் அழாஅல் மறந்த**
**புள்தலைச் சிறாஅர், மன்று மருண்டு நோக்கி**
**விருந்தின் புன்கணோ உடையர்**
**கேட்டனை ஆயின், நீ வேட்டது செய்ம்மே!"** (புறம் .46)

என்று கிள்ளிவளவனை நோக்கி பாடுகிறார். மூன்று நிலைகளில் அந்த மனிதநேயமற்ற செயலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறார் புலவர். முதலாவது நிலை அந்த மன்னவனுடைய

மனிதநேயம் மிக்க செயல்களைச் சுட்டுகிறது. இரண்டாவது நிலை பாதிக்கப்பட்டு நிற்கும் சிறுவர்களின் குடும்பத்தாருடைய மனித நேயச் செயல் முறைகளைச் சுட்டுகிறது. மூன்றாவது நிலை, எந்தக் காரணத்தையிட்டும் தண்டனை வழங்கப்படக் கூடாத அந்தச் சிறுவர்களின் இளமைப் பருவத்தைச் சுட்டுகிறது.

சங்க காலத் தமிழர்களும் ஒவ்வொருவர்க்குரிய கடமைகளையும் எடுத்துப் பேசியிருக்கிறார்கள் என்றாலும் அரசர்களுக்குரிய கடமையினை மிகத் தெள்ளத் தெளிவாகவே வரைந்து காட்டியுள்ளார்.

**"நெல்லும் உயிரன்றே நீரும் உயிரனமறே**
**மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்**
**அதனால்**
**யான் உயிர் என்பது அறினக**
**வேல்மிகு தானை வேந்தர்க்குக் கடனே"** (புறம் .186)

என்ற மிகப் பெரிய மனிதநேய அடிப்படையில் மன்னர்களுக்குக் கடமை விதிக்கிறது மேற் கண்ட புறநானூற்றுப் பாடல். மன்னனுடைய பாதுகாப்பிலே தான் அவனால் ஆளப்படுகிற குடிமக்கள் வாழ்வும் வளமும் அமைகின்றன என்பது இதன் பொருள்.

**மனிதநேயமற்ற செயல்**

மனிதநேயமற்ற முறையில் கொடுரமாக நடத்தப்பட்ட ஒருவன் அந்த வேதனையை வெளிப்படுத்திவிட்டுத் தன் உயிரையே விட்டு விட்ட செய்தி புறம்.74 இல் சொல்லப்படுகிறது. சேரமான் கணைக்காலிரும் பொறையைப் போரில் தோற்கடித்த சோழன் செங்கணான் அவனைச் சிறைப்படுத்தி வைத்திருந்தான். ஒரு மன்னன் என்ற தகுதியை மட்டுமல்ல, ஒரு மனிதன் என்ற தகுதியைக் கூடச் சேரமானுக்கு வழங்கவில்லை செங்கணான.

**"குழவி இறப்பினும், ஊன்தடி பிறப்பினும்**
**'ஆள் அன்று' என்று வாளின் தப்பார்**
**தொடர்ப்படு ஏமலியின் இடர்ப்படுத்து இரீஇய**
**கேள் அல் கேளிர் வேளாண் சிறுபதம்,**
**மதுகை இன்றி வயிற்றுத் தீத்தணிய**
**தாம் இரந்து உண்ணும் அளவை**
**ஈன்மறோ இவ் உலகத்தானே?"** (புறம். 74)

மேற்கண்ட பாடலில் சேரமானின் வேதனை உணர்ச்சி அவனுக்கு ஏற்பட்ட இழிவைக் குறிப்பது மட்டுமன்று. தன் இனத்துக்கும், பண்பாட்டுக்கும் ஒவ்வாத மனிதநேயமற்ற செயல் நடைபெற்றும் அதைப் பார்த்துக் கொண்டு உயிரோடு இருப்பதா என்றே அவன் ஏங்கியிருக்கிறான்.

**முடிவுரை**

மனிதநேய வாழ்க்கை முறைக்குப் பாதுகாப்பான வழிமுறைகளை இலக்கணங்களாக்கி வகுத்து அதன் படியே வாழ்ந்தார்கள் அக்கால மக்கள். வீரர்களும், வேந்தர்களும் செருக்குற்று நின்று இழுக்குற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்ட போதெல்லாம் அவர்களை நல்வழிப்படுத்தும் நோக்கிலேயே சங்கப் புலவர்கள் செயல்பட்டார்கள் என்பதை மேற்கண்ட புறநானூற்றுப் பாடல்கள் வழி உணரலாம்.